# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு – 09
குவிப்பு – 02
பக்கங்கள் – 20

விலை ரூபா 20.00

பெப்ரவரி 2006

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377


# மன்னார் மறைமாவட்ட யூபிலி விழா நிகழ்வுகள்



## இறைவனின் பெயரால் வேண்டுகோள் விடுக்கின்றோம்

# இரத்தம் சிந்துதலை நிறுத்துங்கள்!

## மன்னார் மறைமாவட்ட யூபிலி விழாவில்
## திருத்தந்தையின் பிரதிநிதி உருக்கமான வேண்டுகோள்

இறைவனின் பெயரால் வேண்டுகோள் விடுக்கின்றோம். இரத்தம் சிந்துதலை நிறுத்துங்கள், மனம்மாறி ஒப்புரவாகுங்கள் என திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மேதகு மாரியோ செனாறி ஆண்டகை உருக்கமான வேண்டுகோள் விடுத்தார். கடந்த ஜனவரி மாதம் 28ந் திகதி தோட்டவெளியில் நடைபெற்ற மன்னார் மறைமாவட்ட 25வது ஆண்டு யூபிலி விழா நிகழ்வில் கலந்துகொண்டு மறையுரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எமது தெருக்கள், எமது சமுத்திரங்கள், எமது ஆலயங்கள் மற்றும் எமது வழிபாட்டிடங்கள் யாவற்றிலும் இரத்தக்கறை படிந்துள்ளது. இந்த இரத்தம் இறைவனை நோக்கிக் கூக்குரலிடுகின்றது! இந்த இரத்தக் கறைகளைத் துடைக்க யாரால் இயலும்? இயேசுவால் மட்டுமே இயலும் என்று எமது விசுவாசம் கூறுகின்றது என்றார்.

(மறையுரையின் முழு வடிவத்தை பக்கம் 14ல் காணலாம)

## இரத்தினபுரி மறைமாவட்டத்திற்கு
## புதிய ஆயர்



இரத்தினபுரி மறை மாவட்டத்தின் புதிய ஆயராக அருட்பணியாளர் ஐவன் திலக் ஜெயசுந்தர அடிகளார் நியமிக்கப் - பட்டுள்ளார். இவர் கண்டி மறைமாவட்டத்தைச் சேர்ந்த குரு ஆவார்.
இலங்கைக்கான திருத் - தந்தையின் பிரதிநிதி அவர்கள் கடந்த ஜனவரி 20ம் திகதி வெளியிட்ட அறிவித்தலின்படி திருத் தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் இந்த நியமனத்தைச் செய்துள்ளார். இரத்தினபுரியின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள ஜெயசுந்தர அடிகளார் 1959ம் ஆண்டு நவம்பர் மாதம் 25ம் திகதி பிறந்தார்.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

## புதிய திருத்தந்தையின்
## முதல் திருமுகம்

'கடவுள் அன்பாய் இருக்கிறார்' **(Deu Caritas est)** என்ற தலைப்பில் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் தனது முதல் திருமுகத்தை வெளியிட்டுள்ளார். இதில் கிறிஸ்தவ அன்பின் தன்மையை விரிவாக ஆராய்ந்துள்ளார். இத்திருமுகத்தின் உள்ளடக்கத்தை அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்.

## வத்திக்கானில் பணிபுரியும் சுவிஸ் காவலர்களின்
## 500 வருட நிறைவு விழா



வத்திக்கானில் பணிபுரியும் சுவிஸ் காவலர்கள் தாம் வத்திக்கானுக்கு வருகை தந்த 500 வருட நிறைவைக் கொண்டாடினார்கள். வத்திக்கான் உல்லாசப் பயணிகளை அதிகம் கவர்ந்த நிகழ்வுகளில் ஒன்று சுவிஸ் காவலர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் ஆகும். இதனையொட்டி தபால் தலை வெளியீடு, நாடகங்கள், திருப்பலிகள், 450 மைல் பவனி போன்றவை இடம்பெற்றன.
சுவிஸ் காவலர்கள் உத்தியோக பூர்வமாகப் பணியை ஆரம்பித்தது ஜனவரி 22ம் நாளிலாகும். 500 வருடங்களுக்கு முன்னர் 150 சுவிஸ் காவலர்கள் பரிசுத்த தந்தை 2ம் யூலியஸ் பாப்பரசருக்குப் பாதுகாப்பு வழங்கவும், பணிபுரியவும் உரோமாபுரிக்கு வருகை தந்தனர்.
முன்னைய சுவிஸ் காவலரான றுடோல் மிரர் என்பவரால், வர்ணம் தீட்டப்பட்ட வத்திக்கான் நினைவுதினத் தபால்தலை கார்த்திகை 22ம் நாள் விற்பனைக்கு விடப்பட்டது. இது வத்திக்கான், சுவிஸ்சலாந்து முதல் தபால் தலையை அடையாளப்படுத்துகிறது.


(தொடர்ச்சி 14ம் பக்கம்)

## எட்டு மாதத்தில்
### மூன்று மில்லியன் மக்களைக் கவர்ந்து
## புதிய திருத்தந்தை சாதனை!



2005ஆம் ஆண்டில் தனது எட்டு மாத கால 32 பொது ஆசியுரையில் ஏறக்குறைய 8,10,000 மக்களை திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் கவர்ந்துள்ளார் என்று வத்திக்கான் செய்தித்துறை அறிவித்துள்ளது. ஆனால் முன்னாள் திருத்தந்தை 1978 அக்டோபரில் தேர்வுசெய்யப்பட்ட ஆண்டிலிருந்து 1979 டிசம்பர் வரை தனது 45 பொது ஆசியுரை, பொது சந்திப்பு ஆகியவற்றில் 1.5 மில்லியன் மக்களை மட்டுமே சந்தித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 2005, ஏப்ரல் 19ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்ட 16ஆம் பெனடிக்ற் திருத்தந்தை சுமார் 2,50,000 மக்களை தனது பொதுச் சந்திப்பிலும், 3,94,000 மக்களை தனது வழிபாட்டுக் கொண்டாட்டத்திலும் சந்தித்துள்ளார்.

## துறவற வாழ்வில் வெள்ளிவிழா காணும்
## அருட்சகோதரர் அகஸ்ரின்



உயிலங்குளம் பங்கு முதலைகுத்தி கிராமத்தைச் சேர்ந்த டிலாசால் சபை அருட்சகோதரர் அகஸ்ரின் அவர்கள் தனது துறவற வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளி விழாக் காண்கிறார்.
பசுமையான வயல் வெளிக் காட்சிகளும், பறவையினங்களின் பாங்கான ஓசைகளும், நீர் நிறைந்த அழகிய கமலப் பொய்கைகளும் சூழப்பெற்ற மருத நிலமாகிய முதலைகுத்திக் கிராமத்தில் 17.10.1960ல் திரு. திருமதி. எல். எம். யோசப் இசபெல்லா தம்பதியினருக்கு கனிஷ்ர மகனாக இவர் பிறந்தார்.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# மன்னா

**மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது**

## நேரம் தவறாமை!

காலம் காத்திருக்காது! இழந்த நொடி மீண்டும் கிடைக்காது! நாடு, இனம், மொழி, மதம், சாதி, நிறம் போன்ற வேறுபாடு எதுவுமின்றி மனிதர் அனைவருக்கும் ஒரே அளவாக இலவசமாக நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. இலவசமாகக் கிடைக்கின்ற இந்த நேரத்தைக் கொண்டுதான் பலர் பலவித சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

**"கடவுளுக்கு அடுத்தபடியாக நேரத்தை மதிப்பது ஒழுக்க முறையில் உயர்ந்த விதியாகும்"** என்கிறார் அறிஞர் ஸ்வேட்டர். **"உனக்கு காலத்தின் மதிப்புத் தெரியுமானால் உனக்கு வாழ்வின் மதிப்பும் தெரியும்"** என்கிறார் மற்றொரு அறிஞர். **"காலம் பொன் போன்றது"** என்கிறது இந்தியப் பழமொழி. **"ஓர் அங்குல நேரம் ஓர் அங்குலத் தங்கம்"** என்கிறது சீனப்பழமொழி.

**Punctulity** என்ற ஆங்கில வார்த்தையின் பொருள் 'காலந்தவறாமை' என்பதாகும். 'காலந்தவறாமை' என்ற இந்தப் பண்பு நமது தமிழ் சமூகத்தில் அலட்சியப்படுத்தப்படுகின்ற ஒரு பண்பாக இருப்பது வருத்தத்திற்குரியது.

நேரத்தின் அருமை தெரியாத நம்மவர் பலர் எப்போதுமே எல்லாவற்றிற்குமே பிந்தி பிந்தித்தான் வருவார்கள். விட்டுவிட முடியாமல் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒருவித பழக்க தோசம் இது. **நேரம் தவறுதல் பண்பில் குறைந்த குற்றமாகும** என்பது பல நல்ல தலைவர்களின் கூற்று. **"மூன்று மணி நேரம் முன்பு சென்றாலும் செல்லலாம். ஆனால் ஒரு நிமிடம்கூட தாமதிக்கக்கூடாது** என்கிறார் நெல்சன் என்ற அறிஞர்.

இன்று நமது பங்குச் சமூகங்களில் ஆலயத்தை மையப்படுத்திய நிகழ்வுகளுக்கு மக்கள் காலம் தாழ்த்தி வருவது வாடிக்கையாகிவிட்டது.

முழுத்திருப்பலி காணவேண்டும் என்ற திருச்சபையின் ஒழுங்குவிதி படிப்பிக்கின்றபோதும் இன்னும் நம்மில் சிலர் 'அரைப் பூசை' 'கால் பூசை'க்குத்தான் வருகின்றார்கள்.. திருப்பலிக்கும் சரி திருமணத்திருப்பலி . போன்ற அருட்சாதனக் கொண்டாட்டங்களுக்கும் சரி காலதாமதமாக வருவதால் பல சிக்கல்கள் எழுகின்றன.

சிலவேளைகளில் குருவானவரின் 'மூட்' மாறி மகிழ்ச்சியோடு நிறைவேற்ற வேண்டிய திருமணம் போன்ற அருட்சாதனங்களை முக்தை 'உம்' என்று வைத்துக்கொண்டு நிறைவேற்ற வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளாகின்றார். (ஆளாக்கப்படுகின்றார்?) பல பங்குத் திருச்சபைகளில் பங்குத் தந்தைக்கும் பங்கு மக்களுக்கும் இடையே நடைபெறும் 'பிரச்சினை'களில் அடிக்கடி எழும் பிரச்சினை பிந்திவரும் பிரச்சினைதான்.

ஆலயத்திலே அருட்பணியாளர், வழிபாடுகள், பக்திச்சபைக் கூட்டங்கள், பாடல் பயிற்சி, ஆலய நிர்வாகக் கூட்டங்கள் போன்றவற்றிற்காக நேரம் அறிவிக்கும்போது, உண்மையில் ஆரம்பமாகும் நேரத்திற்கு அரை மணித்தியாலமோ அல்லது ஒரு மணித்தியாலமோ முன்னதாகவே அறிவிக்கின்றார். காரணம், அப்படி அறிவித்தால்தான் மக்கள் அரை மணித்தியாலமோ, ஒரு மணித்தியாலமோ பிந்தி வந்தால், தொடங்குவதற்கு நேரம் சரியாக இருக்கும் என்று நினைக்கிறார். உண்மையில் இது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு நடைமுறை அல்ல. இப்படியான ஒரு நடைமுறையில் வளர்ந்துவரும் ஒரு சமூகம் எப்போதுமே காலம்தாழ்த்தி கருமமாற்றுகின்ற பின்தங்கிய சமூகமாகவே இருக்கும்.

சிலர் தாம் காலம் தாழ்த்தி வருகின்றோமே என்ற எண்ணமே இல்லாமல் இருப்பது இன்னும் வருந்தத்தக்க விடயமாகும். நாம் காலதாமதமாக வருவது மற்றவரையும் பாதிக்கும் பிரச்சினை என்பதை பலர் உணர்வதில்லை.

பிறரை காத்திருக்கும் சூழக்கு ஆளாக்கும்போது நாம் நமது நேரத்தை மட்டுமல்லாமல் பிறருடைய நேரத்தையும் வீணாக்குகிறோம் என்பதை பல சமயங்களில் உணர்வதில்லை. சமுதாயத்தில் எவ்வளவு பெரிய மனிதரானாலும் உயர்ந்த பதவியில் இருந்தாலும் பிறருடைய நேரத்தை வீணாக்க யாருக்கும் எந்த வகையிலும் உரிமை கிடையாது. அது நீதியும் அல்ல.

*"ஒரு வருடத்தின் பயனை இறுதித் தேர்வில் தோல்வியுற்ற மாணவனிடம் கேளுங்கள். ஒரு மாதத்தின் பயனை முன்கூட்டியே பிறந்த குழந்தையின் தாயிடம் கேளுங்கள். ஒரு வாரத்தின் பயனை வாரப் பத்திரிகை ஆசிரியரிடம் கேளுங்கள். ஒரு நாளின் பயனை தினக்கூலியிடம் கேளுங்கள். ஒரு மணி நேரத்தின் பயனை காதலர்களிடம் கேளுங்கள் ஒரு நிமிடத்தின் பயனை புகை வண்டியைத் தவறவிட்டவரிடம் கேளுங்கள். ஒரு வினாடியின் பயனை விபத்தில் தப்பியவரிடம் கேளுங்கள். ஒரு மில்லி வினாடியின் பயனை ஒலிம்பிக் பதக்கம் பெற்றவர் அல்லது பெறத் தவறவிட்டவரிடம் கேளுங்கள்."*

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும் வரை**
**அன்புடன் - அருட்பணியாளர் நேசன்**
**பதிப்பாசிரியர்**



# வாசகர் எண்ணங்கள்

## சாதனையின் இலக்கை நோக்கி ...

சாதனைகள் பல புரிய மன்னார் எனும் தீவில்
ஊற்றெடுத்த மன்னாவே,
உன் சாதனையின் இலக்கை நோக்கி நகர்ந்து செல்.
தேசத்தின் துணுக்குகளையும் மறையின் செய்திகளையும்
சுமையாக சுமந்து வந்தாய் உன் தோளினிலே.
காலங்கள் தாழ்கின்ற வேளையிலும்
உயர்ந்து நிற்கிறது உன் சேவை.
உலக மக்கள் உன் முகம் காண
கடல் கடந்து சென்றாய் மன்னாவாய்.
தொடர்ந்தும் உன் உதயம் காண
காத்திருக்கின்றேன் உன் வரவை நோக்கி.

*எஸ். ரி. பெனிலஸ் தற்குரூஸ், மன். தலைமன்னார்*
*பியர், அ.த.க பாடசாலை, தலைமன்னார்.*

## போட்டிகளை நடாத்துங்கள்

உனது எழிலான வளர்ச்சிகண்டு பெருமகிழ்வு கொள்கின்றேன். எனினும் எம் பங்கில் மன்னாவின் வளர்ச்சி (வாங்குவோர் நிலை) குறைவே! உனது வளர்ச்சி உயர, வளர மன்னாவிற்கு ஆக்கங்களை அனுப்புவோர் மத்தியில் போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்கலாமே? அப்போது மன்னா வாங்குவோர், வாசிப்போர், எழுதுவோர் தொகை இன்னும் வளரும். பெருகும். ஆகவே ஆவன செய்யுங்கள்.

*நன்றியுடன், திருமதி. றொ. டெய்சி, சூரியகட்டைக்காடு.*

## உனக்காக காத்திருக்கின்றேன்

மன்னாவே! நீ மாதத்தில் ஒரு முறைதான்
என் வீட்டில் மலர்கின்றாய்.
உன்னை காண மிகவும் ஆவலாய் உள்ளேன்.
உன்னில் நான் அக்கறைகொண்டு வாசிப்பதால்
பல விசயங்களை அறிந்துள்ளேன்
நீ வரும் நேரம் பார்த்து கண்ணை நொடிக்காமல்
ஆவலுடன் காத்து நிற்கின்றேன்.
மன்னாவே! வா வா விரைந்து வா.

*ம. லின்ரா, (சுமி), பாலையடிப் புதுக்குளம், வட்டக்கண்டல்*

## தொடர்ந்தும் எம்மை ஆட்கொள்வாய்


எந்நாளும் நீ தரும் அமிர்த வார்த்தை
அருமருந்தாய் பொன்னாக்கும் எம் வாழ்வை.
முன்னோர் உண்ட மன்னா நீதானப்பா
ஆன்றோர் ஆயிரம் செல்வங்கள் தந்தாலும்
சான்றோராய் எனம ஆக்குவது நீதானே!
மன்னார் மறைமாவட்டம் பெருமைகொள்ள
தொடர்ந்தும் எம்மை நீ ஆட்கொள்வாய்.
இளைஞருள்ளம் அகமகிழ்ந்து அக்களிக்க
இருளினை அகற்றி இடர் பிணி போக்குவாய்.
நீயும் இளைஞனாய் இருபத்தைந்து ஆண்டு யூபிலி காண
எல்லோரும் ஆசிக்கின்றோம்.
உலகெங்கும் நற்செய்தி பொங்கிட வாழ்த்துகின்றோம்.

*வி.அ.லெம்பேட், வின்சென்ற் வில்லா, வங்காலை – 02*

## ஒரு பூசையின் எடை

***திரு இருதய சபையை சேர்ந்த அருட்தந்தை இஸ்ரனிஸ் ரொஸ் கூறிய உண்மைச் சம்பவத்தை அருட்சகோதரி எம். வெரோணிக்கா மர்பி க்கு (M.Veronica Murphy) ஒரு மூத்த சகோதரி கூறியதன் தமிழாக்கம் :* அனுப்பியவர் - அருட்தந்தை மதுரநாயகம்**

சில வருடங்களுக்கு முன் லக்சம்பேர்க்கிலுள்ள (Luxemburg) ஒரு சிறிய பட்டணத்தில் வனப்பாதுகாப்புத் தளபதி இறைச்சிக் கடைக்காரனுடன் சம்பாசித்துக்கொண்டிருந்தார். அவ்வேளையில் ஒரு வயோதிப் பெண் கடைக்கு வந்தார். இறைச்சிக் கடைக்காரன் கதையை நிறுத்திவிட்டு என்ன வேண்டும்! என்று அந்தப் பெண்ணிடம் கேட்டார். கொஞ்ச இறைச்சி வாங்க வந்தேன். ஆனால் பணம் இல்லை. என்றார். "கொஞ்சம் இறைச்சிதான். மன்னிக்கவும் என்னிடம் பணம் இல்லை. ஆயினும் உமக்காக ஒரு பூசை ஒப்புக்கொடுப்பேன்" என்றார். இதைக் கேட்ட தளபதியும், இறைச்சிக் கடைக்காரனும் அந்த அம்மாவை ஏளனம் செய்யத் தொடங்கினார்கள். "நன்று, நீர் போய் எனக்காக ஒரு பூசை ஒப்புக்கொடுத்துவிட்டு வாரும். அப்பொழுது ஒரு பூசையின் எடையளவு இறைச்சி தருவேன்" என்றார். அந்த அம்மா கடையைவிட்டுப் போய் சில மணி நேரத்திற்குப்பின் திரும்பவும் கடைக்கு வந்தார். நன்று ஒரு கடதாசித் துண்டில் "நான் உமக்காக ஒரு பூசை ஒப்புக் கொடுத்தேன். என்று எழுதும்" என்றார். தராசின் தட்டில் அந்தத் துண்டைப் போட்டு, மறுதட்டில் ஒரு சிறிய எலும்புத்துண்டையும் போட்டார். பேப்பர் தட்டு அசையவில்லை. பின் ஒரு துண்டு இறைச்சியைப் போட்டார். அப்பொழுதும் பேப்பர் தட்டு அப்படியே நின்றது. பின் ஒரு பெரிய துண்டு இறைச்சியைப் போட்டார். அப்பொழுதும் கடதாசி போட்ட தட்டு கீழேதான் இருந்தது.



இதைக்கண்ட இறைச்சிக் கடைக்காரன் தராசை சோதித்துப் பார்த்தான். தராசில் ஒரு பிழையும் இல்லை. இதைக் கண்ட கடைக்காரன் உனக்கு ஒரு முழுத்துடை வேண்டுமா? என்று சொல்லிக்கொண்டு முழுத்துடையைப் போட்டார். அப்பொழுதும் பேப்பர் தட்டு கீழேதான் இருந்தது. இதைக் கண்ட இறைச்சிக்கடைக்காரன் அம்மாவுக்கு நாளாந்தம் தேவையான இறைச்சி தருவேன் என்று வாக்குப்பண்ணினான். தளபதியோ மனமாற்றம் அடைந்தவராய் நாட்பூசை காண்பதில் ஆர்வம் உடையவராகக் கடையைவிட்டுச் சென்றார். இவரின் இரு புதல்வர்கள் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள். ஒருவர் இயேசு சபையிலும் மற்றவர் திரு இருதய சபையிலும் சேர்ந்தார்கள்.

*இச்சம்பவத்தைக் கூறி, முடிந்த பின் நான்தான் "திரு இருதய சபையின் குருவானவர். எனது தந்தை வனபாதுகாப்பு தளபதி" என்று சொல்லி அருட்தந்தை ஸ்ரனிஸ்ரொன்ஸ் இச்சம்பவத்தை சொல்லி முடித்தார்.*

**மன்னா அபிமானிகளே,**

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக புதிய வருடத்தில் இருந்து ரூபா 1500 அறவிடப்படும்.

மன்னாவின் பக்கங்களை நாம் அதிகரிக்கின்ற போதும் மன்னாவின் விலையை அதிகரிக்கவில்லை என்பதை வாசகர்கள் அறிவீர்கள்.

எனவே இந்த மேலதிக செலவை மேற்கூறிய விளம்பரங்கள் மூலம் ஈடுசெய்ய விரும்புகின்றோம். எனவே மன்னா அபிமானிகள் எம்மோடு ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றோம்.

- மன்னா நிர்வாகம்.

**மன்னா விநியோகஸ்தர்கள் கவனத்திற்கு!**

நாம் எவ்வளவு விரைவாக மன்னாவை அச்சிட்டு பங்குகளில் உள்ள விநியோகஸ்தர்கள் கையில் கொடுத்தாலும் அவர்களில் சிலர் உரிய நேரத்தில் அவற்றை வாசகர்களுக்கு கொடுக்காமல் காலம் தாழ்த்திக் கொடுப்பதாக நாம் அறிய வருகின்றோம். எனவே தயவுசெய்து மன்னா விநியோகஸ்தர்கள் உங்கள் கைகளில் மன்னா பத்திரிகை கிடைத்ததும் அவற்றை மிக விரைவாக - கூடிய விரைவில் வாசகர்கள் கைகளில் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

**புனிதர் பொன்மொழி**

"தன்னிடம் உள்ளவற்றை தியாகம் செய்வதைவிட தன்னையே தியாகம் செய்வது கடினமானது, ஆனால் சிறப்பானது"

- புனித பெரிய கிறகோரியார் -



**புனிதர் பொன்மொழி**

"அன்பு எப்போதும் எரிந்து கொண்டிருப்பது. அது அணையாது "

- புனித அகுஸ்தினார் -

## மன்னார் மறைமாவட்ட யூபிலியில் ஏராளமான மக்கள் பங்கேற்பு

# விசுவாச வாழ்வை ஆழமாக்குவோம்!

### மன்னார் ஆயர் அழைப்பு

**25 வருடங்களை நன்றியோடு திரும்பிப்பார்க்கும் நாம் எதிர்வரும் புதிய சாகாப்தத்தில் நம்பிக்கையோடு காலடி பதிப்போம். எமது விசுவாச வாழ்வை இன்னும் ஆழமாக்கி புதுப்பித்தல் பாதையில் தொடர்ந்து நடை பயில்வோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் யூபிலி நிகழ்வின்போது அழைப்பு விடுத்தார்.**

மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுபெறுவதை முன்னிட்டு கடந்த ஜனவரி மாதம் 28ம் திகதி சனிக்கிழமை தோட்டவெளி வேதசாட்சிகள் அன்னை ஆலய வளாகத்தில் யூபிலி விழா நிகழ்வுகள் நடைபெற்றன. யூபிலி விழாத் திருப்பலியை இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி பேராயர் மாறியோ செனாறி ஆண்டகை அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். முன்னாள் மன்னார் ஆயரும், இன்றைய யாழ் ஆயருமான மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை, பதுளை ஆயர் மேதகு வின்ஸ்ரன் ஆண்டகை, அநுராதபுர ஆயர் மேதகு நோபேட் அன்ராடி ஆண்டகை மற்றும் பல்வேறு துறவற சபைகளின் மாகாண முதல்வர்கள் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், இறைமக்கள் என பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் இத்திருநிகழ்வில் பங்கேற்றனர்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## கிறிஸ்மஸ் துப்பாக்கிச்சூடு
# உரோமை அனுதாபம்

மட்டக்களப்பு மரியா இணைப்பேராலயத்தில் கிறிஸ்மஸ் நள்ளிரவு திருப்பலியின்போது இடம்பெற்ற துன்பகரமான நிகழ்வினை எமது மறைபரப்பு சபை அறிந்து திருத்தந்தையின் பிரதிநிதியான உங்களுக்கும், திருமலை மட்டுநகர் மறைமாவட்டச் சமுகத்திற்கும் எமது ஆன்மீக ரீதியான தோழமையை இந்த நெருக்கடியான சூழ்நிலையில் உறுதிப்படுத்திக்கொள்கிறோம். இவ்வாறு நற்செய்தி அறிவிப்புக்கான திருத்தந்தையின் சபை மேலாளர் கருதினால் கிறிசண்சியோ சேபே அவர்கள் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலியின்போது மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டமை நாம் அறிந்ததே.

## திருச்சிலுவைக் கன்னியர்களின் நித்திய அர்ப்பணம்

திருச்சிலுவை கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் கொன்சன்ரைன் மற்றும் சித்திரா ஆகியோர் தமது நித்திய அர்ப்பணத்தை இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி செய்தனர். யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம் கிறீஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியின்போது இவர்கள் தமது அர்ப்பணத்தை செய்தனர். யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இவ்வர்ப்பணத் திருப்பலியை நிறைவேற்றினார். திருச்சிலுவைக் கன்னியர்களின் மாகாண முதல்வர் அருட்சகோதரி வைத்திய கலாநிதி இமாக்குளேற் அவர்களும் இன்னும் பல அருட்சகோதரிகளும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## அமதி சகோதரர்களுக்கு தியாக்கோன் பட்டம்

எதிர்வரும் பெப்ரவரி 17ம் திகதி அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த ஏழு அருட்சகோதரர்களுக்கு திருத்தொண்டர் பட்டம் வழங்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் இத்திருநிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அருட்சகோதரர்கள் யேசுராஜன் (வலைப்பாடு), பிரவின் மகேசன் (பண்டத்தரிப்பு), கிறிஸ்ரி ஜோய் பெனாண்டோ (பேசாலை), றெனி பீஸ்மன் (பெரியவிளான்), பெனிக்னஸ் (மாதகல்), விஜய கமலன் அல்பிறட் (பாலையூற்று), விமல்ராஜன் (முருங்கன்) ஆகியோரே திருத்தொண்டர் பட்டம் பெறவுள்ள அருட்சகோதரர்களாவர்.

## மௌலிஸ் அடிகளாரின் தாயார் இறைபதம்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மௌலிஸ் அடிகளாரின் அன்புத் தாயார் யோசேப்பு றோசம்மா அவர்கள் கடந்த 01.01.2006 அன்று காலமானார். தமது மகனை யாழ் மறைமாவட்டத்திற்கு அர்ப்பணித்த இந்த அன்புத் தாயாரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற மன்னா அன்பு நெஞ்சங்களின் செபங்களைக் காணிக்கையாக்குகின்றோம். மௌலிஸ் அடிகளாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

### பங்குத்தள சங்கதிகள்

## தலைமன்னாரில் திருப்பாலத்துவ சபைத் தினம்

கடந்த 29.01.2006 ஞாயிற்றுக் கிழமை தலைமன்னார் பங்கில் திருப்பாலத்துவ சபைத் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பங்குத் தந்தை அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமாவும், அருட்பணியாளர் ஜெயராஜனும் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். இந்நிகழ்வில் தலைமன்னார் பங்கைச் சேர்ந்த பியர், ஸ்ரேசன் துணைப் பங்குகளும் இணைந்து மொத்தமாக 200 சிறுவர்களும், 9 ஊக்குவிப்பாளர்களும் கலந்துகொண்டார்கள். திருப்பலியில் 200 பிள்ளைகளின் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து அர்ப்பணம் செய்து காணிக்கை கொடுத்தார்கள். திருப்பலி முடிந்த பின்னர் திருப்பாலத்துவ போட்டியில் (கட்டுரை, கவிதை, சித்திரம்) பரிசு பெற்ற அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அதன் பின்னர் அந்த நாள் முழுவதும் சிறுவர்களை கோயிலில் ஒன்று கூட்டி நிகழ்ச்சிகளும், உணவுப் பகிர்தலும், விளையாட்டுக்களும் இடம்பெற்றன. பின்னர் அனைத்துச் சிறுவர்களுக்கும் அன்பளிப்பாக கொப்பி, செபமாலை, வரவணிக்கம் போன்றவை வழங்கப்பட்டன. இந்நிகழ்வானது மாலை. 5.00 மணியளவில் நிறைவுற்றது. இந்நன்நாளை அனைத்து சிறுவர்களும் மகிழ்ச்சியில் கழித்தனர்.

*தகவல்: சி. கொன்சி குரூஸ், தலைமன்னார்.*

## மன்னார் ஊடகவியலாளர் கண்டனம்

இந்த நாட்டில், அவசரகாலச் சட்டம் மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்டதில் இருந்து, ஊடகவியலாளர்கள்மீதான வன்முறைகள் அரங்கேறத் தொடங்கியுள்ளன என்பதையே திருகோணமலையில் பத்திரிகையாளர் படுகொலை வெளிப்படுத்தியுள்ளது. இது கண்டிக்கப்பட வேண்டியது.

இவ்வாறு மன்னார் ஊடகவியலாளர் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது. அதிகரித்துச் செல்லும் ஊடகவியலாளர்களின் படுகொலைப் பட்டியல் தமிழ் ஊடகவியலாளர்களின் இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது. ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்து, ஊடகவியலாளர்களின் பணிகளுக்கு உதவ சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் ஊடகத்துறையின் செயற்பாட்டை முடக்கும் வகையில், அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தக்கூடாது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

## அர்ப்பண வாழ்வின் வெள்ளி விழா



அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியர்கள் கடந்த ஜனவரி 10ஆம் திகதி தமது அர்ப்பண வாழ்வின் 25 வருட வெள்ளி விழாவினைக் கொண்டாடினார்கள். அருட்சகோதரிகளான மேரி ஜெஸ்மின் (லுணுகல கன்னியர் இல்லம்), மேரி கிளாரா கிளைவ் (பதுளை கன்னியர் இல்லம்), ஜொய்சி மாரி (அதிபர், லூட்ஸ் கன்னியர் இல்லம், கோவில் வீதி, யாழ்ப்பாணம்), மிரா பெல் (பொதுநல ஆலோசகர் - பெங்களுர்), மேரி எலைனி (லூட்ஸ் கன்னியர் இல்லம், யாழ்ப்பாணம்), ஆன் மேரி (இலங்கை மாதா கன்னியர் இல்லம், அச்சுவேலி) ஆகியோரே வெள்ளி விழாவினைக் கொண்டாடியவர்கள் ஆவர். இதேவேளை அச்சுவேலி கன்னியர் மடத்தைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி கலிஸ்ரா (அ.கா) அர்ப்பண வாழ்வின் 50ஆவது பொன்விழாவினை மகிழ்வுடன் கொண்டாடுகிறார். இவ் அருட்சகோதரிகளுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.

# செய்திகள் சில வரிகளில்

## மன்னார்த் திருச்சபை செய்திகள்



*- அடம்பன் பங்கில் கடந்த 6 வருடங்களாக குழுத் தலைவியாகப் பணியாற்றிய அருட்சகோதரி சுதர்சினி. அவர்கள் மாற்றலாகி கல்முனைப் பங்கிற்கு செல்கிறார். அவருடைய இடத்திற்கு அருட்சகோதரி செபமலர் வருகிறார்.*

*- இவ்வாண்டு புனித செபஸ்தியார் பேராலயத் திருவிழாவில் இந்தியாவில் இருந்து அருட்பணியாளர் அப்போலின் (மதுரை) அவர்கள் மறையுரைஞராகக் கலந்துகொண்டார்.*

*- மடு மறைக்கோட்டத்தில் கடந்த 3 மாதங்களாக, 36 மாணவர்கள் நடனப் பயிற்சியை பெறுகின்றனர். கலைக் காவேரியில் நடனப் பயிற்சியை முடித்து வந்திருக்கும் திருஅருட்செல்வி (தியோஜி) அவர்கள் இப்பயிற்சியை வழங்குகிறார்கள். இப்பயிற்சி விரைவில் முருங்கன் மறைக்கோட்டத்திற்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.*

*- பள்ளிமுனை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தின் 60ம் ஆண்டு நிறைவு விழா 03.02.06 இல் அமைதியாகக் கொண்டாடப்பட்டது. கடந்த 60 வருடங்களாக இறைவன் இவர்களுக்கும், இவர்கள் மூலமாக இந்தப் பங்குத் தளத்திற்கும் ஆற்றிய நலன்களுக்காகவும், நன்றி கூறியதோடு, கடந்த 60 வருடங்களிலும் இங்கு பணியாற்றிய அருட்சகோதரிகள் விசேட விதத்தில் நினைவுகூரப்பட்டனர்.*

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

*- கொழும்பு மறைமாவட்டத்திற்கென இவ்வாண்டு புதிதாக 11 குருக்கள் திருநிலைப்படுத்தப்பட்டனர். ஜனவரி 14ம் திகதி புனித லூசியா பேராலயத்தில் கொழும்புப் பேராயரின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.*


*- நுவரெலியாவில் உள்ள அன்புக் கன்னியர் இல்லம் கடந்த ஒக்ரோபர் 27ந் திகதி (2005) வைர விழாவைக் (Diomond Jubilee) விழாவைக் கொண்டாடியது.*

*- கொழும்பு, பம்பலப்பிட்டி லொறிஸ் வீதியில் உள்ள Little Flower convent என அழைக்கப்படும் யாழ் மாகாண திருக்குடும்பக் கன்னியர் இல்லம் 07.01.2006ல் தனது நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. வடமாகாணம், கிழக்கு மாகாணங்களிலிருந்து கொழும்பு செல்லும் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் யாவருக்கும் இது தேவையில் உதவிக்கரம் நீட்டி வரவேற்பது போற்றுதற்குரியது.*

*அருட்பணியாளர் அந்தோனிமுத்து அ.ம.தியும் திருச்சிலுவைக் கன்னியர்களும் இணைந்து ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் யாழ் சிறைச்சாலைக்குச் சென்று, சிறைக் கைதிகளை தரிசித்து வருகின்றனர். கைதிகளது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதோடு, உடல், உள, ஆன்மீக ரீதியாக அவர்களை அணுகி அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் பணியையும் புரிகின்றார்கள்.*

*- யாழ் கத்தோலிக்க மறைமாவட்டத்தின் சமூக மேம்பாட்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் கியூடெக் - கலிற்றாஸ் தனது பணியின் 34வது வருட நிறைவில் காலடி பதிக்கின்றது.*

## உலகத் திருச்சபைச் செய்திகள்



*- செபமாலைத்தாசர் சபையின் பொது அமர்வு (General Chapter) இந்தியாவில் பெங்களுர் கார்மேல் அகத்தில் மே மாதம் 6 - 15 வரை இடம்பெற உள்ளது. சபையின் தனிக்கொடையை (Charism) ஆய்வு செய்து அதை இன்றும் அதிகமாக வாழவும், அர்ப்பண்த்தை ஆழப்படுத்தவும் இப்பொது அமர்வு வழிவகுக்கும். புதிய நியமனங்களும் வழங்கப்படும்.*

*- மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரைக் கொலை செய்ய முயன்ற நபரை விடுதலை செய்ய நீதிமன்றம் எடுத்துள்ள முடிவை வத்திக்கான் ஏற்றுள்ளது.*

*- இவ்வாண்டு (2006) தமிழ் நாட்டில் இறைவார்த்தை ஆண்டாகத் தமிழகத் திருச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.*

*- இந்தியாவில் மதக்கலவரங்களைத் தடுக்க புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.*

*- இந்தியாவில் அசாம் மானிலத்தில் பணியாற்றிய M.S.N.C கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மெர்லிற்றா கிழக்கீல் அவர்கள் இந்த ஆண்டில் தனிப்பட்ட வகையில் சேவை செய்தோருக்கான தேசிய விருதைப் பெற்றார். ஊனமுற்றோருக்காக கடந்த பதினான்கு ஆண்டுகள் ஆற்றிய பணிகளுக்காக இந்திய குடியரசுத் தலைவர் இதனை வழங்கினார்.*

# சிறுவர் பொழிவு





## கலாவின் தலை தப்பியது

### - சிறுவர் கதை -



இந்தியாவில் ஒரு காலத்தில் கலா என்னும் ஒரு பெண் இருந்தாள். பிறர் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்று எப்பொழுதும் சிந்தித்த வண்ணம் இருந்தாள். ஒருநாள், அவள் விவேகமுள்ள வயோதிப அரசனை அணுகி, "என்னைப்பற்றி பிறர் என்ன நினைக்கிறார்களோ என்பது பற்றி குழப்பமாக இருக்கிறது. எந்த வேலையும் செய்வதற்கு அச்சமாக உள்ளது. இக் குழப்பத்திலிருந்து விடுபட அறிவுரை கூறுங்கள்" என்றாள்.

"நான் கூறுவதுபோல் செய்தால் உன்னைக் குணமாக்குவேன். விளிம்புவரை எண்ணை அடங்கிய இப்பாத்திரத்தை நகரின் வீதிகள் வழியே தூக்கிச் செல். அதன்பின் என்னிடம் வா" என்றார் அரசன். உடனே ஒரு பெரிய வாள் ஏந்திய வீரனை அழைத்து, கலாவிடம் தொடர்ந்து சொன்னார், "வழியில் ஒரு சொட்டு எண்ணை கீழே சிந்தினாலும், இவ்வீரன் அந்த இடத்திலேயே, உடனேயே உன் தலையை வெட்டிவிடுவான்". வீதிகள் வழியே, கலா பாத்திரத்தை தூக்கிச் சென்றாள். வாளை ஏந்திய வீரனும் பின் தொடர்ந்தான். கலா எண்ணைப் பாத்திரத்தைத் தூக்கி செல்வதைக் கண்ட மக்கள் ஏளனம் செய்தார்கள்.

ஒரு மணி நேரத்திற்கு பின் கலா, அரண்மனைக்குத் திரும்பி வந்தாள். ஒரு துளி எண்ணைகூட கீழே சிந்தவில்லை. அவள் தலைதப்பியது. "நீ செல்லும்போது யாரேனும் பார்க்கிறார்கள் என்று கவனித்தாயா? உன்னைப் பார்க்க மிகவும் வேடிக்கையாக இருந்திருக்குமே!" என்று அரசன் வினவினான். "இல்லை. அரசே! யாரையும் பார்க்கவும் இல்லை. எவர் சொல்லுக்கும் செவிசாய்க்கவும் இல்லை. என் கவலையெல்லாம் என்னைப் பற்றியும், வாள் ஏந்திய வீரனைப் பற்றியுமே!" என்றாள். "அப்படியானால், நீதி, நேர்மையானதை செய். பிறர் உன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றி கவலை கொள்ளாதே!" என்றார் அரசர். அன்றிலிருந்து அவள் பிறர் எண்ணுவது பற்றி கவலை கொள்வதே இல்லை. மிகவும் மகிழ்ச்சியோடிருந்தாள்.

*எனவே, நண்பர்களே நாம் நமது கடமையைச் செய்வோம். பிறர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்பது பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாதிருப்போம்.*

***ஆக்கம் : ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.***

## சிறுவர் தொடர் கதை

### புனித பதுவை அந்தோனியார்

அங்கம்-15




57. "எங்களோடு வந்து, உணவு அருந்துங்கள். அதன்பின் நாங்கள் உங்களுக்கு செவிமடுப்போம்" என்றனர். அந்தோனியார் போனவுடன், முதல் உணவுத் தட்டைத் தள்ளி வைத்து, "என்ன! நண்பர்களைப்போல நடித்து, எனக்கு விஷம் வைக்கப் பார்க்கிறீர்களா?" என்றார். வியந்த வேத விரோதிகளின் தலைவன் அலட்சியமாக, "நீர் சொன்னது சரியே, இவ்வுணவில் விஷமிடப்பட்டிருக்கிறது" என்றான்.

58. அவன் தந்திரமாக, மேலும் தொடர்ந்து : "இயேசுவின் சீடர்கள் விஷத்தை உண்டாலும் அவர்களுக்குத் தீமை ஏதும் நேராது என்று நற்செய்தியில் கூறப்பட்டிருக்கிறது அல்லவா? நீர் இதை உண்ணும். தீங்கு ஏதும் நடைபெறாவிடில் நாங்கள் எல்லோரும் கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்போம்" என்றான். "அப்படிச் செய்ய மறுத்தால்? – "நீ ஒரு பொய்யன் என்றும், நற்செய்தி ஒரு கட்டுக்கதை என்றும், காட்டுவாய்" அந்தோனியார் மிகவும் அமைதியாக, "அப்படியானால் நான் அதை உண்பேன்" என்றார்.

59. உணவின்மீது பெரிய சிலுவை அடையாளம் வரைந்துவிட்டு, அத்தட்டில் இருந்த எல்லாவற்றையும் உண்டார். விரோதிகள், அவர் விஷத்தால் நடுநடுங்குவார், வாந்தியெடுப்பார் என்றெல்லாம் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. மாறாக, அந்தோனியார் மிகவும் ஆரோக்கியத்துடனும் உணவினால் தெம்படைந்தவராகவும் காணப்பட்டார். மீண்டும் ஒருமுறை அந்தோனியார் வென்றுவிட்டார். ஆனால் அவருடைய வெற்றி, இயேசுவின் வெற்றியல்லவா?

60. 1229 இல் அந்தோனியார் பதுவை நகரில் தம் இருப்பிடத்தை அமைத்துக்கொண்டார். பல காரணங்களுக்காக இவ்வாறு செய்தார் எனலாம். மாநிலத்திலேயே மிகப் பெரிய பிரான்சிஸ் சபையாரின் மடம் ஒன்று பதுவையில் இருந்தது. அச்சபையாரின் சட்டங்களையே அனுசரித்து வரும் கன்னியர்களின் மடமும் அங்கு இருந்தது. இறுதியாக ஏராளமான மாணவர்கள் அந்நகரில் இருந்தார்கள். அவர் வாலிபர்களை மிகவும் அன்பு செய்தார். அவர்களை நல்லவர்களாகவும், தூய்மையானவர்களாகவும் நிலைத்திருக்கச் செய்ய விரும்பினார். (தொடரும்)

## கவிதைப் பூக்கள்



### அன்புக்கு நிகரேது !

வாழ்க்கையை இனிதாக ஆக்குவது அன்பு
கஷ்டங்களையெல்லாம் மீளச் செய்வது அன்பு
குடும்ப வாழ்க்கையை மேன்மைப்படுத்துவது அன்பு
உலக வாழ்க்கையை சுவைக்கச் செய்வது அன்பு
அழகற்றவர்களுக்கு அழகூட்டுவது அன்பு
அன்பு கொழிக்கும் இடம் சொர்க்கம்
அன்பு மறைந்த இடம் நரகம்
அன்புக்கு நிக்ரேது?

***பி. காமலிற்றா, மாவிலங்கேணி, முருங்கன***

### தாயே !

பத்து மாதங்கள் எனைச் சுமந்து
உதிரத்தைப் பாலாக்கி எனக்காய் வாழ்ந்து,
சுமைகளை சுகமாய் எனக்கென ஏற்று வாழும் நீ!
என்றும் வாழ்வாய் என் இதயத் தெய்வமாய்.

***எம். மரிய தீபக், (ராஜன்), தேவன்பிட்டி, வெள்ளாங்குளம்.***

### இறைவனே!

கடவுளே கண்ணீர் மல்க – உன்
திருப்பாதங்களிலிருந்து மன்றாடுகின்றோம்.
கர்த்தரே காத்தருள்வாய் இந்தக் கானகத்தை.
எம் பாவங்களை சிலுவையாக சுமந்தாய் சோதனைகளை
சவுக்கடிகளாய் ஏற்றுக்கொண்டாய்

பரலோக பிதாவே – எம்மைக் காப்பாற்றும்
யுத்தம் என்னும் சாத்தான்
எமது மண்ணிலே கால் பதியாது விரட்டியருளும்
உன்னை எண்ணியே வாழும்
நெஞ்சங்களைக் காத்தருளும் ஐயா .....

*பி.சசி, நானாட்டான்*

### அன்பு

கண்ணில் இருந்து கண்ணீர் கசிந்து
கடல் நீராகினாலும் உறுப்புக்கள் உடைந்து
உயிர் பிரிந்து உடல் எரிந்தாலும்
முள்ளில் நடந்து கல்லில் உறங்கி
கடலாய் குருதி ஓடினாலும்
உண்மையான அன்பு மட்டும் ஒருபோதும் மாறாது.

***A. அருண்சியா, கொக்குப்படையான், சிலாபத்துறை.***

### சுனாமி

கடல் தாயே ஏன் நீ பொங்கி எழுந்தாய்
கடலின் நீர் காணாமல் கண்ணீரையும் எடுத்தாயே
வாழ வேண்டிய இளம் பிஞ்சுகளின் உயிரையும் எடுத்தாயே
கடவுளே ஏன் இந்த மக்களுக்கு விடிவே இல்லையா?

***J. நிரோசா, தரம் - 08, சூசையப்பர் ஆலயம், வவுனியா.***

## கொஞ்சமாச் சிரிங்க...!







– ஐயோ! எதுக்கு அந்த தாத்தாவை கை விலங்கு போட்டு இழுத்துக்கொண்டு போறாங்க?
– கிளைமோர் தாக்குதலுக்கு அவர்தான் காரணமெண்டு சந்தேகிக்கினமாம்.





– எதுக்கு றெஜிபோம் பெட்டி நிறைய ஐஸ்கிறீம் வாங்கி வச்சிருக்கிறியள்?
– ஐஸ்கிறீம் தீரும் வரை பேசிக் கொண்டிருக்கலாம் எண்டு நீர்தானே சொன்னனீர்.



– உன்ர போய் .... பிரண்ட் மோதிரம் மாத்திறத்துக்கு தான் ரெடி என்று சொல்லுறாரே .... அப்ப எதுக்கு தயங்கிறே!
– நான் போட்டிருக்கிறது வைரக்கல் பதிச்ச மோதிரம் அவர் போட்டிருக்கிறது கவரிங்!



**ஒருவர்:** என்னது சுடு காட்டில் ஏகப்பட்ட கூட்டம்?
**மற்றவர்:** பட்டிமன்ற பேச்சாளர் இறந்துவிட்டார். அதனால் எரிப்பது நல்லதா புதைப்பது நல்லதான்னு பட்டிமன்றம் நடக்குது.

**தொண்டர்:** ஐயா நவம்பர் பதினெட்டாம் திகதியிலிருந்து ஆஸ்பத்திரியில ஏ.சி றூம் புக் பண்ணியிருக்கு!
**கட்சித் தலைவர்:** இதெல்லாம் எதுக்கு?
**தொண்டர்:** தேர்தல்ல தோத்துப் போனா நெஞ்சு வலிக்கு வைத்தியம் செய்யிறதுக்கு ஐயா!

*****************

**ஆண் :** உன்ர அப்பா, அம்மா பார்க்கிற மாப்பிள்ளையை கலியாணம் செய்ய சம்மதிச்சால் நான் தற்கொலை செய்திடுவன்.
**பெண் :** அது உங்கட இஸ்டம் .... ஆனால் செத்த பிறகு ஆவியாக வந்து கரைச்சல் தரக்கூடாது.

***ஞா. பிரவீன், ஆலங்குளம், வட்டக்கண்டல்.***

ஒருவன் தன் காதலிக்கு மடல் எழுதினான். "அன்பே! உனக்காக நான் என்ன செய்ய வேண்டும்? மணலைக் கயிறாகத் திரிக்க வேண்டுமா? வானத்தை வில்லாக வளைக்க வேண்டுமா? ஏழு கடலையும் தாண்ட வேண்டுமா? இந்த உயிரைக் கொடுத்தாலும் நீ சொல்வதை நான் செய்வேன்.

*குறிப்பு:* நாளை வெள்ளி மாலை வழக்கம்போல் பூங்காவில் உன்னையும், உன்னுடைய அப்பாவையும் சந்திக்கின்றேன். மழை பெய்து வெயில் எறிச்சால் ....!

*த. டிலைக்ஷன், சென் மேரிஷ் வீதி,அடம்பன், தரம் 09*

**கடவுள்:** பக்தா உனக்கு என்ன வரம் வேண்டும்?
**பக்தன்:** எந்த வரமும் வேண்டாம் சாமி நன்றாக சமைக்கத் தெரிந்த பெண் எனக்கு மனைவியாகக் கிடைத்தால் போதும்.

**************

**கணவன்:** எனக்கு வர வர ஞாபக மறதி அதிகம்.
**மனைவி:** நீங்க வேட்டிக்குப் பதிலா பாவாடை கட்டியிருக்கிறதுலேயே தெரியுது.

**************

**வைத்தியர்:** உங்க கணவருக்கு நல்ல ஓய்வு வேணும். இந்தாங்க தூக்க மாத்திரை.
**பெண்:** இதை எப்போ கொடுக்கணும்.
**வைத்தியர்:** இது அவருக்கில்லை உங்களுக்குத்தான்.

***இ. குயின்சிஸ்ரெலா, அடம்பொன்தாழ்வு.***



**முதல் கொசு :** போயும் போயும் அந்த ஒல்லிப்பிச்சான்கிட்டேயா ரத்தம் குடிச்சிட்டு வர்றே?
**இரண்டாவது :** "நீ வேற .... பார்த்தா பாவமா இருக்குன்னு நான்தான் அவனுக்கு ரத்தம் ஏத்திற்று வரேன்!

*****************

**பிச்சைக்காரன் :** அம்மா! என் செல்போன் நம்பரை நோட் பண்ணிக்குங்க. சாப்பாடு தயாரானதும் தெரிவிச்சீங்கன்னா உடனே வந்து வாங்கிக்கிறேன்.

*****************

**வனஜா :** வர வர எங்க பாட்டிக்கு குமரி என்னு நினைப்படி
**கிரிஜா :** ஏன்டி? ஏன் அப்படிச் சொல்றா?
**வனஜா :** இந்த வயசிலையும் தாத்தாவைப் பார்த்து, "மன்மதராசா ... மன்மதராசா கிழவி மனசக் கிள்ளாதே" என்று பாட்டுப் படிக்கிறா.

*****************





**ஆசிரியர் :** பிள்ளைகளே! நியூட்டனின் 3வது விதிப்படி ஒவ்வொரு தாக்கத்திற்கும் அதற்குச் சமனானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு.
(இரண்டு மாணவர்கள் அப்பொழுது தங்கள் தேவைகளுக்காகக் கதைத்துக் கொள்கையில் ஆசிரியர் இருவரையும் எழுப்பிவிட்டு, நான்கு அடி அடிக்கிறார். அப்பொழுது, அதில் ஒரு மாணவன் உடனடியாக ஆசிரியருக்கு நான்கு அடி அடிக்கிறான்)
**ஆசிரியர் :** டேய்! ஏன்டா என்ன அடிச்சா?
**மாணவன் :** சேர்! நீங்கதானே ஒவ்வொரு தாக்கத்திற்கும் அதற்குச் சமனானதும், எதிரானதுமான மறுதாக்கம் உண்டு என்று சொன்னீர்கள். அதுதான் இந்த அ .. டி.


***நா. ராதிகா, தரம் 11, ஆலங்குளம் , வட்டக்கண்டல்.***

# மன்னார் மறைமாவட்டத்தின் வெள்ளி விழா சிறப்பிதழ்

## யூபிலி விழா நிகழ்வில் எதிரொலித்தவை

## நீங்கள் என் சாட்சிகள் வாழ்வினில் காட்டுங்கள்

### மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை



இந்திய தேசத்திலும் நமது இலங்கைத் தீவிலும் கிறீஸ்தவம் பரவ புனித பிரான்சிஸ் சவேரியாரின் பணி காரணமாக இருந்தது. கிறிஸ்தவ சமூகங்கள் உருவாக்கப்பட்டன, ஆலயங்கள் திறக்கப்பட்டன. துறவற சபைகள் வந்தன. சமயப் பணியாளர்கள், கல்விப் பணியாளர்கள் அவர்களிடையே வந்தார்கள். இவ்விதமாக மக்கள் இவ்விடத்திலே சத்திய வேதத்தைப் பரப்பி சாட்சியம் பகர்ந்தார்கள்.

அவர்களைத் தொடர்ந்து வேதகலாபனை நடந்தாலும் ஒல்லாந்தர் காலத்தின் பிற்பாடு கோவை நகரத்தைச் சேர்ந்த குருக்கள், யோசேவ்வாஸ் முனிவர் போன்றோர் இங்கு வந்து தமது பணியை ஆரம்பித்தார்கள். இந்த மன்னார்த் தீவிலே உள்ள பங்குகளில் ஒல்லாந்தருடைய கோட்டை இருந்ததினாலே இங்கே அவர்கள் செயற்படாமல் யாழ்ப்பாணத்திற்கு சென்று தமது மறைபரப்புப் பணியை ஆற்றினார்கள்.

அதில் இருந்து கோவைக் குருமார்கள் இங்கே வந்து, அவர்கள் இங்கே மறையை வளர்த்தார்கள். குறிப்பாக *சம்மனசு சுவாமி* என்று சொல்லப்படுகின்ற வாஸ் சுவாமி அவர்கள், செனாறியோ என்று அழைக்கப்படுகின்ற கோவைக் குரு இவர்கள் மடுத்திருப்பதிக்கு வந்து மறை வளர்த்தது வரலாறு கூறுகின்ற சம்பவங்கள். அவர்கள் நமது திருமறையைக் கட்டிக்காத்தார்கள்.

அதைத் தொடர்ந்து அ.ம.தி. குருக்கள் இங்கே வந்து நம்முடைய பங்குகள் எல்லாவற்றிற்கும் புத்துயிர் கொடுத்து வளர்த்தார்கள்.

இதன் பயனாக மரியன்னையினுடைய பக்தியானது நம்முடைய இந்தத் தீவிலேயும், மன்னார்ப் பகுதியிலேயும் பரவத் தொடங்கி மக்களுடைய மனதிலே செழித்து வளர்ந்தது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு நமது மடுத்திருப்பதி. இத்திருப்பதியானது இன்றைக்கு இலங்கையில் உள்ள எல்லா மக்களுக்கும் ஒரு யாத்திரைத் தலமாக – ஒன்று கூடுகின்ற இடமாக விளங்குகின்றது.

அதிலே இருந்துதான் 1981ம் ஆண்டு யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் இருந்து 25 வருடங்களாக இந்த மறைமாவட்டமானது பல்வேறு துன்ப துயர்களுடாகப் பயணித்து விசுவாசத்தைக் கட்டிக்காத்து இன்று வளர்ந்து, மலர்ந்து இருக்கிறது. எனவே நாம் இந்த நேரத்திலே இவ்வளவு மாபெரும் காரியங்களை நினைத்து ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றோம். நினைவு கூறுகின்றோம்.


அது மாத்திரம் போதாது. ஏனென்றால் இனிவரும் காலங்கள் எப்படி இருக்குமோ என்று நமக்குச் சொல்லத் தெரியாது. சமாதானம் இன்னும் வந்தபாடாக இல்லை. இன்னும் நாங்கள் கொலைகளையும், வன்செயல்களையும் சந்தித்துக்கொண்டே இருக்கின்றோம். எனவேதான் இனிவரும் காலத்தில் இந்தத் திருச்சபையானது ஒரு நடுக்கோட்டிலே அது முன்னேற வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

இந்த நேரத்திலே இன்றைய வாசகங்கள் நமக்குச் சொல்லுகின்ற காரியங்களைக் குறித்துக் காட்ட விரும்புகின்றேன். 4 காரியங்கள் சொல்லப்படுகின்றன. 1. இறைபுகழ் கூறுவது. இறைபுகழ் கூறுவது நமது கடமையாக இருக்கிறது. இறைபுகழ் கூறுவது என்றால் என்ன? செபிக்கிற மக்களாக நாம் வாழ்வது. 2. நாங்கள் இப்படியான சவால்கள் எல்லாவற்றையும் மேற்கொள்வதற்கு இறைவனுடைய பெயரை அறிக்கையிட அழைக்கப்படுகின்றோம். 3. நீங்கள் தீமையை அல்ல நன்மையையே செய்யுங்கள் என்று சொல்லப்படுகின்றது. 4. நாம் எப்போதும் பகிர்ந்துகொள்கின்ற சமூகமாக இருப்போம். பகிர்ந்து கொடுக்கின்ற சமுகமாக நாம் மாறி அன்புறவிலே எப்பொழுதும் ஒற்றுமையாக வாழ வேண்டும். இதுதான் இன்றைக்கு நமக்குத் தரப்படுகின்ற செய்தி.

எனவே உங்களுடைய முன்னாள் ஆயர் என்ற முறையிலே இந்த யூபிலிக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதிலே மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த மறைமாவட்டமானது பல கஸ்ரங்கள், துன்பங்கள் ஊடாகப் போக நேர்ந்தாலும் ஆண்டவர் வழிநடத்தியிருக்கின்றார். இறைவனுடைய இந்த தயவுகள் எல்லாவற்றையும் நினைத்து நாம் நன்றிகூறுகின்ற வேளையிலே எதிர்வரும் காலத்திலே நாம் பிரமாணிக்கமாக இருந்து, என்றும் அவருக்கு சாட்சிகளாக வாழுவோம். நீங்கள் என் சாட்சிகள் வாழ்வினில் வாழ்ந்து காட்டுங்கள்.

## எமது இளம் குருத்துவக் குடும்பம் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றது

### குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளார்



இன்று மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 25 ஆண்டுகள் நிறைவடைகின்றது. எனவே இது ஓர் யூபிலி ஆண்டு. இதை மகிழ்வோடு நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றிகூற ஒன்றுகூடியுள்ளோம்.

இப்பெருவிழாவிற்கு வருகை தந்துள்ள மதிப்புக்குரிய ஆயர்களை மன்னார் மறைமாவட்ட ஆயர் சார்பிலும், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் அனைவர் சார்பிலும் வரவேற்று நிற்கிறேன்.

முதலாவதாக திருத்தந்தையின் இலங்கைப் பிரதிநிதி மேதகு மாரியோ செனாறி ஆண்டகை அவர்களையும், எமது அன்புக்குரிய எமது மறைமாவட்டத்தின் முதல் ஆயரும், தற்போதைய யாழ் மறைமாவட்ட ஆயருமாகிய மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களையும், பதுளை ஆயர் மேதகு வின்ஸ்ரன் ஆண்டகை அவர்களையும், அனுராதபுர ஆயர் மேதகு நோபட் அன்ராடி ஆண்டகையையும் அன்போடும் பெருமகிழ்வோடும் வரவேற்று நிற்கிறேன். உங்கள் வருகை எமக்கு மிகுந்த மகிழ்வை அளிக்கின்றது.

அடுத்ததாக வருகை தந்துள்ள பல்வேறு துறவற சபைகளின் மாகாண முதல்வர்களையும் குருக்கள் துறவியர்களையும் ஏனைய மறைமாவட்டங்களிலிருந்து வருகை தந்திருக்கும் பொதுநிலையினர் அனைவரையும் வருக வருகவென வரவேற்கிறேன்.

இன்று இத்தோட்டவெளியில் ஒன்றுகூடி நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுக்கின்றோம். இவ்விடத்தில் ஒன்றுகூடுவதன் நோக்கம், இந்த இடத்தில்தான் 450 வருடங்களுக்கு முன்பு ஏறக்குறைய 600க்கும் மேற்பட்ட மன்னார் கத்தோலிக்க மக்கள் தமது விசுவாசத்திற்காக இரத்தம் சிந்தி வேதசாட்சிகளாக மரித்தார்கள்.

அருட்தந்தை அன்ரோனைனஸ் Madhu chronicles என்ற புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "*மன்னார் கிறிஸ்தவர்கள் திருமறையை தழுவிய நிகழ்வும் அவர்களின் உயிர்த் தியாகமும் யாழ் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் என்றும் மறக்க முடியாத சம்பவங்களாகும். வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயத்தைக் கொண்டுள்ள நிகழ்வுமாகும்.*"

புனித பிரான்சிஸ்கு சவேரியார் இந்தியாவில் இருக்கும்போது இச்சம்பவம்பற்றி கேள்வியுற்றதும் பெரிதும் வேதனைப்பட்டு எழுதிய கடிதத்தில் இவ்வாறு எழுதியுள்ளார். "*மன்னார்த் தீவு இவ்விடத்திலிருந்து ஏறக்குறைய 150 மைல் தொலைவில் உள்ளது. இங்கு வாழும் குடிமக்கள் தங்களில் சிலரை என்னிடம் அனுப்பி தாங்கள் கிறிஸ்தவர்களாவதற்கு தீர்மானித்திருப்பதால் தங்களுக்கு திருமுழுக்கு அளிக்கும்படி வேண்டினார்கள். நான் ஒரு இறைபணியாளரை அவர்களுக்கு திருமுழுக்கு கொடுப்பதற்காக அனுப்பினேன். அவர் அங்கு சென்று அவர்களில் அநேகருக்கு திருமுழுக்கு கொடுத்தார். அவர்கள் கிறிஸ்தவர்களானதால் அவ்விடத்து மன்னன் அவர்களைத் துன்புறுத்தி கொடுமைப்படுத்தினான். இந்நாட்களிலும்கூட மறைசாட்சிகளுக்கு குறைவில்லை. இதற்காக ஆண்டவராகிய இறைவனுக்கு நன்றி கூறுவோம்.*"

எனவே வேதசாட்சிகளின் உயிர்த்தியாகம் இம்மறைமாவட்டத்திற்கும் மக்களுக்கும் எவ்வளவு முக்கியமானதும் இறைவனின் ஆசீரை பெற்றுத்தரும் நிகழ்வும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தற்போது எம்மை வழிநடத்தும் மதிப்புக்குரிய மேதகு ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களுடன் இணைந்து இளம் குருத்துவ குடும்பம் எமது மறைமாவட்டத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றது.

எமது ஆயருக்கும் எமது வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்து நிற்கிறேன். யாழ் மறைமாவட்டத்தில் இருந்தும், ஏனைய மறைமாவட்டத்திலிருந்தும் வருகை தந்துள்ள குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவருக்கும் எங்களுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு முன்னைய காலத்தில் எமது பகுதியில் பணியாற்றிய குருக்கள், துறவிகளையும் நன்றியோடு நினைவுகூர்ந்து மன்றாடுகின்றோம். எமது விண்ணகத் தாயாம், வேதசாட்சிகளின் அரசி எமக்காக பரிந்து பேசுவாராக.

அனைவருக்கும் யூபிலி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### மன்னார் மறைசாட்சிகளை வணக்கத்திற்கு உரியவர்கள் என்னும் நிலைக்கு உயர்த்துவது தொடர்பாக

## வத்திக்கானில் உள்ள புனிதர் பட்டம் அளிப்பதற்கான திருப்பேராயம்

## மன்னார் ஆயருக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் தமிழ் வடிவம்

**அதி வணக்கத்திற்குரிய மன்னார் ஆயர் அவர்களே,**

இலங்கை நாட்டிலுள்ள மன்னார் பகுதியில் 1544ஆம் ஆண்டில் ஏற்பட்ட மதக்கலாபனையின்போது "மன்னார் மறைசாட்சிகள்" என்று அழைக்கப்படுகின்றவர்களுக்குப் புனிதர் பட்டம் வழங்கிட தடை ஏதும் இருக்கின்றதா என்று விசாரித்து நீங்கள் 2005 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 1ம் திகதி அனுப்பிய கடிதத்தைப் பெற்றுக்கொண்டோம். அத்தோடு இவ்விடயம் தொடர்பாக அருட்தந்தை ஏ. ஜெ. பி அன்ரோனைனஸ் அவர்களால் எழுதப்பட்ட "மன்னார் மறைசாட்சிகளின் நான்கு நூற்றாண்டு நிறைவு (1544 – 1944)" என்னும் ஏட்டையும் இணைத்து அனுப்பியுள்ளீர்கள்.

இவ்விடயம் பற்றி 15. 09. 1989இல் நிகழ்ந்த எமது பேராயத்தின் சாதாரண கூட்டத்தில் வெளிவந்த கருத்துக்களை 18.09.1989இல் அனுப்பிய கடிதத்தில் அன்றைய மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்குத் தெரிவித்திருந்தோம். மீண்டும் இவ்விடயம் பற்றிச் சிந்தித்தபின் ஏற்கனவே நாங்கள் அனுப்பிய அதே முடிவையே இப்போது தங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

1983ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "கடைப் பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்குகள்" (Normae Servandae) என்னும் ஏட்டின் 14வது எண்ணுக்கு ஏற்ப வரலாறு மற்றும் தொல்பொருள் ஆய்வு ஆகிய துறைகளில் புலமை பெற்ற மூவரைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை உங்களுடைய மறைமாவட்டத்தில் உருவாக்க வேண்டுமென்று அதி வணக்கத்திற்குரிய ஆயராகிய உங்களுக்குப் பரிந்துரைக்கின்றோம். இந்த ஆணைக்குழு உறுப்பினர்கள் உங்கள் முன்னிலையில் "இந்தப் பணியை நாங்கள் நல்ல முறையில் நிறைவேற்றுவோம். அன்றியும் இது தொடர்பான இரகசியங்களைக் காப்பாற்றுவோம்" என்று சத்தியப் பிரமாணம் செய்தபின் மறைசாட்சிகளாகக் கருதப்படுகின்ற ஒவ்வொரு இறை ஊழியரின் குறிப்புகள், விபரங்கள், ஏடுகள் ஆகியவற்றைத் தேடித்திரட்டும் பணியை முன்னெடுத்துச் சென்று, உண்மையிலேயே அவர்கள் மறைக்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள் என்பதை எண்பித்துக் காட்டும் வகையில் ஆய்வு செய்ய வேண்டும். மன்னார் மறைசாட்சிகள் என்று அழைக்கப்படுகின்றவர்களை வணக்கத்திற்கு உரியவர்கள் என்னும் நிலைக்கு உயர்த்துவதற்காக நீங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளையும் ஊக்குவித்து உதவிபுரிய எமது திருப்பேராயமானது எப்பொழுதும் தயாராய் உள்ளது என்பதை உறுதிசெய்கின்றோம்.

*கிறிஸ்துவில் உண்மையுள்ள,*
*கருதினால் யோசேப் சறைவா மார்டீன்ஸ்,*
*தலைவர், புனிதர்பட்டம் அளிப்பதற்கான திருப்பேராயம்,*
*வத்திக்கான்.*


# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### ஓராண்டு நிறைவில் உறுதிமொழி சொல்லு!

கடலின் உப்பா கண்ணீரின் உப்பா அதிகம்?
உனது ஓசையா மக்களின் ஓலமா அதிகம்?
பாலகன் பிறந்து மறுநாளே – நீ
பச்சிளம் குழந்தைகளைப் பறித்துவிட்டாயே!
சுனாமியே, துன்பத்தாலே எம்மை நீராட்டி விட்டாயே,
இது உனக்கு நியாயமா?
கடலே, ஏன் துக்கத்தைத் தந்து கறுப்பாக மாறினாய்?
உனது தாகத்தை போக்க மனிதனா தேவை?
டிசம்பர் இருபத்தாறில் ........... !
பல இலட்சக்கணக்கான மக்களை பறித்து விட்டாயே!
ஓர் ஆண்டு சென்றாலும் உனது பெயர் மங்காது!
சுனாமியே, வீரமாக வந்த உனக்கு
உனது வீரியத்தைக் குறைக்க முடியவில்லையா?
நாளாந்தம் உனது பெயர் பல ஊடகங்களில்!
உன்னை நினைத்து எனது எழுதுகோலும் அழுகின்றது
பச்சிளம் பாலகர் அழுகை உனக்கு கேட்கவில்லையா?
கரையில் கோலம்போட எண்ணியா இப்படிச் செய்தாய்?
நீ போட்டது கோலம் அல்ல – அலங்கோலம்!
டிசம்பர் 26ல் நீ கறுப்பாக மாறியதன் காரணம் என்ன?
உனக்கு மனச்சாட்சியே இல்லையா?
கடலம்மா, எவ்வாறு நாங்கள் நம்புவது
நீ மீண்டும் வரமாட்டாய் என்று?
"மக்களுக்கு வளங்களையே வாரிக்கொடுப்பேன்
ஆழிப் பேரலையை அனுமதிக்க மாட்டேன்" என்று
அடித்துக் கூறு! விரைவாகக் கூறு!
ஓராண்டு நிறைவில் உறுதிமொழி சொல்லு!

*ஆ. டயாளினி, மாதிரிக்கிராமம், வங்காலை*



### கவிதையின் உயிரைக் கலைக்காதே!

காற்றே, உன் மெல்லிய சுவாசம் பட்டு
மரமங்கையின் இலைக் கூந்தல் அசைகின்றது!
உன் பெருமூச்சின் பிறப்பினால் பூமியே பயந்துகொள்கிறது!
வங்க தேசம் உன் சங்கதியை அடிக்கடி அறிந்திருந்தாலும்
அதன் சரித்திரத்தையே நீ மாற்றிவிட்டாயே!
உன் கோரப் பார்வைதான் சூறாவளியாகிறது.
உயிர்களுக்கு சுவாசப் பரிசு வழங்கிவிட்டு
உன்மீதுள்ள விசுவாசத்தை எங்கே புதைத்தாய்?
உன் ஆதிக்க வெறிகண்டு
உலகமே தன் விழிகளை நனைத்துக்கொண்டது.
உன்னை நம்பித்தான் வங்கதேச மக்களின் நாளாந்த
வாழ்க்கைப் படம் வரையப்படுகிறதோ!
துரோகம் உன்னில் சவாரி செய்வதனால்
அச்சம் எம் முகத்தில் முத்திரை குத்தியுள்ளது.

புகை என் முதுகில் அசைந்தால் காற்று
நீ இலைக் கூந்தலை நீட்டிவிட்டால் தென்றல்.
கிளைத் தோள்கள் அசைந்து முறிந்து விழுந்தால் புயல்!
மரத்தையே நீ மரியாதையின்றிச் சாய்த்தால் சூறாவளி!
உன் படிமுறை வளர்ச்சியில் இறுதிப்படியை
வங்க தேசத்திற்கு காணிக்கை அளித்தாயோ!
அந்தத் தேசம் வாசம் இழந்தது போதும்.
இனியும் அந்தத் தேசத்தின் வாசத்தைக் கற்பழிக்காதே.
அந்தக் கவிதையின் உயிரைக் கலைக்காதே!

*தே. ஜெபமலர் (ஜெர்மா), சாளம்பன்.*

## சிறுகதை

# தொலைந்த வாழ்க்கை

**ஜே. டனிஸ்ரன், ஆலங்குளம், வட்டக்கண்டல்.**



வாழ்க்கையில் ஒவ்வொரு வினாடியும் ஒருமுறைதான் வழங்கப்படுகிறது. இந்த உண்மையை ஒத்துக்கொள்ளுங்கள்.

நான் அரைக் காற்சட்டையை அறுனாக் கயிற்றில் அடிக்கடி சொருகிக்கொண்டு, ஓடி விளையாடிய சுகம், வண்ணத்துப் பூச்சியில் நூலைக்கட்டி பறக்கவிட்ட சுகம், உச்சி வெயிலில் கிட்டிப்புல் விளையாட, அப்பா விரட்ட, ஓடி விழுந்து இரத்தம் சொட்ட, அவர் கையால் மருந்து கட்டி ஆதரவாய் என்னை அணைத்த சுகம்.... அம்மா கொடுத்த ஐம்பது சதக் காசை நிமிடத்திற்கொரு தரம் தொட்டுப்பார்த்த சுகம்.... பள்ளி இடைவேளையில் சாப்பிடும்போது வந்த விக்கலை அண்ணன் ஆதரவாய் தட்டிக் கொடுத்த சுகம்.... அப்பப்பா அந்த வயதிற்கே சென்றுவிடலாம்போல் தோன்றும். இன்று இப்போது செலவாகும் ஒவ்வொரு மணித்துளியும் திரும்பக் கேட்டால் யார் தருவார்? வழியோரத்தில் நீர்த்துளிகள் மட்டும்தான் மிச்சம்.

பத்தாம் வகுப்பு படிக்கும் என் அண்ணனுக்கு எப்போதும் பிடிவாதம். அடிக்கடி கவிதையென்று எதையாவது கிறுக்குவான். அம்மா பார்த்துவிட்டால் உடனே மறைத்துவிடுவான். அப்பாவிடம் ஒரு நாள் பச்சை மட்டையால் முதுகுத் தோல் உரிய நெருப்படி வாங்கினான். "இனி வெளியே எங்கும் போகக்கூடாது" என்று அப்பா சொன்னபோது உண்மையில் எனக்கொன்றும் புரியவில்லை.

பள்ளிவிட்டு வந்தபோது, பக்கத்து வீட்டுப் பாட்டி சொன்னார், "உங்க அண்ணன் மருந்து குடித்துவிட்டான், ஆஸ்பத்திரியில் இருக்கிறான்" என்று. சில நாளில் அண்ணனுக்கு அரும்பு மீசை! திருமணம் நடந்தது. மாமனார் வீட்டுக்கு மாப்பிள்ளையானான்.

வருடங்கள் கழிந்தாலும், கன்னிப் பெண்ணைப்போல் எனக்கும் ஏகப்பட்ட கட்டுப்பாடு. அப்பாவிற்கு என்மேல் அக்கறை அதிகம். ஏனெனில் நானும் யாரையும் காதலித்துவிடக்கூடாது என்பதற்காக. பதினோராம் வகுப்புவரை ஒழுங்காகப் படித்த நான் ஒரு பெண்மேல் ஆசை வைத்தேன்.

இப்போது புரிந்தது. இதுதான் காதல் என்று. அடடா, அண்ணனிடம் கவிதை எழுதக் கற்றிருக்கலாம் என்றது மனம். எங்கள் காதல் கதை பள்ளியில் மட்டுமல்ல, ஊரிலும் அரசல் புரசலாக தொடர்கதையானது.

அம்மா அப்பாவின் காதில் ஏதோ ஓத எனக்கும் பச்சை மட்டையால் முதுகுத்தோல் உரிய நெருப்படிதான். நான்கு நாள் பட்டினி. கடைசியில் அரளி விதை கைகொடுக்க அரச ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவில் நானும். பிறகென்ன! எனக்கும் திருமணம் நடந்தது. கிரிக்கெட்டில் உலகக் கோப்பை வாங்கிய திருப்தி எனக்கு! திருமணத்திற்கு அண்ணன் கண்ணில் கருவளையங்களுடன் வந்திருந்தார். கண்ணாடி போட்டதால் வந்தது என எண்ணிக் கொண்டேன்.

நாட்கள் வருடங்களானது. நல்ல உறக்கத்தில் என் மனைவி. மணி ஏழரை ஆகிவிட்டது. கடிகாரத்தின் ஓசை கேட்டு எழுந்தேன். "தேத்தண்ணி வேணும் போட்டுத் தாவன் .. என்ன? மணி என்ன ஆகிறது.....? ஏய் ... எழும்பு" என்றேன். "என்னை எழுப்ப வேண்டாம் என்று எப்படிச் சொன்னாலும் கேட்காதா? செவிடன் காதில் ஊதிய சங்குதான்" என்றவளின் பதிலுக்கு நானும், "பேச்சு வர வர நீளுது. நீ செய்யிற வேலையெல்லாம் என்னைச் சொல்லுவா போலிருக்கே" என்றேன். "கல்யாணத்திற்குப் பிறகு உன்னை ராணி மாதிரி வைத்திருப்பேன்" என்று வாய் கிழிய பேசினீங்க. உங்க இலட்சணம் இப்பதான் தெரியுது" என்றாள். ஓங்கி அவளுடைய கன்னத்தில் ஒரு அறை விட்டேன். மீண்டும் தொடர்ந்தது எங்களுக்குள் மூன்றாம் உலகப் போர். .

*(பள்ளிப் பருவங்களைத் தொலைத்துவிட்டு, சிறு வயதிலே குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு தொலைத்த நிம்மதிகளைத் தேடிக் கொண்டிருக்கின்றேன். நான் வாழும் வாழ்க்கையின் முழு அர்த்தத்தையும் இப்போது புரிந்துகொண்டேன். அன்பு இளம் உள்ளங்களே நான் வாழ்ந்த வாழ்க்கையை நீங்களும் தொடர வேண்டாம்.)*

---

## தொடர் கட்டுரை - அங்கம் 34

### கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -



பகுதி II வியாகுல பிரசங்கம் அளிக்கப்படுகின்ற பன்முக வடிவங்கள்

# பதினான்கு நிலைகள்

தற்போது வழக்கிலுள்ள சிலுவைப்பாதையின் சில நிலைகளின் தோற்றம் பற்றிய சில குறிப்புக்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் 2ம் நிலையாகிய, கிறிஸ்து சிலுவையை ஏற்றுக்கொள்வதும், 10ஆம் நிலையாகிய கிறிஸ்துவின் ஆடைகள் களையப்படுதலும் ஆரம்ப காலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிலுவைப் பாதைச் சிந்தனைகளாகக் கொள்ளப்படுகிறன. எனினும் பிற்பட்ட காலங்களில் இவை இரண்டும் விடப்பட்டிருந்தன. "இதோ மனிதனைப் பாருங்கள்" என்னும் வளைவிலிருந்து, பிலாத்து வழங்கிய மரணத்தீர்ப்பு முக்கிய நிலைகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறாக, சிலுவைப்பாதையின் நிலைகள் ஆரம்பத்தில் வழக்கிலிருந்து பின்பு விடப்பட்டமை, இவை ஜெருசலேம் நகரிலிருந்து தோன்றியவை எனக் கொள்வதிலும் மேலாக பக்தி முயற்சிகள் பற்றிய கையேடுகளிலிருந்து தோன்றியவை என்னும் கருத்தே மிகப் பொருத்தமானதாகத் தென்படுகிறது.

கிறிஸ்து சிலுவையின்கீழ் விழுகின்ற, தற்போது வழக்கிலுள்ள நிலைகளான 3ம் நிலை, 7ம் நிலை, 9ம் நிலை என்பன Nuremberg என்னுமிடத்தில் Kraffit என்பவரால் அமைக்கப்பட்ட நிலைகளில் இருந்து எடுக்கப்பட்டவை எனக் கொள்ளுதல் பொருத்தமானது. முன்பு கூறப்பட்டுள்ள ஏழு நிலைகளும் கிறிஸ்து சிலுவையின்கீழ் விழுகின்ற பாங்கில் அல்லது விழுந்த பாங்கில் அமைக்கப்பட்டிருந்தன. மேற்குறிப்பிட்ட மூன்று நிலைகளையும் தவிர்ந்த ஏனைய நான்கு நிலைகளுக்கும் பிரதியீடாக கிறிஸ்து தமது தாயாரைச் சந்திப்பது, சீரேன் ஊர் சீமோன் கிறிஸ்துவை எதிர்கொள்வது, வெரோணிக்கா, ஜெருசலேம் பெண்கள் ஆகியோரைச் சந்திக்கும் நிலைகள் தோற்றம் பெற்றன. மத்திய காலத்து வரலாற்று ஆசிரியர்கள் சிலர் கிறிஸ்து சீரேன் ஊர் சீமோனைச் சந்திப்பதும், ஜெருசலேம் நகர்ப் பெண்களைச் சந்திப்பதும் ஒரே நிகழ்வு எனக் குறிப்பிட, வேறுபல ஆசிரியர்கள் இவற்றைத் தனித்தனி நிகழ்வுகளாகவே குறிப்பிட்டுள்ளனர். ஆரம்பகாலக் குறிப்பேடுகளில் வெரோணிக்கா பற்றிய நிகழ்வு குறிப்பிடப்படவில்லை. தற்போது வழக்கிலுள்ள சிலுவைப்பாதை நிலைகளில் வெரோணிக்கா கிறிஸ்துவை சந்திப்பது 6வது நிலையில் எனக் குறிப்பிடப்படுகின்றது. ஆரம்ப காலக் குறிப்பேடுகளில் இது கிறிஸ்து கல்வாரிக்கு ஏறுவதற்கு முன்பு இடம்பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

1799இல் வியன்னா மறைமாவட்டத்தில் வழக்கிலிருந்த 11 நிலைகள் சற்று வேறுபட்டவையாகவே காணப்படுகின்றன. அதன்படி:
1. கிறிஸ்து பூங்காவனத்தில் வேதனைப்பட்டது. 2. யூதாசினால் காட்டிக்கொடுக்கப்பட்டது.
3. கற்றூணில் கட்டி அடிக்கப்பட்டது. 4. முள்முடி தரிக்கப்பட்டது. 5. மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டது.
6. சீரேன் ஊர் சீமோனை எதிர்கொண்டது. 7. ஜெருசலேம் நகர்ப் பெண்களை எதிர்கொண்டது.
8. காடியைச் சுவைத்தது. 9. சிலுவையில் அறையப்பட்டது 10. சிலுவையில் மரணித்தது.
11. உடல் சிலுவையினின்று இறக்கப்பட்டது.
இவற்றுள் ஐந்து நிலைகளே தற்போது வழக்கிலுள்ள சிலுவைப் பாதை நிலைகளில் இடம்பெறுகின்றன.

### ஆலயங்களில் சிலுவைப்பாதை :

17 ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே ஆலயங்களில் சிலுவைப் பாதை நிலைகளை அமைக்கும் நடைமுறை பொதுமைப்படுத்தப்பட்டு, மக்கள் மயப்பட்டதாக மாறியது. இவ்வாறு மக்கள் மயப்படுத்தப்பட்டமைக்கு பாவமன்னிப்புச் சலுகை இதனுடன் இணைக்கப்பட்டிருந்தமை முக்கிய காரணங்களில் ஒன்றாகும். இந்நடைமுறையானது பிரான்சிஸ்கன் சபைக்குருமாருடன் ஆரம்பிக்கப்பட்டது. ஏனைய சபையினர் இது தொடர்பாக வழங்கிய பங்களிப்புப் பற்றி அறிய முடியாதுள்ளது. ஜெருசலேமின் புனித இடங்களைத் தரிசித்து பாவமன்னிப்புச் சலுகையைப் பெறும் வசதி பல மக்களுக்குக் கிட்டவில்லை.

இப்பின்புலத்திலேயே ஏனைய மக்களுக்கும் இச்சலுகையைப பெற்றுக்கொடுக்க பிரான்சிஸ்கன் சபையினர் திருத்தந்தையிடம் வேண்டுகோள் விடுத்தபோது, 1686இல் திருத்தந்தை 9ஆம் இனசன்ற் கீழ்க் குறிப்பிடும் நிபந்தனையைப் பூர்த்திசெய்வோருக்கு இச்சலுகையை வழங்கினார். அதாவது பிரான்சிஸ்கன் சபைத்துறவியர்களின் எல்லா ஆலயங்களிலும் சிலுவைப்பாதை நிலைகள் அமைக்கப்பட்டு, சிலுவைப்பாதைப் பக்தி முயற்சியை மேற்கொள்ளும்போது, புனித பூமியின் முக்கிய இடங்களைத் தரிசித்துப் பெற்றுக்கொள்கின்ற பாவமன்னிப்புச் சலுகையை இதன் வழியாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்பதாகும்.

இச்சலுகையானது பிரான்சிஸ்கன் சபையுடன் இணைந்திருந்த ஏனையோருக்கும் வழங்கப்பட்டது. திருத்தந்தை 12ம் இனசன்ற் 1694இல் இச்சலுகையை உறுதிப்படுத்தினார். திருத்தந்தை 13ம் பெனடிக்ற் 1726இல் இச்சலுகை பிரான்சிஸ்கன் சபையினருக்கும் அவர்களுடன் இணைந்தவர்க்கும் மட்டும் என்னும் நிலையிலிருந்து மாற்றி, இதை எல்லா ஆலயங்களுக்கும் அளித்தார். எனினும் சிலுவைப்பாதை நிலைகள் அமைக்கப்படும்போது, குறிப்பிட்ட மறைமாவட்ட ஆயரின் அனுமதியுடன் ஒரு பிரான்சிஸ்கன் சபைத் துறவியினாலேயே அமைக்கப்பட வேண்டும் என நிபந்தனை விதித்திருந்தார். இதே திருத்தந்தை சிலுவைப்பாதை நிலைகள் 14 என திட்டவட்டமாக அறிவித்தார். 1742இல் திருத்தந்தை 14ம் ஆசீர்வாதப்பர் இது திருச்சபையின் பெரும் செல்வம் எனக் கூறி, எல்லா ஆலயங்களிலும் சிலுவைப்பாதை நிலைகளை அமைக்கும்படி எல்லாக் குருமாருக்கும் ஆலோசனை வழங்கினார்.

1857இல் இங்கிலாந்தில் பிரான்சிஸ்கன் சபைக்குருமார் இல்லாத இடத்து ஆயர்களே தமது மறைமாவட்டத்திலுள்ள ஆலயங்களில் சிலுவைப்பாதை நிலைகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இவற்றிற்குப் பாவமன்னிப்புச் சலுகையும் வழங்கப்பட்டிருந்தது. 1862இல் இச்சலுகை மேலும் விரிவுபடுத்தப்பட்டு, ஆயர்கள் தமது நிர்வாகத்தில் உள்ள எல்லா ஆலயங்களிலும் தாமாகவோ அல்லது தமது பிரதிநிதிகள் மூலமாகவோ சிலுவைப்பாதை நிலைகளை நிறுவும் அதிகாரம் வழங்கப்பட்டது. புனித பூமியைத் தரிசித்துப் பெறும் பாவமன்னிப்புச் சலுகை எந்த ஆலயத்தில் சிலுவைப்பாதை பக்தி முயற்சியை நிறைவேற்றியும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. பாவமன்னிப்புச் சலுகை எத்தனை நாட்களுக்குரியது என வரையறை செய்வதை விசுவாசப் பரம்புதல் சபையின் அறிவுறுத்தல் தடை விதித்தது.

(தொடரும்)

---

## ஹைக்கூ கவிதைகள்

**காதல்**
இரு இதயங்களின்
புனித யாத்திரை

**காதல்**
மனமெனும் ஆறுகள்
சங்கமிக்கும் சமுத்திரம்

**இதயம்**
ஒருத்திக்காக கட்டப்பட்ட
நிரந்தர இல்லம்

**காதலி**
அவனுக்கு மட்டுமே
அழகிய தேவதை

**பூ**
அவளின் கூந்தலுக்காக
தவமிருக்கும் சந்நியாசி

*ம. சுதர்ஸன் லோகு, பேசாலை.*

**சிகரட்டு**
எண்ணெய் இல்லாமல்
இதழ் அடுப்பில்
எரியும் திரி

**நுரை**
வெண்மை இங்கே மட்டும்
வெறுக்கப்படுகின்றது
மூப்பின் சைகை

**நதி**
அசையும் பாதை
இசை மீட்டுகின்றது

**ஊதுபத்தி**
காற்றில் வாசம்
வேஷம் கலையும் வரைக்கும்

**பூக்கள்**
செடிகள் உமிழ்ந்துகொள்ளும்
எச்சில் வெளிச்சம்

**பேனா**
இந்தப் புல்லாங்குழல்
காகிதங்களைக் காதலிக்கின்றது

**தொழிலாளிகள்**
வியர்வை விற்கும் வியாபாரிகள்
அயர்வை இலாபமாகப்
பெறுகின்றார்கள்

**கண்கள்**
அடிக்கடி துடிக்கும்
வெளிச்ச வீடு
பிரதி எடுத்துப் பேசும்.

*தே. ஜெபமலர் (ஜெர்மா) சாளம்பன்.*

வாழ்வு தரும் வார்த்தை... வாழ்வு தரும் வார்த்தை... வாழ்வு தரும் வார்த்தை... வாழ்வு தரும் வார்த்தை...

# பாலைவனத்தினூடே ஓர் நீண்ட பயணம்

## இஸ்ராயேல் மக்களின் பாலைவனப் பயணமும் எமது வாழ்க்கைப் பயணமும்

### ஓர் ஒப்பீட்டுச் சிந்தனை

அருட்சகோதரி. சுஜாந்தினி

எத்தனை தடவைகள் படித்தாலும், அத்தனை தடவைகளும் எம் அறிவைத் தெளிவாக்குவதும், புதிய புதிய படிப்பினைகளைத் தருவதுமான ஒரே ஒரு நூல் 'பரிசுத்த வேதாகமம்' ஆகும். இறைவனின் உயிருள்ள வார்த்தைகள் பொறிக்கப்பட்ட ஏடு இது. இந்தத் தூய ஏட்டை நாம் படிக்கும்போது, எம் விசுவாசக் கண்கள் புத்தொளி பெறுகின்றன. எம் வாழ்க்கை அர்த்தம் பெறுகின்றது.

**எண்ணிக்கை நூல் 21: 4–9**

இதன் அடிப்படையில் இன்று எண்ணிக்கை நூல் 21: 4-9ன் ஊடாக இறைவன் எம்முடன் பேசுவதைச் சிந்திப்போம். *(தயவுசெய்து இவ் இறைவார்த்தையை முழுமையாக வாசியுங்கள்)* இப்பகுதி இஸ்ராயேல் மக்களின் பாலைவன வாழ்க்கையை எடுத்துச் சொல்லுகிறது. இது நாம் அனைவரும் அறிந்ததொன்று. தம் வாழ்க்கையில் பொறுமை இழந்த இஸ்ராயேல் மக்கள் மோசேக்கும், கடவுளுக்கும் எதிராகப் பேசினார்கள். *"இந்தப் பாலைவனத்தில் மாளும்படி எங்களை எகிப்திலிருந்து கொண்டு வந்தது ஏன்?"* என வினா எழுப்பினார்கள். தாம் எகிப்திலே உண்டு குடித்து, சந்தோஷமாக வாழ்ந்த வாழ்க்கையை அணு அணுவாக எடுத்துரைத்தனர். ஆனால் தாம் வாழ்ந்த அடிமை நிலையிலிருந்து - கொடுமை நிலையிலிருந்து, செழிப்பான புதிய வாழ்வை வழங்குவதற்கு இறைவன் அவர்களை அழைத்துச் செல்கின்றார் என்பதை மறந்து உணவுக்கும், பானத்திற்கும் போராடினார்கள்.

**உலகியல் தேவைகளையே முதன்மைப் படுத்துகின்றோம்**

மனிதனாப் பிறந்த எம்மிடையே உள்ள மிகப்பெரிய குறை இது. அதாவது, உலகம் தரும் சந்தோஷம் நிறைவுதர வல்லது, எம் உடலை வளர்த்து, இயலுமானவரை இந்தப் பாவ உலகில், நீண்ட காலம் வாழ்வதே முக்கியம் என நினைக்கின்றோம். ஆனால் இதன் மூலம் உலகிற்கும், அதன் பொருட்களுக்கும் அடிமையாகி இருப்பதை நாம் சிந்திப்பதில்லை.

நாம் நினைப்பதையோ, விரும்புவதையோ அடையாவிடத்து, துன்பமும், துயரமும் எம் வாழ்வில் அதிகரிக்குமிடத்து எவ்வளவு பொறுமை இழந்து இறைவனையும், அயலானையும் வார்த்தைகளாலும், செயல்களாலும் தீண்ட முனைகின்றோம். இதைத்தான் அன்று இஸ்ராயேல் மக்களும் செய்தனர்.

'புதிய இஸ்ராயேல், இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள்' என புகழ் சேர்க்க நாமும் உலக சந்தோஷத்தை அனுபவிக்க




விரும்புகின்றோம். ஆனால், அது எவ்வளவிற்கு எம்மை அடிமைப்படுத்துகிறது, தன்வசம் இழுக்கிறது என்பதை உணர மறுக்கின்றோம். ஏன் இந்தத் துன்பம் என்று ஒதுங்கி ஓடுகிறோம். இறைவனிடம் பல கேள்விகளை எழுப்புகின்றோம். ஆனால் சிலுவையின் வழியாகவே எமக்கு மீட்பு உண்டு என்பதை உணர மறுக்கின்றோம்.

**வேண்டுதல் கேட்கப்பட்டது**

அன்பானவர்களே! சற்று சிந்தியுங்கள்! இறைவன் நம்மை சாகடிக்கவா அல்லது வாழ்வளிக்கவா அழைக்கின்றார்?

மீண்டும் எண்ணிக்கை நூல் தொடர்ந்து கூறுகிறது, *"இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் பாம்புகளால் கடியுற்றனர். பலர் இறந்து போயினர்.* ஆகவே மக்கள் மோசேயிடம் சென்று தாம் செய்த குற்றத்தை உணர்ந்து, முறையிட்டு இத்துன்பத்தை தம்மிலிருந்து நீக்கும்படி இறைவனிடம் மன்றாடும்படி இரங்கினார்கள்.

பாம்புகளை தங்கள் மத்தியிலிருந்து அகற்றிவிடும்படி வேண்டினார்கள். இவர்களின் துன்பத்தை கண்ட மோசே, இறைவனிடம் வேண்டினார். இறைவனும் மோசேயின் மன்றாட்டை கேட்டருளினார். மோயீசனின் வேண்டுதலை செவிசாய்த்த இறைவன் இதற்காக இஸ்ராயேலை சாகடித்த பாம்புகளை முற்றுமுழுதாக அழித்துவிடவில்லை. மாறாக வெண்கல பாம்பு ஒன்றைச் செய்து, இதை ஒரு கம்பத்தில் பொருத்தும்படியும், அதைப் பார்க்கும் ஒவ்வொருவரும் உயிர் பிழைப்பார்கள் எனவும் கூறினார்.

**இன்றைய நச்சுப் பாம்புகள் எவை?**

அன்பானவர்களே! இன்று எம் வாழ்வில் பாம்புகளாகக் கருதப்படுபவை எவை? எம்மை இறைவனிடமிருந்தும், அயலவரிடமிருந்தும் எவையெல்லாம் பிரிக்கின்றனவோ, அவைகளே கொடிய நச்சுப் பாம்புகளாக எம் வாழ்விலே நுழைந்து, எம்மைக் கொல்லுகின்றன.

எம் உலக சுகபோகங்கள், ஆசாபாசங்கள், தான்தோன்றியாக வாழும் நிலை, தன்னலம் கொண்டு செருக்குறும் நிலை, பணத்திற்கும், பதவிக்கும் பின்னால் அலைமோதும் நிலை, பிறரைக் குறை கூறுவதும், பழிவாங்குவதும், குற்றம் சுமத்துவதுமான வாழ்க்கை முறை, இறை விசுவாசத்தில் தளர்ந்து உலகில் நம்பிக்கை கொள்ளும் நிலை, இவ்வாறாக பற் பல வடிவங்களிலும், வகைகளிலும் கொடிய நச்சுப் பாம்புகள் எம் வாழ்வில் ஊடுருவுவதை உணரலாம்.

**நச்சுப் பாம்புகளை ஆண்டவர் அழிக்கவில்லை**

பாலைவனமான இந்த உலகில் வாழும் நம்மை இந்தக் கொடிய பாம்புகள் சூழ்ந்துள்ளன. நம்மைத் தீண்டி நாளும் பொழுதும் கொல்லுகின்றன. ஆனால் இவை எம்மை விட்டு என்றுமே அகலப்போவதில்லை. *பாம்புகளை எம்மிடமிருந்து அகற்றிவிடும* என புலம்பினார்கள். ஆனால் இறைவன் **அவற்றை அழித்துவிட்டாரென எண்ணிக்கை நூல் கூறவில்லை.** மாறாக மேலுமொரு வெண்கலப் பாம்பை உருவாக்கி, அவர்களிடையே கொண்டுவரும்படி ஆணையிடுகிறார். இதுதான் இறைவனின் பாதை.

பாலைவனப் பயணிகளான நாம் இதேபோன்றே சவால்களை எம்மிடையே இருந்து அகற்றிவிடும்படி வேண்டுவதில், அர்த்தமில்லை. ஆனால், இத்துன்பங்களினூடாக, சோதனைகளினூடாக, அடிமைத்தளைகளினூடாக, எமது பலவீனத்தினூடாக எம் பயணத்தை மேற்கொள்ள, அதைத் தொடர தேவையான மனவுறுதியை, பலத்தை, சக்தியை வேண்டி நிற்பதே இறைவனுக்கு உகந்த செயல்.

இறைவல்லமை எம்மீது உள்ளது என்ற நம்பிக்கையுடன், எம்மை அழைத்த தெய்வம் எம்முன் பயணம் தொடர்கிறார் என்ற விசுவாசத்தில் தளர்ச்சி கொள்ளாது, பாதை தொடர்வோம். எம் பயணத்தின் குறிக்கோளைத் தவறவிடாது, பாலைவன பயணமே வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு எம்மை அழைத்துச் செல்லும் என்ற உறுதி உள்ளத்துடன் பயணம் தொடர்வோம்.

---

## உலகில் தீமைகள் மலிவதற்கு என்ன காரணம்?

# ஓர் வாழ்வியல் கண்ணோட்டம்

கி. அருளப்பு,
தன்னார்வப் பணியாளர், விடத்தல்தீவு

*மனிதம் மலர்ந்திட வேண்டும். மனித மாண்புகள் உயர்ந்திட வேண்டும். இறைவனின் சாயலே மனிதம்... மனிதம்....* என்று எம் கிறீஸ்தவப் பாடலொன்றின் வரிகளை நாம் கேட்டிருக்கின்றோம்.

இறை சாயல் என்றால் என்ன?

அது அவருடைய அன்பு, இரக்கம், மன்னிப்பு, உண்மை, நீதி இப்படிப் பல பண்புகளைக் கொண்ட சாயல். இறைவனே இப்பண்புகளை நிறைவாகப் பெற்றுள்ளார். மனிதர்களாகிய நாம் மிகக் குறைவாகப் பெற்றுள்ளோம். இதை நிறைவாகப் பெறுவதுதான் மனித வாழ்வுப் பயணத்தின் நோக்கம். நாம் நிறைவாக இருப்பதுபோல் அவர்களும் நிறைவாக இருக்க வேண்டும் என்று இயேசு தன் தந்தையிடம் நமக்காக வேண்டுவதை நாம் பார்க்கிறோம்.

அது மாத்திரமல்ல. இராப்போசன வேளையிலே, *"நான் உங்களுக்கு அமைதியை விட்டுச் செல்கிறேன். அந்த அமைதியிலே நீங்கள் நிலைத்திருங்கள்"* என்று தம் சீடருக்குக் கூறுகிறார். *நான் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அன்று.* என்றும் கூறுகிறார். அந்த அமைதி என்ன? இதை விபரிக்க ஒரு சிறிய உருவகக் கதை ஒன்றை உங்கள் முன் வைக்கின்றேன்.

ஒரு பொதுநிலைப் போதகர் ஒருவர் முகச்சவரம் செய்வதற்காக சலூனுக்குச் சென்றார். அங்கே ஏற்கனவே ஒரு சிலர் அதற்காகக் காத்திருந்தனர். இவரும் அந்த வரிசைக் கிரமத்திலே அமர்ந்திருந்தார்.

அச்சலூன்காரர் ஒரு நாத்திகர். கடவுள் நம்பிக்கை இல்லாதவர். சலூன்காரர் தங்களுடைய கடமைகளைச் செய்யும்போது, ஏதாவது ஒரு சம்பாசனையை அங்கிருப்பவர்களோடு, பகிர்ந்துகொண்டு செய்வதை நாம் கண்கூடாகக் காணலாம்.


அன்றும், இப்போதகரோடு, விவாதிக்க எண்ணி, "பிறதர் நீங்கள் ஒரு கிறிஸ்தவரா?" என்று கேட்டார். அதற்கு அவர், ஊம் என்று சைகை செய்தார். "அப்படியென்றால், நீங்கள் கிறீஸ்து அன்புள்ளவர், இரக்கமுள்ளவர், நீதி உள்ளவர், உண்மை உள்ளவர், இவ்வுலகிற்கு சமாதானத்தைக் கொண்டுவந்தவர் என்று ஆயிரக் கணக்கான மக்கள் மத்தியிலும், ஆலயங்களிலும், பொது இடங்களிலும் பிரச்சாரம் பண்ணுகிறீர்கள். ஆனால் இந்த நாட்டிலே எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போதைவஸ்து கடத்தல், அடாவடித்தனங்கள், நாட்டுக்கு நாடு போர், யுத்த அனர்த்தங்கள் என்று பத்திரிகைகளில் பார்க்கிறோம்.

> "நீங்கள் கிறீஸ்து இவ்வுலகிற்கு சமாதானத்தைக் கொண்டு வந்தவர் என்று பிரச்சாரம் பண்ணுகிறீர்கள். ஆனால் இந்த நாட்டிலே எங்கு பார்த்தாலும் தீமைகள் மலிந்துள்ளன. நீங்கள் போதித்து பிரச்சாரம் பண்ணுவதையும் நாட்டில் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதையும் பார்த்தால், உங்களுக்கு வெட்கமாக இல்லையா?" என்று கேட்டார்.

வானொலி, தொலைக்காட்சிகளில் இன்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி நீங்கள் போதித்துப் பிரச்சாரம் பண்ணுவதற்கும், இப்படி நாட்டில் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதையும் பார்த்தால், உங்களுக்கு வெட்கமாக இல்லையா?" என்று கேட்டார். "நாட்டிலே இப்படி நடக்கிறது.... நீங்கள் அப்படிப் பேசுவதையிட்டு, நினைத்துப் பார்த்தால் உங்களுக்கு வெட்கம் வாறதில்லையா?" என்று மீண்டும் கேட்டார்.

போதகர் சற்று மௌனமாக இருந்துவிட்டு, "தம்பி இப்படி வாரும்" என்று சைகை காட்டினார். அங்கே சாலையோரத்தில் ஒரு மனிதன் வந்துகொண்டிருந்தான். அவன் தலைமுடி அலங்கோலமாக வளர்த்து, தாடி, மீசை ஒன்றோடு ஒட்டி சின்னாபின்னமாக்கப்பட்டு ஒரு காட்டுவாசிபோல வந்துகொண்டிருந்தான். அவனைக் காண்பித்து, "இந்த நாட்டிலே எத்தனை சலூன்கள் இருக்கின்றன. எத்தனையோ சலூன்காரர்கள் இருக்கிறார்கள். அப்படி இருந்தும், இந்த மனிதன் இப்படி அலங்கோலாமாய் வாறதைப் பார்த்தால், உங்களுக்கு வெட்கமாய் இல்லையா?" என்று கேட்டார் போதகர். அதற்குச் சலூன்காரர் "நாங்கள் ஏன் அதற்கு வெட்கப்பட வேணும்! அவன் எங்களிடம் வந்தால் நாங்கள் அவன் விரும்புகின்றவாறு, இக்காலத்திற்கேற்ப நவீன முறையில் அவனை அழகுபடுத்திவிடுவோம். அவன் எங்களிடம் வராதபட்சத்தில் நாங்கள் ஏன் அவனை நிர்ப்பந்திக்க வேண்டும்? வற்புறுத்த வேண்டும்!" என்று சொன்னார் சலூன்காரர்

உடனே போதகர், "இப்படித்தான் கிறீஸ்து இந்த உலகத்துக்கு வரும்போது, விண்ணரசின் மதிப்பீடுகளான அன்பு, நீதி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய விழுமியங்களை நட்டு வைத்தார். ஆனால் நாம் அன்றும், இன்றும் அதை ஏற்க மறுத்ததினால் நம் ஒவ்வொருவருக்கும் இந்நிலை ஏற்பட்டது. அந்த மனிதன் உன்னிடம் வரும்போதுதான், நீ இதைச் செய்ய முடியுமென்றால், கிறிஸ்து கொண்டு வந்த



அந்த உண்மையான பண்புகளை எம் ஒவ்வொருவரின் உள்ளத்தில், தாங்கி வாழும்போதுதான், மெய்யான சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்."

இன்று நாட்டுக்கு நாடு சமாதான உடன்படிக்கைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், காலகதியில், அவை முறிந்துவிடுகின்றன. காரணம் அந்தந்த நாடுகளுக்கிடையிலான அரசியலமைப்புச் சட்ட திட்டங்களும் அதை விட்டுக்கொடுத்து ஏற்றுக்கொள்ள மறுப்பதனாலும் அன்பில்லாத தன்மையினாலும் சீர்குலைகிறது.

சமாதானம் என்பது எங்கேயோ ஒரு நாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் பொருள் அல்ல. அது ஒவ்வொரு மனிதனின் உள்ளங்களிலும் மலர வேண்டிய ஒன்று. ஒருவன் தன்னிலும், தன் குடும்பத்திலும் அதிலிருந்து சமூகத்திலும், அதன்பின் நாட்டிலும் அதை மலர்விக்க வேண்டும். ஆண்டவரே, *"இலவசமாய் பெற்றுக்கொண்டீர்கள். இலவசமாய் கொடுங்கள்"* என்றார். எதை இலவசமாகப் பெற்றுக்கொண்டோம்? அவரது அன்பு, இரக்கம், உண்மை, நீதி ஆகிய சாயலையும், பாவனையையும் பெற்றுக்கொண்டோம். எனவே மனிதம் மலர, மனித மாண்புகள் உயர இறை சாயலைத் தாங்கி, சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள முயலுவோம்.

*"அமைதி கொடுப்பபோர் பேறுபெற்றோர்" என்று,*
*அன்பு மகன் சொன்னார். - இங்கு*
*ஆண்டவன் பெற்ற பிள்ளைகளெல்லாம்,*
*அவர்கள் தான் என்றார்.*
*தம்மையும் வாட்டி, பிறரையும் வாட்டும்*
*சண்டை சச்சரவு, தினம் தன் நாடென்றும்,*
*பிற நாடென்றும் பேசும் பொய்யுறவு,*
*இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி,*
*எத்தனை வீண் கனவு - இனி*
*இவையில்லாது அமைதிகள் செய்தால்,*
*இதயம் மலையளவு"*

என்று இயேசு பெருமான் கூறுகின்றார். அவர் ஒருவரே எம் உத்தம குரு. அவர் சொல்வதைக் கேட்டு, அவர் வழிநடந்து, அவர் சகோதரர்களாக மாறும்போது, புதுயுகம், புதுவாழ்வு, புது உறவு, புது மனிதம் பிறக்கும்.

# மறைக்கல்வி நிலையச் செய்தி மடல்

மன்னார் — மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகள் — Mannar

## இளைஞர் மறைக்கல்வி அறிமுகக் கருத்தமர்வு



*இளைஞர் மறைக்கல்வி அறிமுகக் கருத்தமர்வில் ஆசிரிய ஆலோசகர் திருமதி. பெப்பி விக்ரர் அவர்கள் உரை நிகழ்த்துகின்றார்.*

இளைஞர் மறைக்கல்வியை ஆரம்பிக்கும் முயற்சிக்கு பங்குத்தந்தையர்களுக்கு உதவுமுகமாக, இளைஞருக்கு இம்மறைக்கல்வியைக் கற்றுக்கொடுக்க இருக்கும் மறை ஆசிரியர்களை ஒன்றிணைத்து ***இளைஞர் மறைக்கல்வி அறிமுகக் கருத்தமர்வை*** மறைக்கல்வி நிலையம் நடாத்தியது. இக்கருத்தமர்வு மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் ஜனவரி 28ந் திகதி சனி மாலை 5.00 மணி தொடக்கம் 29ந் திகதி ஞாயிறு மதியம் 1.00 மணிவரை நடைபெற்றது.

இக்கருத்தமர்வில் அமல உற்பவ மாதா கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி றெஜினா அவர்கள் *மாணவர் மனநிலை மற்றும் அணுகுமுறைகள்* பற்றி உரை நிகழ்த்தினார். அதைத்தொடர்ந்து ***கல்லுக்குள் சிற்பம்*** என்ற குறுந்திரைப்படத்தை காண்பித்து வளர்ந்த மாணவர்களை அணுகும் முறையினை அவர் விளக்கிக் காட்டினார்.

மற்றும் *மறைக்கல்வியின் நோக்கம் - இலட்சியம்* குறித்து நிரந்தர மறையாசிரியர் திரு. மரியசெல்வம் அவர்களின் உரையும், *மாணவர்களின் உளநெருக்கீடுகளும் தீர்வுகளும்* என்ற தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் திருமதி. பெப்பி விக்ரர் அவர்களின் உரையும், *மறைக்கல்வி கற்பித்தலின் அணுகுமுறைகள்* பற்றி கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி. பயஸ் ரதி பீரிஸ் அவர்களின் உரையும், *இளைஞர் மறைக்கல்வி பாட அறிமுகம்* பற்றி அருட்சகோதரி பெனிக்னஸ் அவர்களின் உரையும் இக்கருத்தமர்வில் இடம்பெற்றன. இன்னும் குழுக் கலந்துரையாடல்களும், பல்வேறு அனுபவப் பகிர்வுகளும், ஆலோசனைகளும் இடம்பெற்றன. இதில் 37 பேர் பங்கேற்றுப் பயன் அடைந்தனர்.

### கருத்தரங்கில் பங்கெடுத்தோரின் எண்ணிக்கை

| பங்கு | தொகை |
|---|---|
| 1. மன்னார் | - 7 |
| 2. விடத்தல்தீவு | - 6 |
| 3. தலைமன்னார் | - 4 |
| 4. ஆட்காட்டிவெளி | - 4 |
| 5. முள்ளிக்குளம் | - 3 |
| 6. வஞ்சியன்குளம் | - 3 |
| 7. பண்டிவிரிச்சான் | - 3 |
| 8. அளவக்கை | - 2 |
| 9. கற்கிடந்த குளம் | - 2 |
| 10. தாழ்வுபாடு | - 2 |
| 11. ஓமந்தை | - 1 |
| மொத்தம் | - 37 |

இக்கருத்தமர்வில் மேலே உள்ள பங்குகளைத் தவிர ஏனைய பங்குகளில் இருந்து எவரும் கலந்துகொள்ள -வில்லை என்பதை வருத்தத் - தோடு தெரிவிக்கின்றோம்.
- மறைக்கல்வி இயக்குனர்

## தன்னார்வப் பணியாளர்களின் பணிக்கள செயற்பாடுகள் ~ ஓர் பார்வை

**1. பங்கு – கற்கிடந்த குளம் - 2006 ஜனவரி 13 - 15**

கற்கிடந்தகுளப் பங்குத் தந்தை அருட்பணியாளர் டெஸ்மன் குலாசின் அழைப்பின் பேரில், 12 தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்கள் கடந்த **ஜனவரி 13 - 15ந் திகதிகளில்** (வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்) கற்கிடந்த குளம் பங்கிற்குச் சென்று தமது பணிகளை மேற்கொண்டனர். இப்பங்கு 11 அன்பியங்களைக் கொண்டுள்ளது. அதில் 9 அன்பியங்களிலுள்ள 128 குடும்பங்களை பணியாளர்கள் சந்தித்து, குடும்ப நிலவரங்கள் பற்றி கேட்டு அறிந்ததோடு, இறைவார்த்தையின் அடிப்படையில் பிரச்சினைகளுக்கு தீர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, குடும்ப செபம், இறைவார்த்தை வாசித்தல், ஞாயிறு திருப்பலியின் முக்கியத்துவம் ஆகியன பற்றி உணர்த்தப்பட்டன. இதன் பயனாக பல வருடங்களாக ஞாயிறு திருப்பலிக்குச் செல்லாமல் இருந்தவர்கள் சிலர், இனங்காணப்பட்டு ஆன்மீக அறிவுரை, ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன். இவர்களில் சிலர் ஞாயிறு திருப்பலிக்கு வருகை தந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. மறைக்கல்வி இயக்குனர் நேசன் அடிகளார் ஞாயிறு திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

**2. பங்கு : உயிலங்குளம் - முதலைகுத்தி கிராமம் - 2006 பெப்ரவரி 3 – 5**

பங்குத்தந்தை அருட்பணியாளர் வசந்தகுமாரின் அழைப்பின்பேரில், 10 தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்கள் கடந்த **பெப்ரவரி 3 - 5ந் திகதிகளில்** (வெள்ளி சனி ஞாயிறு தினங்களில்) உயிலங்குளப் பங்கின் முதலைகுத்தி கிராமத்திற்குச் சென்று தமது பணிகளை மேற்கொண்டனர். பணியாளர்களை 4 குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிலும் ஒரு அருட்சகோதரர் கலந்துகொண்டு இக்கிராமத்திலுள்ள 45 குடும்பங்களையும் தரிசித்தனர். ஒவ்வொரு குடும்பங்களிலும், நீண்ட நேரத்தைச் செலவழித்து குடும்பங்களுக்காகச் செபித்தமை ஒரு புதிய அனுபவமாக அமைந்திருந்தது. மேலும் 2 மணி நேர மனமாற்ற வழிபாட்டில் முழுமையாக மக்கள் அனைவரும் (பெருந்தொகையான ஆண்களும்) பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. இவ்வழிபாட்டை அமல உற்பவ மாதா சபையைச் சேர்ந்த அருட்சகோதரி தியோனி அவர்கள் நெறிப்படுத்தினார். பின்னர் பங்குத்தந்தையோடு இடம்பெற்ற கலந்துரையாடலில் பணியாளர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். மறைக்கல்வி இயக்குனர் நேசன் அடிகளார் உயிலங்குளத்தில் ஞாயிறு திருப்பலியை ஒப்புக்கொடுத்து தன்னார்வப் பணியாளர்களின் பணியை அறிமுகம் செய்து வைத்ததோடு புதிய பணியாளர்களை இதில் சேர்ந்துகொள்ளும்படி ஊக்குவித்தார்.

**தகவல் : திரு. செபஸ்ரியாம்பிள்ளை, தன்னார்வப் பணி இணைப்பாளர்.**



*உயிலங்குளத்தில் பணிக்குச் சென்ற தன்னார்வப் பணியாளர்கள் பணி முடிவில் தமது இருப்பிடங்களுக்குப் புறப்பட ஆயத்தமாக நின்றபோது.*

## இளைஞர் மறைக்கல்வி அறிமுகக் கருத்தமர்வில் பங்கெடுத்தோரின் அனுபவங்கள்

- இக்கருத்தமர்வு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இளைஞர்கள் மத்தியில் நாம் எப்படியான அணுகுமுறைகளை கையாள வேண்டும் என்பதையும் அவர்களுடைய பருவநிலையின் தன்மைகளையும் இக்கருத்தரங்கின் வாயிலாக அறிந்துகொண்டேன். பாட ஆயத்தத்தின் முக்கியத்துவம் என்ன என்பதையும் நன்கு புரிந்துகொண்டேன்.

*அ. சுமைத்திரா, கற்கிடந்தகுளம், முருங்கன்.*

- இருநாட்கள் நடந்த இந்தக் கருத்தமர்வின்போது பல அனுபவங்களை நான் பெற்றுக்கொண்டேன். சிறப்பாக, மாணவர்களோடு எவ்வாறு அணுகிச் சென்று, அவர்களுக்கு கற்பிப்பது என்றும், பல்வேறு மனநிலை, சூழ்நிலை, அழுத்தங்கள், இன்னும் பல பிரச்சனைகளோடு வகுப்புக்கு வரும் அவர்களை எவ்வாறு அணுகவேண்டும் போன்ற பல புதிய அனுபவங்களை நான் பெற்றுக்கொண்டேன். அத்தோடு பழைய அணுகுமுறைகள், அவர்களை வழிநடத்திய விதங்கள் சில வேளைகளில் தவறாகவும் அமைந்திருந்தன என்பதை உணர்ந்தேன். அவற்றையும் இனம்கண்டு மாற்றிக்கொள்வதற்கு இக்கருத்தமர்வு சிறந்த வழியாக எனக்கு அமைந்திருந்தது. இன்னும், இதேபோன்ற நிகழ்வுகளை அனைத்து மறையாசிரியர்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில், தனிப்பட்ட வகையில் பங்குகளிலும் நடாத்தினால் நன்றாக இருக்கும்.

*அருட்சகோதரி வசந்தி, தலைமன்னார்.*

- இக்கருத்தமர்வானது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மேலும் இந்நிகழ்வின் மூலம் எமது மாணவர்களுடனான சந்திப்பு எப்படி இருக்க வேண்டும், மற்றும் எவ்வாறு அவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டும், அவர்களை எவ்வாறு இந்த மறைவாழ்வுக் கல்விக்குள் உள்வாங்குவது தொடர்பான வழிமுறைகள் கிடைக்கப்பெற்றன.

மேலும், இவ்வாறான பல கருத்தரங்குகள் நடாத்தப்பட வேண்டும். அவ்வாறு நடாத்துவதன் மூலம் எமது மாணவர்களுக்கும் ஏனைய இக்கருத்தரங்கில் பங்குகொள்ளாத ஆசிரியர்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதை கூறிக் கொள்கின்றேன். *அ. றூபா றெவல், முள்ளிக்குளம்.*

- இன்றைய காலகட்டத்தில் மாணவர்களின் இயல்பு என்ன என்பதை இக்கருத்தரங்கின் மூலம் தெளிவாக அறிய முடிந்தது. அவநம்பிக்கை, கவலை, எதிர்மறை உணர்வு, ஒழுங்கற்ற வாழ்வு, முரண்பாடுகள் கொண்ட பேச்சு இவற்றிலிருந்து மாணவர்களை எவ்விதம் சீர்ப்படுத்துவது என்பதனை உணர முடிந்தது. மறை அறிவை ஆழப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு மட்டும் செயல்படாமல், மாணவர்களின் இயல்பு நிலையை ஏற்றுக்கொண்டு, சரியான வழிகாட்டுதலோடு அவர்களைப் பக்குவப்படுத்த முயற்சிக்க வேண்டும் என்ற தெளிவு கிடைத்தது. அத்துடன் மாணவரின் உள நெருக்கீடும், தீர்வும் என்ற உரையில் புதிய கருத்துக்களைப் பெற்றுக்கொண்டேன்.

*அருட்சகோதரி J றோசலிற்பாய், மன்னார்.*

நான் கற்பிக்கும் தரம் 6ம், 7ம் தரம்தான். ஆனாலும், எங்கள் பங்கில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் எங்கள் பங்குத்தந்தை கேட்டதற்கு இணங்க இக்கருத்தரங்கில் பங்கெடுத்தேன். இதை நான் பெரும் அழைப்பாகக் கருதுகின்றேன். இன்றைய நாளில் பெற்ற அனுபவங்கள் வாயிலாக எத்தனையோ தெரியாத பல விசயங்களைத் தெரிந்துகொண்டேன். உளவியல் ரீதியான பல காரியங்களைக் கற்றுக்கொண்டேன். பாட ஆயத்தம் செய்து கற்பிப்பது மிகவும் பயனுள்ளது என்பதைப் புரிந்துகொண்டேன். இதிலே ஆசிரியராகிய நாங்களும் கற்றுக்கொள்ளலாம். விடயங்களை ஆயத்தம் செய்வதன் மூலம் மாணவர்களுக்கும் நல்லமுறையில் கற்பிக்கலாம்.

*சீ. லக்சலா, வஞ்சியன்குளம்.*

இது ஒரு அருமையான ஏற்பாடும், சிறந்த வாய்ப்பும் ஆகும். நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட கட்டமைப்புக்குள் படிப்படியாக வழங்கப்பட்டமை பாராட்டுக்குரியது. இளைஞர்களின் (வளரும் பருவத்தினரின்) பண்பு நலன்களை, இந்த வயதில் அவர்களின் உணர்வுகளை, அவர்களிடத்தில் ஏற்படும் மாற்றங்களை உணர்ந்து ஒரு மறையாசிரியர் எவ்வாறு கற்பிக்க வேண்டும், அதற்கு தன்னையும், பாடத்திட்டத்தையும் எவ்வாறு தயாரிக்க வேண்டும் என்று வழங்கப்பட்ட கருத்துக்கள் சிறப்பானவை.

*அருட்சகோதரி. அனித்தா, அளவக்கை.*

### மன்னார் மறைமாவட்ட யூபிலி .....

3ம் பக்கத் தொடர்ச்சி

திருப்பலியின் நிறைவில் மன்னார் ஆயர் அவர்கள் மன்னார் வேதசாட்சிகளை வணக்கத்திற்கு உரிய நிலைக்கு உயர்த்துவது தொடர்பான ஆரம்ப முயற்சிகள் பற்றி விளக்கமளித்தார். இது தொடர்பாக உரோமையில் உள்ள புனிதர் பட்டமளிக்கும் பேராயத்திடமிருந்து வந்த கடிதத்தின் தமிழ் வடிவத்தை அருட்பணியாளர் எஸ். கே. தேவறாஜா அடிகளார் வாசித்தார். (இக்கடிதத்தின் முழு வடிவத்தை பக்கம் 5ல் காணலாம்)
அக்கடிதத்தில் கேட்கப்பட்டதற்கு இணங்க வரலாறு மற்றும் தொல்பொருள் ஆய்வு ஆகிய துறைகளில் புலமை பெற்ற மூவரைக்கொண்ட ஆணைக்குழுவில் இடம்பெறும் அருட்பணியாளர்களின் பெயர்களை ஆயர் அறிவித்தார். மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் அருட்பிரகாசம், யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் மங்கள றாஜா, அருட்பணியாளர் பிலேந்திரன் ஆகியோரே இந்த ஆணைக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

நிகழ்வின் இறுதியில் நன்றியுரையை மன்னார் பிரதேச செயலாளர் திருமதி. ஸ்ரான்லி டிமெல் அவர்கள் வழங்கினார்.

இறுதியாக அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு மதிய போசன விருந்து வழங்கப்பட்டது.

### திருச்சிலுவைக் கன்னியர்களின் .......

3ம் பக்கத் தொடர்ச்சி


கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி கொன்சன்ரைன் அவர்களும், பலாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி சித்திரா அவர்களும் 1993ம் ஆண்டு யாழ் திருச்சிலுவைக் கன்னியர் இல்லத்தில் தமது துறவற வாழ்வுக்கான பயிற்சியை ஆரம்பித்தனர். 2000ஆம் ஆண்டு மடுத்திருப்பதியில் தமது முதல் அர்ப்பணத்தை மேற்கொண்டனர்.

அருட்சகோதரி கொன்சன்ரைன் தற்போது தாழ்வுபாடு கன்னியர் இல்லத்தில் இருந்து பங்குப்பணியோடு கல்விப்பணியிலும் தன்னை ஈடுபடுத்தியிருக்கின்றார். அருட்சகோதரி சித்திரா தற்போது யாழ் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்விப்பணி புரிகின்றார்.

நித்தியத்திற்கும் தம்மை அர்ப்பணிக்கும் இவ்விரு அருட்சகோதரிகளும் இறையன்பில் என்றும் மகிழ்ந்து பணியாற்ற மன்னா அன்பு நெஞ்சங்களின் செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

# புனித நிலைக்கு உயர்த்து எடுக்கும் முயற்சிகள்

அருட்பணியாளர் ம. க. அருள்பிரகாசம்.



கத்தோலிக்க திருச்சபையிலே ஒருவரைப் புனிதராக அங்கீகரிப்பதற்கு முன், மூன்று படிநிலைகள் பின்பற்றப்படுவதைக் காணலாம். முதலாவது ஆசாரத்துக்குரியவராக நியமித்தல். இரண்டாவது முத்திப்பேறு பட்டம் வழங்குதல், (அதாவது பொதுப்புனிதராக உயர்த்தப்படுமுன் அளிக்கப்படும் பட்டம்) மூன்றாவதுதான் புனிதர் என்று பிரகடனம் செய்வதாகும். ஒவ்வொரு படிநிலைகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது, ஒருவரை அல்லது ஒருகுழுவினரை புனிதராக்கும் நிலைபற்றிய தெளிவு எமக்கு ஏற்படும்.

## ஆசாரத்துக்குரிய நிலை (Veneration)

ஒருவர் அல்லது ஒரு குழுவினருடைய வாழ்வு தூய்மையான வாழ்வாக, புதுமைகள், வரங்கள் சுமந்தவர்களாக, விசுவாச மறைசாட்சிய மேற்கொண்டவர்களாக, ஒரு சமூகத்தில் கிறிஸ்தவ விழுமியங்களின்படி வாழ்ந்தவர்களாக காணும் பட்சத்தில் அவரை அல்லது அவர்களை ஆசாரத்துக்குரியவராக அல்லது ஆசாரத்துக்குரியவர்களாக பிரகடனம் செய்ய முடியும்.

ஒரு குறிப்பிட்ட மறைமாவட்ட ஆயர் அல்லது ஒரு நாட்டின் ஆயர்மன்றம் ஒரு கத்தோலிக்க விசுவாசிய அல்லது விசுவாசிகளை வணக்கத்துக்குரியவர்களாக பிரகடனம் செய்ய முடியும். ஒருவரை ஆசாரத்துக்குரியவர் என அங்கீகரிப்பதற்கு திருத்தந்தையின் சட்டரீதியான அங்கீகாரம் கிடைக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அந்தந்த மறைமாவட்ட ஆயர்களே அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வுசெய்து இந்த ஆசார நிலைக்கு அங்கீகாரம் வழங்க முடியும்.

எமது "மன்னார் மறைசாட்சிகளை" இந்நிலைக்கு உயர்த்துவதற்கு பல வருடங்களாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆகவே எமது 'மன்னார் மறைசாட்சிகள்' வணக்கத்துக்குரியவர்கள் என அங்கீகரிப்பதற்கு திருத்தந்தையின் அதிகாரபூர்வமான அனுமதி கட்டாயம் இருக்க வேண்டிய அவசியமில்லை. எமது ஆயரே இந்நிலைக்கு இவர்களை உயர்த்த முழு அதிகாரமும் கொண்டவராக உள்ளார்.

## முத்திப்பேறு நிலைக்கான வரலாற்றுக் காரணம் (Historical Reason For Beatification)

வரலாற்று ரீதியாக பார்க்கின்றபோது, மறைசாட்சிகளை வணக்கத்திற்குரியவர்களாக, மதிப்புக்குரியவர்களாக பிரகடனம் செய்வது புனித நிலைக்கு உயர்த்துவதற்கான ஆரம்ப நிலையாக அமைகிறது. அதாவது ஒவ்வொரு நாட்டிலும் மறைசாட்சிகளை வந்தனை செய்தல், அவர்களது கல்லறைகளில் திருப்பலிப் பீடங்கள் அமைத்துப் பலி ஒப்புக்கொடுத்தல், உயிரையும் துச்சமென மதித்து இயேசுவின் சாட்சிகளாக இறந்ததை அடிக்கடி நினைவு கூருதல் போன்றவை முத்திப்பேறு பெறும் நிலைக்கு உயர்த்துவதற்கு அடிஅத்திவாரங்களாக அமைகின்றன. தொடக்ககாலத் திருச்சபையில் பல வேதசாட்சிகளை புனிதர்களாக எண்ணி, அந்தந்த மறைமாவட்டங்களில் ஆசாரம் செய்தனர். அந்தந்த நாட்டு மறைசாட்சிகளை, அந்தந்த நாட்டு ஆயர்களின் அனுமதியுடன் இறைமக்கள் வணக்கமும் ஆசாரமும் செலுத்தி வந்தனர்.

இப்படியான புனிதர்கள் வணக்கத்தை, பரிந்துரைக்காக செபிக்கும் முறையை ஆயர் தமது மறைமாவட்டத்திலே கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது. அதாவது தமது கட்டுப்பாட்டிற்குள்ளே நிலைநிறுத்தக் கூடியதாக இருந்தது. அப்படி இருந்தபோதிலும் சில வேதசாட்சிகளை வேறு மறைமாவட்டத்திலும் வணக்கம் செலுத்தும், ஆசாரம் செய்யும் நிலை பரவியது. இந்தப் பிரச்சனையைத் தீர்க்கும் முகமாகத்தான் திருத்தந்தை இவ்விடயத்தில் தலையிட நேர்ந்தது. இதுவே முத்திப்பேறுபெறும் பட்டம் வழங்குவதற்கான முக்கிய வரலாற்றுக் காரணமாக அமைகின்றது.

## முத்திப்பேறு பட்டத்தின் பிரிவுகள்

முத்திப்பேறு பெறும் நிலையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று சமநிலை முத்திப்பேறு பெறும் பட்டம் (Equivalant Beatification) இரண்டாவது, ஒழுங்கு முறைக்குரிய முத்திப்பேறு பட்டம் (Formal Beatification). ஒருவரை வெளிப்படையாக அல்லது சட்டரீதியாக அங்கீகரிக்காமல் மறைமுகமாக அல்லது குறிப்பிட்ட மறைமாவட்ட எல்லைக்குள் ஆசாரம் செய்ய, வழிபட செய்யும் முறையை *சமநிலை முத்திப்பேறு பட்டம்* என அழைக்கப்படுகிறது. பல வரலாற்று ஆய்வுகளின்பின், ஒருவரை புனித நிலைக்கு உயர்த்தலாம் என்று சட்ட ரீதியாகவும், வெளிப்படையாகவும் திருத்தந்தை அங்கீகரிப்பதை ஒழுங்கு முறைக்குரிய முத்திப்பேறு பட்டம் என அழைக்கப்படுகிறது.

## முத்திப்பேறு பட்டத்தின் முன்முயற்சிகள்

ஒருவரை அல்லது ஒரு குழுவினரை முத்திப்பேறு பெற்றவர்கள் என பிரகடனப்படுத்துமுன் மிக நீண்ட கஷ்டமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. திருத்தந்தை இதற்கென ஒரு விசேட குழுவை நியமிப்பார். இந்த விசேட குழுவே முத்திப்பேறு பட்டத்திற்கான சகல விடயங்களையும், வரலாற்றுச் சான்றுகளையும், சாட்சிகளின் ஆதாரத்துடன் மிக நுணுக்கமாக ஆராயும்.

இக்குழுவானது இந்த நபரின் வாழ்க்கை வரலாறு, அவர் பற்றிய பலருடைய சாட்சியங்கள், அவர் ஆற்றிய புதுமைகள் போன்றவற்றை மிக ஆழமாக ஆராய்ந்து அறிக்கைகள் தயாரிக்கும். அவர் ஆற்றிய புதுமையை சட்ட ரீதியாக அங்கிகரிக்க அனேக ஆய்வுகள் நீண்டகாலமாக மேற்கொள்ளப்படும். ஒரு நிகழ்வை புதுமை என நிறுவுவது மிகவும் கஷ்டமான செயலாகும். இவ்வாறு பல முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பிற்பாடே முத்திப்பேறு நிலைக்கு ஒருவரை உயர்த்த முடியும்.

இவ்வாறு உயர்த்தப்படுவதால் அந்த நபர் அந்த நாட்டிலோ, அல்லது அவர் பிறந்த நாட்டிலோ, அல்லது அவர் பணி செய்த நாடுகளில் மாத்திரம் ஆலயங்கள் அமைத்து வழிபாடுகள் நடாத்தக்கூடிய, வணக்கம் செலுத்தக்கூடிய நிலையை அடைகிறார்.

## பொதுப் புனிதராதல் (Universal Saint)

முத்திப்பேறு நிலை அடையும் ஒருவர் குறிப்பிட்ட எல்லைக்குள்ளே, குறிப்பிட்ட நாடுகளுக்குள்ளே வணக்கம் செலுத்தப்படுபவராக இருக்கின்றார். அவரைப் பொதுப் புனிதராக அங்கீகரிப்பதற்கு அதாவது உலக மக்கள் அனைவரும் வணங்கும் ஒருவராக பிரகடனப்படுத்துவதற்கு அந்நபர் இன்னுமொரு புதுமை செய்தவராக இருக்க வேண்டும். பொதுப்புனிதராக உயர்த்துவதற்கும் பல வரலாற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். புனித நிலைக்கு உயர்த்தப்படுவதால் அவர் எமக்காகப் பரிந்து பேசுகிறார் என்பதை திருச்சபை சட்டரீதியாக அங்கீகரிப்பதாக அமைகிறது.

எனவே எமது மன்னார் வேதசாட்சிகள், தம்மை விசுவாச சத்தியத்திற்காக அர்ப்பணித்து 461 வருடங்கள் முடிவடைந்துவிட்டன. நாமும் இம்மறைசாட்சிகளின் சீர்களாகி, ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோம்.

# முத்துக்கடற்கரையில் மன்னார் மறைசாட்சிகள்

சென்ற மாதத் தொடர்ச்சி........

திரு. எஸ். அந்தோனிப்பிச்சை M.A, M.Phil.

## முத்துக் குளித்த இடங்கள் :

இலங்கையில் தலைமன்னார் அருகே, காரைதீவு, முத்தரிப்பு, முந்தல் போன்ற இடங்களில் முத்து, சங்கு குளித்தனர். ஜேம்ஸ் காா்ஸ்ளின் முத்துவளம் பற்றிய அறிக்கையில், முத்துக் கடற்கரை மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. தென்பார் - (கன்னியாகுமரி முதல், மணப்பாடு வரையுள்ள பகுதி.) 2. மத்தியபார் - ( மணப்பாடு முதல், வேம்பார் வரையுள்ள பகுதி.) 3. வடபார் - ( வேம்பார் முதல், இராமேஸ்வரம் ஊடாக மன்னார் வரையுள்ள பகுதி)

இதில் மத்தியபார் நல்ல முத்துக்கள் உள்ள பகுதியாகும். இதில் கடையர், பட்டங்கட்டியர் இனமக்களுக்கு, a) கடையன் பார் b) கணவாய் பார் c) புற்றுபார் எனக் கூறுகிறார். அதே போல் முத்து மற்றும் சங்குளி பற்றிய ஆய்வு நூல்கள் பலவற்றில் இவர்களைப் பற்றி எழுதியுள்ளனர்.

### சாயவேர் :

சங்கிலி மன்னனை போர்த்துக்கேயர் சாயமன்னன் என அழைத்தனர். இவர், வெளிநாடுகளுக்கு சாயம் ஏற்றுமதி செய்து வந்தார். முதலியார் ஊ. இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாண சரித்திரம் என்ற நூலில், மன்னார் சாயவேர் பற்றி எழுதியுள்ளார். மன்னார் கடையர் பட்டங்கட்டியர் சாயவேர் இரண்டாவது இடத்தைப் பெற்றதாகக் கூறுகிறார். மன்னார் மக்கள் சாயவேர் தொழிலை விட்டுவிட முன்வந்தபோது, சங்கிலி மன்னன் அதைத் தடுத்து நிறுத்தினான் எனவும் கூறுகிறார். இவர்கள் சாயவேர் தொழிலை செய்வதற்கு அடையாளமாக இராமேஸ்வரத்தில் 'வேர்காடு' என்ற ஊரும், மன்னாரில் 'சாயக்காரத் தெரு' (எழுத்தூர்) என்ற ஊரும் உள்ளது குறிப்பிடத் தகுந்ததாகும்.

## 5. மன்னார் கிறிஸ்தவ தொடக்கம் – மறைசாட்சிகளின் மாபெரும் தியாகம் (MASS MARTYRDOM)

வேதாளையில் இஸ்லாமியரை போர்த்துக்கேயர் வீழ்த்தியதும் அங்கு சிறு கலகம் எழுப்பினர். அருகிலிருந்த கடையர், பட்டங்கட்டிய மீனவருக்கு கிறிஸ்துவை அறிவித்தனர். இவர்கள் மன்னார் மக்களின் உறவினர்கள். அன்றைய அரசியல் சூழலில் அடிக்கடி அங்கு சென்று வருவது வழக்கமாக இருந்தது. தொழில் ரீதியாகவும், இணைந்து தொழில் செய்தனர். ஆகவே கி.பி.1538 முதல் மன்னார் கிறிஸ்துவை அறிந்துகொள்ள வாய்ப்பிருந்தது. சங்கிலியின் எதிர்ப்பு இருந்ததால், மன்னார் மக்களுக்கு கி.பி.1543ல் புனித சவேரியார் ஞானஸ்நானம் கொடுக்க முடியவில்லை. ஆகவே தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார். வாய்ப்புக் கிடைத்ததும், தன் பெயர் கொண்ட இந்தியக் குருவை மன்னார் தீவிற்கு ஞானஸ்நானம் கொடுக்க அனுப்பினார்.

G. ஸ்கார்மான் மற்றும், J. விக்கி எழுதிய "புனித சவேரியாரின் கடிதங்கள்" (Epistolae S.Francisi Xaverii) பாகம் - 1, பக்கம் 200 & 274 என்ற நூல் இப்படிக் கூறுகிறது. "மன்னாரில் சில கடையர் பட்டங்கட்டி கிராமங்கள் இருந்தன. இதில் முதல் பகுதியாக 1000பேர் ஞானஸ்நானம் எடுத்துள்ளனர். இது பட்டி என்ற இடத்தில் சவேரியரால் அனுப்பப்பட்ட இந்தியக் குருவால் வழங்கப்பட்டது" இதை வண. வனம்டியஸ் பெர்னாண்டோ தனது உரோமை Missiology ஆய்வு நூலில் எடுத்து எழுதியுள்ளார். இந்த ஞானஸ்நானம் 1544 ஆவணி நடந்ததாக கூறுகின்றனர். (பட்டி என்பது தோட்டவெளி எனப் பொருள் கொள்ளவும்)

### *மறைசாட்சிகளின் மாபெரும் தியாகம் (Mass Martyrdom)*

திருக்கேதீஸ்வரக் குருக்கள் - இந்த மக்களின் மதமாற்றத்தால் தங்கள் உழைப்பு பாதிக்கப்பட்டது என அறிந்து, சங்கிலி மன்னனிடம் பொய்யான முறையீடு செய்ய சங்கிலி 5000 நாயக்கர் படையுடன் மன்னார் வந்து, புதுக்கிறிஸ்தவர்களை கொன்று குவித்தான். இதில் 600க்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இது 1544 - மார்கழியில் நடந்ததாக நம்பப்படுகிறது.

### *இது ஒரு இனப் படுகொலை :*

தமிழர் வரலாற்றில் பல இனப்படுகொலைகள் நடந்துள்ளது. மதத்தால், தமிழன் தன் இனத்தையே அழித்துள்ளான். சமணர்களாய் இருந்த தமிழரை சைவக் குருக்கள் - பாண்டிய மன்னர்கள் காலத்தில் போட்டிக்கு அழைத்து, அதில் தமிழ் சமணர் தோற்கவே 18000 பேரை ஒரே நேரத்தில் கொன்று குவித்தனர். அதற்கான ஆதாரம் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ளது.

இதைப்போல் மன்னாரில் கிறிஸ்தவம் தழுவிய கடையர், பட்டங்கட்டியர் சைவமதத்தைச் சேர்ந்த சங்கிலி மன்னனால், கொன்று குவிக்கப்பட்டனர். மறைசாட்சிகள் எந்த வாழ்வை விரும்பினர். புகழ் வாழ்வையா? அல்லது செல்வ வாழ்வையா? அல்லது அறிவு வாழ்வையா? அல்லது வீரவாழ்வையா? ஆம் வீரத்துடன் கூடிய தியாக வாழ்வை விரும்பினர் என்றால் அது மிகையாகாது.

### *படுகொலைக்குப் பின் :*

படுகொலைக்குப் பின் மன்னார் தீவில் சங்கிலியன் சார்பில் 5000 தஞ்சாவூர் நாயக்கர் படை இருந்தது. ஆகவே மீதியிருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் உறவினர் வாழ்ந்த பகுதிகளுக்குச் சென்று, தஞ்சம் புகுந்தனர். இதில் மாந்தையில் கொஞ்சப் பேரும், வேதாளையில் கொஞ்சப் பேரும், தஞ்சம் புகுந்தனர்.

வேதாளைக்குப் போன குடும்பங்களில் 3 குடும்பம் தமிழ்நாட்டில் ஓரியூர் அருகே காரங்காடு என்னுமிடத்தில் குடியேறினர். இது கிறிஸ்தவத்தில் வளர்ந்த கிராமமாக இப்பொழுது திகழ்கிறது என Catholic University of Louvain ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

முனைவர் புலவர் செ. இராசு எழுதிய 'கச்சதீவு' எனும் நூலில், "காரங்காட்டு மீனவர்கள் புயலில் அந்தோனியார் தங்களை பாதுகாத்ததிற்காக 90 ஆண்டுகளுக்கு முன் கச்சதீவில் அந்தோனியாருக்கு கோவில் கட்டினர்" எனக் கூறுகிறார்.

இயேசு சபையின் தலைமை போதகர் வண. அன்றிக் அன்றிகியூஸ் மன்னாரில் 1561ல் பணியை மீண்டும் ஆரம்பித்தார். தென்னிந்தியாவின் புன்னக்காயல் பகுதியிலிருந்து, 5000 மீனவர்களை குடியமர்த்தினார். அந்த வேளையில் 150 படைவீரர்களோடு 6 கப்பல்கள் மன்னாரில் நுழைய தஞ்சாவூர் நாயக்கர் படையை சங்கிலியன் வாபஸ் பெற்றான். இதன்பின் வேதாளை, மாந்தையில் வாழ்ந்த மக்கள் மன்னாரில் தங்கள் இடங்களுக்கு திரும்பினர். இந்த வேளையில் மாந்தை உறவினர் 200 பேர் வண. அன்றிக்கியூஸ் மூலம் ஞானஸ்நானம் எடுத்தனர். இதன்பின் மற்ற சமூக மக்களும் கிறிஸ்தவத்திற்கு வர ஆரம்பித்தனர். மன்னாரில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக திருச்சபை வளர்ந்து பெருகியது. எல்லா இடங்களையும்விட மன்னாரில் மருத்துவப் பணியும், ஆன்மீகப் பணியும் சிறந்து விளங்கியது.

## 6. படுகொலைக்கு பின் வேதாளை கிறிஸ்தவம்:

மன்னார் படுகொலைக்குப்பின் முத்துக் கடற்கரை வடபுலத்தில் வேதாளை முக்கிய மையமானது. இங்கு இயேசுசபையின் தலைமைக் குருவான வண அந்தோனி கிரிமினாலி பணி செய்தார். முதல் முதல் தமிழை சரிவர கற்றுக்கொண்ட ஐரோப்பிய குரு இவரே. இத்தாலி இவரது பிறப்பிடமாகும். வேதாளையில் போர்த்துக்கேய படைத்தலைவன் ஒருவனும் 40 சிப்பாய்களும் முகாமிட்டு இருந்தனர். இவர்கள் இந்தியாவின் மாபெரும் இந்து கோவிலாகிய இராமேஸ்வர கோவிலுக்கு வரும் யாத்திரிகர்களிடம் துன்புறுத்தி வரிவசூல் செய்தனர்.

இதை வண. அந்தோனி கிரிமினாலி கண்டித்தார். இருப்பினும் அவர்கள் தொடர்ந்து வரிவசூல் செய்து வந்தனர். இதையறிந்த விஜயநகர (நாயக்கர்) படை, திடீரென 5000 படைவீரர்களுடன் வேதாளையில் நுழைந்தனர். போர்த்துக்கேய வீரர்கள் புன்னக்காயலுக்கு போட் மூலம் தப்பினர். "நல்ல ஆயன் ஆடுகளுக்காக தன்னுயிரையே கொடுப்பான்" (யோவா.10:11) என்ற வேதவார்த்தைக்கு இணங்க தன்னுடைய மந்தைக்காக வண. அந்தோனி கிரிமினாலி படுகொலை செய்யப்பட்டார். இவர் உலகம் முழுவதுமுள்ள இயேசு சபையின் முதல் வேதசாட்சியாவர். இவருடன் சேர்ந்து 100க்கும் மேற்பட்ட கடையர், பட்டங்கட்டிகள் மற்றும் சில பரதவர்களும் மரித்தனர் என தந்தை தம்புராசு தனது "வேதாளை வேதசாட்சி" என்னும் நூலில் கூறுகிறார். வண. அந்தோனி கிரிமினாலி பற்றி, 100 ஆண்டுகளுக்குமுன், தமிழ்நூல் ஒன்று எழுதப்பட்டுள்ளது. அது உரோம் வத்திக்கான் நூலகத்திலுள்ளது.

## 7. இக் கிறிஸ்தவ எழுச்சியால் கிடைத்த நன்மைகள்

அ) உலகம் முழுவதும் சுமார் 50 இலட்சம் தமிழர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதற்கு இந்த கிறிஸ்தவ எழுச்சி அடிப்படையாக அமைந்தது.

ஆ) இந்தியாவின் பல மாநிலங்கள், இலங்கை, பர்மா, நிக்கோபார் தீவுகள், மலேசியா, கிழக்கு மற்றும் தெற்கு ஆபிரிக்கா, கயனா, டிரினிடாடு, பிஜித்தீவு மற்றும் சில நாடுகளில் தமிழ்க் கிறிஸ்தவர்கள் மூலமே தமிழருக்கும் மற்றும் பிறமொழி மக்களுக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இதற்கும் இக்கிறிஸ்தவ எழுச்சியே அடிப்படைக் காரணம்.

இ) அக்காலங்களில் தமிழ்மொழி கவிதை நடையில் வளர்ந்திருந்தது. கிறிஸ்தவ குருக்கள் பைபிளை மக்களுக்கு போதிக்க உரைநடை தமிழை வளர்த்தனர். இதுவே இன்று தமிழின் அறிவு வளர்ச்சிக்கு உதவியாக இருக்கிறது.

ஈ) தமிழில் ஓலைச்சுவடி நிலை மாறி புத்தகங்கள் வெளிவர இவ்வெழுச்சி காரணமாயிருந்தது.

உ) திருக்குறள் போன்ற சமண நூல்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் உலகில் தமிழரின் புகழ் ஓங்கியது. இதற்கும் இந்த எழுச்சியே காரணமாகும். இன்னும் பல நன்மைகளை இவ்வெழுச்சி பெற்றுக்கொடுத்துள்ளது.


(தொடர்ச்சி 14ம் பக்கம்)


# மன்னார் மறைமாவட்ட யூபில் விழா நிகழ்வுகள்

**28 ஜனவரி, 2006 – தோட்டவெளி வேதசாட்சிகள் அன்னை ஆலய வளாகம்**



















# மன்னார் மறைமாவட்ட யூபிலி விழா நிகழ்வுகள்

***28 ஜனவரி, 2006 – தோட்டவெளி வேதசாட்சிகள் அன்னை ஆலய வளாகம்***





















# வாழ்வுதயம்

VALVUTHAYAM (Caritas - Mannar)

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

VALVUTHAYAM (Caritas - Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பி. ஜேசுராஜா.


Mannar Diocesan Centre For Justice, Peace And Human Development - Valvuthayam (Caritas - mannar), No. 17, Main Street, Mannar - Sri Lanka T.P: 023 - 2232140, Fax: 023-2232893, E-mail: valvum@slthet.lk

### நானாட்டானில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவியர் இல்ல

## அடிக்கல் நாட்டு விழா

மன்னார் மறை மாவட்ட வாழ்வுதய நிறுவனமானது, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பற்பல சேவைகளைப் புரிந்துவருகிறது. குறிப்பாக வறிய குடும்பங்களைச் சேர்ந்த - மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளின் கல்விக்கான ஊக்குவிப்புக்களை அளித்து வருகின்றது.


இந்த வகையில் மாணவியர் இல்லம் ஒன்றை நானாட்டான் கன்னியர் மட வளவில் அமைக்கும் திட்டமாக இரண்டு மாடிக்கட்டிடம் ஒன்றுக்கான அத்திவாரக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 16.01.2006 அன்று மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய வாழ்வுதய அமைப்பின் பணிப்பாளர் ஜேசுறாஜா அடிகளார் வாழ்வுதயத்தின் பற்பல சேவைகளில் இதுவும் ஒன்று என்றும், இக்கட்டிடம் அமைவதனால் மேலும் பல மாணவியர்களுக்கு தங்குமிட வசதியை ஏற்படுத்தி கல்விக்கான ஊக்குவிப்பைக் கொடுக்க முடியுமெனவும் கூறினார். ஆயர் தமது உரையில், இன்றைய சிறார்களின் எதிர்காலம் ஒளிமயமாகத் திகழவேண்டுமானால் அவர்களுக்கான ஊக்குவிப்புக்களையும் வசதிகளையும் செய்துகொடுத்தல் அவசியம். இந்த வகையில்தான் எமது செயற்பாடுகள் அமைகின்றன எனக் கூறினார். நானாட்டான் மகாவித்தியாலய அதிபரும் உரையாற்றினார். பங்குச் சபையின் செயலாளரினால் நன்றி உரையும் இடம்பெற்றது.

## வாழ்வுதயத்தின்
## புதிய கணனிப்பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

வாழ்வுதயத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கணனிப்பயிற்சி நெறியின் மூலம் ஆண்டு தோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கணனிப்பயிற்சி நெறியை பூர்த்திசெய்து தமது எதிர்கால வாழ்வுக்கு உரமூட்டி வருகின்றார்கள்.

இவ்வாண்டும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப்பயிற்சியைப் பெறுவதற்கு இணைந்துள்ளார்கள். G.C.E O/L மற்றும் G.C.E A/L தரங்களில் கல்வி கற்று பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்கள் இப்பயிற்சியைப் பெற்று வருகின்றார்கள். அத்தோடு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் கடமைபுரியும் அலுவலர்களும், குருமட மாணவர்களும் இங்கு இப்பயிற்சியைப் பெற்றுவருகின்றனர். 2005ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் O/L எடுத்த மாணவர்கள் மன்னார் வாழ்வுதய கணனிப்பயிற்சி நிலையத்திலும், உயிலங்குளம் வாழ்வுதய கணணிப்பயிற்சி நிலையத்திலும் இப்பயிற்சிகளைப் பெற்றுவருகின்றனர். இவ்வாறான பயிற்சிகளைப் பெறும் மாணவர்களுக்கு மேலும் 02 கணணிப் பயிற்சிகள் இலவசமாகவும் வழங்கப்படுகின்றன.



வாழ்வுதயத்தில் கணனிப் பயிற்சி நெறி நடைபெறுகின்றது

## வாழ்வுதயத்தின் 125 வீட்டுத்திட்டம்
## மளுவராயர் கட்டையடம்பனில் விரைவில் ஆரம்பம்

மன்னார் வாழ்வுதய நிறுவனத்தின் பற்பல பணிகள் வளர்ச்சி பெற்றுவரும் இவ்வேளையில் மிகவும் பின்தங்கிய கிராமப்புறங்களில் மீள் குடியேற்ற கட்டுமானப்பணிகளை ஆரம்பித்து மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வாழ்வுதயம் வழிகாட்டி வருகின்றது. இதன் செயற்பாடுகளில் ஒன்றுதான் மன்னார் மளுவராயர் கட்டையடம்பனில் ஆரம்பிக்க இருக்கும் நிரந்தர வீட்டுத்திட்டம்.

இத்திட்டங்களை வாழ்வுதய நிறுவனப் பணிப்பாளர் அருட்தந்தை ஜேசுறாஜா அடிகளார் திறம்பட திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றார். இவ்வாறான கட்டுமானப் பணிகளுக்கு தொழில் நுட்ப அலுவலர், மற்றும் வெளிக்கள அலுவலர்கள், தரமான மேசன்மார் போன்றோர் இந்நிறுவனத்தின் கீழ் பணியாற்றி வருகின்றனர்.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

## கிராம முன்னேற்றத்திற்காக ஒற்றுமையுடன் செயல்படுங்கள்


### தும்புத் தொழிற்சாலை திறப்பு விழாவில் வாஸ் அடிகளார்

வாழ்வுதய நிறுவனத்தின் கீழ் 132 கிராமியக் குழுக்கள் மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் சமூக, பொருளாதார, கலாச்சார செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இக்குழுக்களின் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்கும் நோக்கில் கடந்த மாதம் 9ம் திகதி ஓலைத்தொடுவாய் கிராமத்தில் வாழ்வுதயத்தினால் தும்பு உற்பத்தி தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்ட நிகழ்விலே தோட்டவெளிப் பங்குத்தந்தை கிறிஸ்ரியன் வாஸ் அடிகளார் உரையாற்றினார்.

அவர் உரைநிகழ்த்துகையில், வாழ்வுதயத்தினால் எடுத்த இம்முயற்சியின் மூலம் மக்கள் பொருளாதார வளத்தை மேம்படுத்துகின்றவர்களாக மாற வேண்டும். அத்தோடு ஒற்றுமையுடன், ஆன்மீக பலத்தைக் கட்டியெழுப்புவதற்கு இவ்வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள் அயராது உழைக்க வேண்டும். இப்பங்கில் இம்முயற்சியை எடுத்து நடைமுறைப்படுத்தும் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை ஜேசுறாஜா அடிகளாருக்கும் நன்றிகூறி தனது உரையை நிறைவுசெய்தார்.

இம்மக்களுக்கு இத்தொழில் முயற்சி பெரும் ஆறுதலாக அமைகின்றது. இவர்களின் ஆரம்பகால மூன்று மாதங்களுக்கு இத்தொழில் முயற்சியை நன்கு கற்றுக்கொள்வதற்கு ஒரு ஆசிரியர் பொறுப்பாக இருந்து பயிற்சியை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி ஆசிரியர் ஒன்றுகூடல்



வாழ்வுதய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆயர் அன்பளிப்பு வழங்குகிறார்.

## பரந்த மனம் கொண்ட ஆசிரியர்களால் சிறார்களின் எதிர்காலம் சிறப்படையும்

### முன்பள்ளி ஆசிரியர்களின் மத்தியில் மன்னார் ஆயர்

பரந்த மனம் படைத்த ஆசிரியர்களின் வாழ்வு சிறார்களின் சிறப்பான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும். இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்கள் தெரிவித்தார். முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு வாழ்வுதய நிறுவனத்தினரால் மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தில் நடத்தப்பட்டது. இக்கருத்தமர்வில் மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் முன்பள்ளி ஆசிரியர்கள் 110 பேர் கலந்துகொண்டனர். அவ்வேளையிலேயே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

முன்பள்ளி ஆசிரியர்களின் பணி கடவுளால் வழங்கப்பட்ட ஒரு கொடை. அத்துடன் இது ஓர் அழைப்பாகும். எனவே இந்தக் கிறிஸ்துவின் அழைப்புக்கு செவிசாய்ப்பது எமது தலையாய கடமையாகும். நாம் காற்று செல்லும் திசைக்கு அடித்துச் செல்லும் பதர்களைப்போல் இல்லாமல், இலட்சியத்தோடு காலங்களை கடந்து செல்ல வேண்டும். நாம் செல்வது மட்டுமன்றி சிறுவர்களுக்கும் அதனை நெஞ்சில் இருத்தி அவர்களது வாழ்வும் அர்த்தம் நிறைந்ததாக அமைவதற்கு எமது வாழ்வும் சிறுவர்களின் எதிர்கால வெற்றிக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும் எனக்கூறினார்.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

## நிரந்தர சமாதானத்தை கட்டி எழுப்புவதற்கு இளம் சமுதாயம் துடிப்புடன் செயற்பட வேண்டும்

### சமாதானக் கருத்தமர்வில் இயக்குனர் யேசுறாஜா அடிகளார்

வாழ்வுதய நிறுவனத்தின் கீழ் இயங்கும் இளைஞர் சமாதானக் குழுவின் உறுப்பினர் 50 பேருக்கு கடந்த மாதம் 24ம் திகதி வாழ்வுதய நிறுவன கேட்போர் கூடத்தில் சமாதான விழிப்பூட்டல் முழு நாள் கருத்தமர்வு நடைபெற்றபோதே வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை ஜேசுறாஜா அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இயக்குனர் அவர்கள் மேலும் கூறுகையில், எமது நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு நாம் அயராது உழைக்க வேண்டும். அத்தோடு சமாதானத்தை எதிர்க்கும் தீய சக்திகளின் தவறான கருத்தை எம் உள்ளங்களில் ஏற்காது நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிரந்தர சமாதானத்திற்காக துடிப்புடன் செயற்பட வேண்டும். கடந்த யுத்த காலங்களில் ஏற்பட்ட இரத்த ஆறு, இனிவரும் காலங்களில் எமது நாட்டில் ஏற்படாத வண்ணம் உழைக்க வேண்டிய கடப்பாடு எல்லோருக்கும் உண்டு. குறிப்பாக இளம் சமுதாயம் நிரந்தர சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வாழ்வுதயம் எடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு கை கொடுக்க வேண்டும் எனக்கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

அடுத்து கடந்த வருடம் தேசிய இளைஞர் சமாதான மாநாட்டில் பதுளை மறைமாவட்டத்திற்கு சென்று கலந்துகொண்ட 45 இளைஞர் யுவதிகளுக்கு பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வாழ்வுதய இயக்குனர் தந்தை அவர்களினால் வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மன்னார் பிரதேச செயலக திட்ட அலுவலகத்தில் கடமை புரியும் அலுவலர் திரு S.V. பாஸ்கரன் அவர்களினால் நிரந்தர சமாதானத்திற்கான விழிப்பூட்டும் கருத்துரைகள் மாலை 3.30 மணிவரை இடம்பெற்றன. இந்நிகழ்வில் அனைவரும் சிறப்பாக பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது.



ஓலைத்தொடுவாய் வாழ்வுதய தும்பு உற்பத்தி தொழிற்சாலை ஆரம்ப நிகழ்வு

# உயிர் என்பது கடவுள் தந்த கொடை!

## அதைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை

அ. றொக்சன் குரூஸ், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

நாளாந்தம் செய்திகளுக்குச் செவிமடுக்கின்றபோது தலைப்புச் செய்திகளே பயங்கரமானதாகக் காணப்படுகின்றன. கொலைகள் பற்றி பத்திரிகையில் காணப்பட்ட சில தலைப்புக்கள், "கிணற்றிலிருந்து ஓர் இளைஞனின் சடலம் கண்டுபிடிப்பு" "தலை வெட்டப்பட்ட நிலையில் பற்றைக்குள் ஓர் அழுகிய உடல்" "மோட்டார் வண்டியில் சென்ற ஒருவரை இனந்தெரியாத சிலர் சுட்டுக்கொலை" "இறந்த உடல் யாரும் கவனிப்பாரற்ற நிலையில் வீதியின் ஓரத்தில்" "அயர்ந்து தூங்கிய இளம் தம்பதியினர்மேல் பெற்றோல் ஊற்றி எரித்துக் கொலை" "கைக்குண்டு வீசினதால் பலர் இறப்பு "கணவனின் குடித்தொல்லையையும், பாலுறவு வற்புறுத்துதலையும் தாங்க முடியாத நிலையில் மனைவி தூக்குப் போட்டு மரணம்" "மனைவியின் தகாத உறவை அறிந்த கணவன், மனைவியை வாளால் வெட்டிக் கொலை"

இவற்றைப் பார்க்கின்றபோது, மனிதனின் மாண்பு, அவனின் மகத்துவம், ஆளுமையெல்லாம் காற்றில் பறக்கும் தூசிபோல் ஆகிவிட்டதே என்ற கவலை எம் மனத்தை உறுத்துகிறது. இவைகளையெல்லாம் பார்த்தும் பார்வையற்றவர்களாக நாம் இருந்துவிட முடியாது. மனிதனின் மாண்பு, மகத்துவம் என்பன மதிக்கப்பட வேண்டும். மனிதக் கொலைகள் எம் மண்ணிலிருந்து அடியோடு அழிக்கப்பட வேண்டும்.

ஏனெனில் மனித உயிர் கடவுளின் கொடை. எனவே உயிரின் கொடையாளியாகிய கடவுளுக்கு மட்டுமே அவ்வுயிரின்மீது முழு அதிகாரமும், உரிமையும் இருக்கின்றது. வேறு எவருக்குமே மனித உயிரின்மீது அதிகாரம் இல்லை. மனிதம் மதிக்கப்பட வேண்டும். ஏனெனில் அவன் கடவுளின் சாயல். கடவுளின் படைப்பு. "*கடவுள் தனது சாயலாகவும், பாவனையாகவும் மனிதனைப் படைத்தார்.*" (தொ. நூ. 1:27). எனவே படைத்தவனுக்கே படைப்பின்மீது அதிகாரம் உண்டு. எனவே மனித கொலைகள் நியாயமற்றவை. சாவான பாவத்திற்குரியவை.

விடுதலைப் பயணம் : 20:13, மற்றும் இணைச்சட்டம்: 5:17, கூறுகிறது. "கொலை செய்யாதே." மேலும் மத்தேயு 5: 21-22 ல் "கொலை செய்யாதே: கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்" என்று கூறப்படுகின்றது. எனவே இதைச் செய்பவர்கள் சாபத்திற்கு ஆளாவார்கள்.

ஏனெனில் காயின் தன் சகோதரன் ஆபேலைக் கொலை செய்த பின் ஆண்டவர் அவனிடம், "நீ என்ன செய்துவிட்டாய், உன் சகோதரனின் இரத்தக்குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக்கொண்டிருக்கின்றது ... நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய்" (தொ.நூ. 4:10-11). என்று கூறுகின்றார்.

மேலும் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, "இன்றைய உலகில் திருச்சபை" எண். 51 இவ்வாறு கூறுகிறது. "உயிரின் ஆண்டவராகிய கடவுள் உயிரைக் காக்கும் உயரிய பணியை மனிதரிடத்தில் ஒப்படைத்துள்ளார். இப்பணியை மனிதத் தன்மைக்கு ஏற்ற முறையில் நிறைவேற்ற மனிதர் கடமைப்பட்டுள்ளனர். ஆகவே, கருவானதிலிருந்து உயிரை மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும்."

எனவே மனித உயிரைப் பாதுகாப்பது, அதனை மதிப்பது எமது கடமையாகின்றது. ஏனெனில் மனிதன் கடவுளின் மேன்மையான படைப்பு. திருப்பாடல் 139 :13-14 "*ஏனெனில் என் உள் உறுப்புக்களை உண்டாக்கியவர் நீரே. என் தாயின் கருவில் எனக்கு உருத் தந்தவர் நீரே! அஞ்சத்தகு முறையில் நீர் என்னைப் படைத்ததால், நான் உமக்கு நன்றி நவில்கின்றேன். ......*" திருப்பாடல் 22:9-10 "*என்னை கருப்பையினின்று வெளிக் கொணர்ந்தவர் நீரே. என் தாயின் மார்பில் பால் குடிக்கையிலேயே என்னைப் பாதுகாத்தவரும் நீரே. கருப்பையிலிருந்தே உம்மை சார்ந்திருந்தேன். நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் என் இறைவன் நீரே.*" யோபு 10:11 கூறுகிறது "*எலும்பும், தசைநாரும் கொண்டு என்னைப் பின்னினீர், தோலும் சதையும் கொண்டு என்னை உடுத்தினீர்.* எரேமியா 1:5 கூறுகிறது "*தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்......*" எனவே உருத்தந்த, உயிர் தந்த கடவுளுக்கு மட்டுமே எம் உயிரின்மீது முழு அதிகாரம் உண்டு. மனிதக் கொலைகள் கடவுளின் விருப்பத்திற்கு எதிரானவை. இவைகள் வேரோடு பிடுங்கி எறியப்பட வேண்டியவை.

எம் மண்ணில் இடம்பெறும் நாளாந்தக் கொலைகளுக்கு காரணமாக அமைபவை பொறாமை, ஆணவம், அதிகாரவெறி, நீதியற்ற நிலை, சுயநலம், அகங்காரம், சமத்துவமற்ற தன்மை, சகோதரத்துவமற்ற தன்மை, மனித உயிர்களில் கடவுளின் சாயலைக் காணாத நிலை என்பனவாகும். இவைகள் எல்லாம் தகர்த்தெறியப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சாயல். அவன் மாண்புடனும், மகத்துவத்துடனும் படைக்கப்பட்டிருக்கின்றான். எனவே அவனின் உயிர் மதிக்கப்பட வேண்டும். அவனின் ஆன்மா, உடல் நலம், உடலின் மதிப்பு என்பன பாதுகாக்கப்பட வேண்டும். *ஒவ்வொரு மனிதனும் என் நண்பன். ஒவ்வொரு மனிதனும் சகோதரன்* என்ற நிலை வளர வேண்டும். இவ்வாறு ஏற்பட்டால், மனிதக் கொலைகள் எம் மண்ணைவிட்டு ஓடிவிடும்.

உலகில் வாழும் எவருக்கும் மனித உயிரின்மேல் அதிகாரம் இல்லை. உயிர் கடவுள் தந்த மாபெரும் கொடை. எனவே அவ் உயிரை நாம் மதிக்க வேண்டும். பாதுகாக்க வேண்டும். அதைப்பறிக்க யாருக்கும் உரிமை இல்லை.

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி

ஓர் அடியான் ஆண்டவனிடத்தில் அதிகமான அன்பு வைத்திருந்தான். இவனுடைய பக்தியைக் கண்ட கடவுளே சில வேளைகளில் பரவசம் அடைந்துவிடுவாராம். இதனால் இவ் அடியவனுக்கு தாம் ஏதாவது மேலதிகமாகச் செய்ய வேண்டுமென்று இறைவன் விரும்பினார். "என்னிடம் இவ்வளவு அன்பு வைத்திருக்கின்ற அன்பனே!..... நீ கேட்கின்ற இரு வரங்களை நான் அருள்வேன்." என அடியவனுக்கு ஆண்டவன் தரிசனத்தில் மொழிந்தார். இதனை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்த விரும்பினான் அந்த அடியவன்.

"இறைவா, இக்காலத்தில் பலர் அகால மரணத்தைத் தழுவிக்கொள்வதால் நான் சாகிறபோது, நல்ல சாவை அடைய, நான் நித்திரையில் சாக வேண்டும்" என்றான். "ஆஹா! .... என்ன அருமையான வேண்டுதல்! .... நல்லது . அப்படியே ஆகட்டும்" என்றார் கடவுள். "அடுத்த வரத்தைக் கேள், அருள்வேன்" என்றபோது, "ஆண்டவரே, எனக்கு இனிமேல் நித்திரையே வராத வரத்தை அருளும்" என்றானாம் அந்தத் தந்திரமான பக்தன். கலியுக மனிதனைப் பற்றிப் பேசுகின்றபோது இப்படியான கதைகளைச் சொல்லுகிறார்கள்.

எது எப்படி இருந்தாலும், எவ்வளவு காலம் இந்த உலகில் நாம் வாழ முடியுமோ, அவ்வளவு காலம் வாழ வேண்டும் என்ற உணர்வு நம் எல்லோரிடமும் உண்டு. "நீங்கள் நீண்ட காலம் வாழ்வீர்கள்", "உங்கள் ஆயுள் நீண்டது" என்று மற்றவர்கள் நமக்குக் கூறுகின்றபோது, எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது! இவ்வுலகில் வாழ்வது ஒரு தடவைதான். அதனை எந்தளவிற்கு சிறப்பாக சிறப்பாக்குவதுதான் நம்முடைய அவாவாக இருக்கிறது.

வாழ்க்கை பற்றிப் பலரும் பலவாறாகக் கூறுகிறார்கள். "வாழ்க்கை என்றால் போராட்டம்" என்றான் ஒருவன். இல்லை, "வாழ்க்கை என்றால் நீரோட்டம்" என்றான் இன்னொருவன். இல்லை, இல்லை, " வாழ்க்கை என்றால், "மாறாட்டம்" என்றான் மற்றொருவன். அதுவும் இல்லை "வாழ்க்கை என்றால் தோட்டம்" என்றான் வேறொருவன். வாழ்க்கையைப் போராட்டமாகவும், நீரோட்டமாகவும், மாறாட்டமாகவும், தோட்டமாகவும் பார்க்கின்றவர்கள் ஏன் வேரோட்டமானதாக, உயிரோட்டம் உள்ளதாகப் பார்க்கக் கூடாது.!..... இந்த வரிசையில் வல்தாருசு என்ற ஆன்மீகலாளர் வாழ்க்கையைக் கணக்குக்கு ஒப்பிடுகிறார்.

"*வாழ்க்கை ஒரு கணக்கு நண்பா, இறைவன் அதைச் செய்யச் சொன்னான். வழியை அவன் சொல்லித் தந்தான். விழியை அதில் வைத்துச் செய்வாய். பெருக்கல் வரும் பின்னம் வரும் பெரிய எண்கள் பின்னால் வரும். குறுக்கல் வரும் கூட்டல் வரும் குற்றல் புள்ளி இடையில் வரும். வகுத்தல் வரும் வாங்கல் வரும் வாய்ப்பாடுகள் சேர்ந்து வரும். வழியை வைத்து விலகாவிடில் விரும்பும் விடை விரைவில் வரும்.*" என்று பாடுகிறார்.

ஒரு கணக்கைச் செய்கின்றபோது, அதில் பெருக்கல், பிரித்தல், கூட்டல், கழித்தல், வகுத்தல், வாங்கல் எல்லாம் சேர்ந்து வருவது போல இன்பங்கள், துன்பங்கள், கவலைகள், சந்தோஷங்கள், உயர்வுகள், தாழ்வுகள் சேர்ந்து வருவதுதான் வாழ்க்கை என்கிறார்.

கவிஞன் கண்ணதாசன், "வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். வாசல் தோறும் வேதனை இருக்கும். வந்த துன்பம் எதுவென்றாலும், வாடி நின்றால் ஓடுவதில்லை. எதையும் தாங்கும் இதயம் இருந்தால் இறுதி வரையில் அமைதி பிறக்கும்." எனப் பாடுவார். ஆயிரத்தி நூறு அம்சங்கள் கொண்டதே வாழ்க்கை. அதில் துன்பமும் ஒன்று, வாடி நின்றால் ஓடி விடுமா? அதனையும் கடந்து, பயணிப்பதுதான் வாழ்க்கை கற்பிக்கும் சவால் என்ற சாரம்பட வாழ்க்கையைப் பார்க்கிறான் இக்கவிஞன்.

2004 மார்கழி 26ம் திகதி, ஆழிப்பேரலை - இராட்சத அடுக்கு அலைகள் (TSUNAMI) ஏற்படுத்திய அனர்த்தத்தின் பின்னர் பாதிப்புற்ற மக்களோடு நின்று பணிபுரிய வாய்ப்புக் கிட்டியது. சாவின் பிடியில் நின்றுகொண்டு உயிர்தப்பிப் பிழைத்தவர்களால் வாழ்வு பற்றி எனக்கு உணர்த்தியது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. "கண்ணைத் திறந்தால் வாழ்வு. கண்ணை மூடினால் சாவு. கண்ணிமைப் பொழுதான் நம் வாழ்வு" என்பதைச் சொல்லாமல் சொல்லி வைத்தார்கள். நிலையாமையை உணர்த்தி நின்றார்கள்.

வாழ்வில் பல மகிழ்ச்சியான நிகழ்வுகளை சந்தித்தவன், வாழ்க்கை சுவையானது என்கிறான். வாழ்க்கையில் பெரும்பாலான நேரங்களில் துன்பங்களை, தோல்விகளைச் சந்தித்தவன், "வாழ்க்கை சுமை" என்கிறான். இரண்டிற்கும் இடைப்பட்டவன், சுமாராக இருக்கிறது அல்லது, "பரவாயில்லை" என்கிறான். ஆக, வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தமக்குத் தொட்டதை, பட்டதை, கேட்டதை, கண்டதை, அனுபவித்ததை வைத்துக்கொண்டு வாழ்க்கை பற்றிப் பேசுகிறார்கள். இங்குதான் நாம் வாழ்வதன் பொருள் என்ன? என்ற மிக அடிப்படையானதும், மிக மிக முக்கியமானதுமான கேள்வி எழுகிறது. "நான் வாழ்ந்ததால், எத்தனை பேர் வாழ்ந்தார்கள்? அல்லது, வாழ்வுக்கான வழியைக் கண்டார்கள்!" என்பதில் அடங்கியிருக்கிறது. நாம் வாழ்வதன் அர்த்தம், நாம் வாழ்ந்து மற்றவர்களை வாழ்விப்பதில் தங்கியிருக்கிறது நாம் வாழ்வதன் பொருள்.

சுவாமி விவேகானந்தர் சொல்வதுபோல, நீருக்குள் அமுக்கி வைத்திருப்பவன் வெளியே வர, 'ஜீவப்பிரயத்தனம்' செய்வான். உயிர் பிழைக்க இறுதி மூச்சுவரை போராடுவான். அர்த்தமுள்ள வாழ்வு வாழ வேண்டும் என்ற ஒரு வகைப் பிடிப்பு ஏற்படுகின்றபோது, நம் வாழ்க்கை அர்த்தம் பெறுகின்றது. இங்கு தான் எவ்வளவு காலம் வாழுகின்றாய் என்பதைப் பார்க்க, வாழுகின்ற காலத்தில் எப்படி வாழ்ந்தாய்? என்பது பொருள் பொதிந்து, அருள் செறிந்து நிற்கிறது.

நாவண்ணன் எழுதும்

# வித்தான காவியம்

மன்னார் வேதசாட்சிகளின் வரலாற்றைக் கூறும்

## காவியத் தொடர் – 7

### குமுறல்


சென்றனர் வீரர் பட்டி நோக்கிச் சென்றனர் வீரர்
சென்றனர் எல்லோரும் சேர்ந்துடன் நன்றென
கொன்றிட நல்லவர் குருதி குடித்திட
வென்றிட அவர்களை வேலுடன் வாள் கொண்டு
சென்றனர் வீரர் பட்டிம் நோக்கி சென்றனர் வீரர்.


காட்டினர் கோபம் சிங்கமெனக் காட்டினர் கோபம்
காட்டினர் கோபமே கண்கள் சிவந்திட
ஈட்டி வாள் யாவுமே இன்பமாய் பற்றியே
தீட்டித் தடவியே தீவிரமாகவே
காட்டினர் கோபம் சிங்கமெனக் காட்டினர் கோபம்


வெஞ்சினம் கூறி வேங்கையென வெஞ்சினம் கூறி
வெஞ்சினம் கூறியே வெருண்டவர் சென்றனர்
அஞ்சினர் அல்லவே ஆத்திரம் மீறவே
நஞ்சினைக் கொண்டர் நாகம்போல் சென்றனர்
வெஞ்சினம் கூறி வேங்கையென வெஞ்சினம் கூறி


வள்ளமே ஏறிச் சென்றனரே வள்ளமே ஏறி
வள்ளமே ஏறியே வலித்தவர் சென்றனர்
கள்ளமே இல்லாத கத்தோலிக்கர் தமை
உள்ளம் கொதித்திட உடல் துண்டு செய்திட
வள்ளமே ஏறிச் சென்றனரே வள்ளமே ஏறி.

### (வேறு)


கைத்துடுப்பு ஏலோ கடுகி வலித் தேலோ
கடல்மீது ஏலோ காவலனும் ஏலோ
செல்லுகின்றான் ஏலோ செயல்படுத்த ஏலோ
கொல்வதற்கு ஏலோ கோனும் போறான் ஏலோ
ஈட்டி கொண்டு ஏலோ இரக்கமின்றி ஏலோ

தீட்டிக்கொண்டு ஏலோ தீவிரமாய் ஏலோ
வாள்கொண்டு ஏலோ வதைக்க எண்ணி ஏலோ
நாளிரவாய் ஏலோ நகருகின்றார் ஏலோ
இரத்த வெறி ஏலோ இராயனுக்கு ஏலோ
கரத்தில் கத்தி ஏலோ கடுகிச் சென்றார் ஏலோ
அரக்க வெறி ஏலோ அரசனுக்கு ஏலோ

இரக்கமில்லை ஏலோ இடர் கொடுக்க ஏலோ
வெட்டியுடல் ஏலோ வேறு ஆக்க ஏலோ
கொட்டிவிட ஏலோ கோனும் போறான் ஏலோ
பக்தி நிறை ஏலோ பாமரர்கள் ஏலோ
முக்தி காண ஏலோ முடுகிச் சென்றார் ஏலோ
அச்சமில்லை ஏலோ அழிவு செய்ய ஏலோ

கொச்சை மொழி ஏலோ கூறிச் சென்றார் ஏலோ
இச்செகத்தில் ஏலோ ஈனச் செயல் ஏலோ
பச்சை ரெத்தம் ஏலோ பருகச் சென்றார் ஏலோ
போர்த்துக்கேயர் ஏலோ பொல்லா மதம் ஏலோ
தீர்த்துக்கட்ட ஏலோ திரண்டு சென்றார் ஏலோ
வார்த்தையில்லை ஏலோ வடித்துச்சொல்ல ஏலோ
வேர்த்துக்கொட்ட ஏலோ விரைந்து சென்றார் ஏலோ.

### சாட்சிகள்


சங்கிலியன் படைவீரர் கடலால்
சம்பே துறை கரையடையலானார்
அங்கிருந்த ஒரு சில பேர் கண்டார்
அவர் வருகை நோக்கம் கண்டு கொண்டார்.


கத்தி வாள் ஈட்டி வளகக் கருவி
கைகளிலே பளபளக்கக் காவி
இத்தனை பேர் வந்துளது ஏனோ?
இயல்பான தொன்றிதில்லை தானே

சித்திரவதை ரத்தவெள்ளம் சீற
சிரசறுப்பு நடத்திடவே வாறார்
உத்தமர்கள் உயிர்குடிக்கத்தானே
உந்தி அலைமீது வந்தார் தாமே

மக்களுயிர் காப்பது தம் கடமை
மகத்தான பணியுமிது வென்று
சிக்கல் வரும் முன்னாலே காக்க
செல்லுகின்றார் பட்டிமுக்கு ஓடி


"தக்கவிதம் செய்திடுங்கள் உடனே
தாமதிக்கில் வீண் கொலைகள் விழுமே"
மிக்க துயர் கொண்டவராய் அவர்கள்
மிகப் பதட்டத்தோடு உரைத்தார்கள்

பூத்த மலர் மிகத் துறவி சிரித்தார்
புன்னகை யோடங்குள்ளோரை விளித்தார்
"காத்திடவே வேண்டும் என்போர் உயிரை
கடைசி வரை பார்த்திருக்க வேண்டாம்"


"ஆத்திரத்தோடவர்கள் வரும் வேளை
ஆயுதங்கள் ஆவிகளைக் குடிக்கும்
காத்திடுவார் உம்மை இறை மகனும்
கடுகதியில் ஓடிச் சென்று ஒழியும்"

ஊரவர்க்கு எட்டிய திச் சேதி
ஓரிருவர் ஓடித் தப்பலானார்
யாரெவர்தான் யாது செய்தபோதும்
யாமசை யோம் என்று நின்றார் பலபேர்

(காவியம் நீளும்)

# இளைஞர் பொழிவு

## தாழ்வு மனப்பான்மை

தாழ்வுமனப்பான்மை என்பது ஓர் மனநோய். கொல்ல முயற்சி செய்துவரும் ஒரு கொடிய விரோதியைவிட தாழ்வுமனப்பான்மை மிகக்கொடுமையானது. அது அவ்திப்படுபவனுடைய மனதையே அவனுக்கு எதிரியாக மாற்றிவிட்டு, அவனை முடிவில் ஒன்றுக்கும் உபயோகமில்லாதவனாக மாற்றிவிடும். பயந்தாங்கொள்ளி, பைத்தியக்காரன், பேசத்தெரியாதவன், ஒரு வேலைக்கும் லாயக்கில்லாதவன், மடையன் என்று மற்றவர் எள்ளி நகையாடும் அளவிற்கு அவனைக் கொண்டுவந்துவிடுகின்றது.

இந்தத் தாழ்வுமனப்பான்மையை நாம் மாற்ற வேண்டும் என்றால், முதலில் நாம் தாழ்வுமனப்பான்மை என்ன என்று, கண்டு கொள்ள வேண்டும். உடல் நோய்க்கும் சில அறிகுறி இருப்பது போன்று, இந்த மனநோய்க்கும் சில அறிகுறி உண்டு.

தீவிரமான தாழ்வுமனப்பான்மையில் அவதிப்படுவோர்கள் எப்போதும் அனைத்தையும் பறிகொடுத்தவர்கள் போன்று காட்சி தருவார்கள். எப்போது பார்த்தாலும் பெரிய கல்லை தலையில் சுமந்துகொண்டிருப்பது போன்று காட்சி தருவார்கள். எப்போது பார்த்தாலும் பெரிய கல்லை தலையில் சுமந்துகொண்டிருப்பது போல பாரம் அவர்களை அழுத்திக்கொண்டிருக்கும்.

சிரிப்பென்ற வார்த்தையே இவர்கள் அகராதியில் இடம்பெற்றிருக்காது. மற்றவர்களுடைய கண்களைப் பார்த்து தைரியமாக பேசாமல், தரையில் பார்வையை பதித்து மெதுவாக பேசுவார்கள். எப்போது பார்த்தாலும் தன்னையும், தன் கஷ்டத்தையும் எண்ணிப்பார்த்து புலம்பிக்கொண்டிருப்பார்கள். இன்றைய தினத்தை எப்படிக் கழிப்பது என்ற பயம் இவர்களை வாட்டிக்கொண்டிருக்கும். இவர்கள் நன்றாக சாப்பிடும்போதுகூட அதை நன்றாக ருசித்து சாப்பிடமாட்டார்கள்.

## சிந்தனைத் தொடர் – 15

### Fr. வின்னி யோசப் எழுதுகிறார்

இயற்கையின் வண்ணப் பூக்களின் அழகும் இவர்களுக்கு மகிழ்ச்சியைத் தராது. காலைக் கதிரவனையும், முழு நிலாவின் அழகையும் இரசிக்கத் தெரியாமல் சோகமயமான எண்ணங்களில் மூழ்கித் தலையை குனிந்து நடந்துசென்றுகொண்டிருப்பார்கள். பறவைகளின் சந்தோசமான ஆரவாரம் இவர்களின் உள்ளங்களில் இன்பத்தை ஏற்படுத்தாது.

மலைவாசஸ்தலங்களில் குடிகொண்டிருக்கும் அழகிலும் பாலைவனத்தைத்தான் காண்பார்கள். சிரிப்பைத் தரும் சினிமா, நாடகம் போன்றவைகளை அனுபவிக்கும் மனநிலை இல்லாதவர்களாக இருப்பார்கள். நாள் முழுவதும் ரி. வி முன்பாக உட்கார்ந்துகொண்டு எந்தக் குப்பை நிகழ்ச்சிகளையும் வாய் பிளந்து பார்த்துக்கொண்டிருப்பார்கள். பிறரோடு பழக வேண்டும், கதைக்க வேண்டும், நாலு நல்ல காரியங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணமில்லாமல் ஓரமாக வெட்கப்பட்டு ஒதுங்கி நிற்பார்கள்.

சே .... இது என்ன வாழ்க்கை என்று அடிக்கடி அலுத்துக் கொள்வார்கள். இப்படி அடிக்கடி அலுத்துக்கொள்வதால் வாழ்க்கை வெறுத்து தற்கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். உப்புச் சப்பில்லாத காரியங்களுக்கு எல்லாம் கோபமும், அவமானமும் ஏற்படும்.

பத்துப் பேருக்கு முன்பாக பேசவேண்டும் என்ற கட்டாய நிலை ஏற்பட்டால் அழுது விடுபவர்களைப் போன்றே காட்சி தருவார்கள். பெரிய அதிகாரிகளுடனோ, சக ஊழியர்களுடனோ இவர்களால் தைரியமாகவோ, அழுத்தமாகவோ பேச முடியாது. அவர்கள் பேசினால் முட்டாள்தனமாக பேசிவிடுவோம் என்ற எண்ணத்தில் பேசவே முயற்சி செய்யமாட்டார்கள்.

பிறரைப் பார்த்து தீவிரமாகப் பொறாமைப்பட்டு தன்னிரக்கத்தால் வெந்து, நொந்து சாவார்கள். இந்த தாழ்வுமனப்பான்மையை நீக்க,

1ம் வழி : தாழ்வுமனப்பான்மையில் நாம் வாழ்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் உருவாக வேண்டும்.



2ம் வழி : தாழ்வுமனப்பான்மையைப்பற்றி ஓர் தெளிவான சிந்தனை வேண்டும்.

3ம் வழி : "வாழ்க்கையில் மாபெரும் காரியங்களை சாதித்தவர்கள் அனேகமாக வெவ்வேறு அளவுகளில் தாழ்வு மனப்பான்மையால் பாதிக்கப்பட்டவர்களாகத்தான் இருப்பார்கள். அப்படியிருக்க கடினமான அயராத தீவிரமான உழைப்பு ஒன்றுதான் அவர்களை உலகம் பாராட்டும்படி தொழிலதிபர்களாகவும், செல்வந்தர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் மாற்றியிருக்கிறது. அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையை முன்னுதாரணமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

4ம் வழி : பூமியில் நெளியும் புழுவாக இல்லாமல், வானத்தில் பறக்கும் பறவையாக வாழப்போகிறேன் என்று சபதம் செய்து கொண்டு, அந்த உயர்ந்த இலட்சியத்தை அடைய இரவும், பகலும் உழைத்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

5ம் வழி : தன்னையே முழுமையாக ஏற்றுக்கொண்டு தான் இறைவனால் அன்பு செய்யப்படுகின்ற அன்புக் குழந்தை என்பதை உணர வேண்டும்.

ஆகவே வாழ்க்கை நம் கைகளில் இருக்கிறது. தாழ்வுமனப்பான்மையால் வாழ்க்கையை நரகமாகவும் மாற்றிவிடலாம். அன்பாலும், தன்னம்பிக்கையின் அயராத உழைப்பாலும் அதை சொர்க்கமாகவும் மாற்றிவிடலாம். உடலில் ஊனம் இருக்கலாம். தவறில்லை. ஆனால் மனதில் ஊனம் (தாழ்வுமனப்பான்மை) இருந்தால் நமக்கு விடிவேயில்லை.

(தொடர்ந்து எழுதுவேன்)

## மன்னார் மறைமாவட்ட யூபிலி விழாவில் திருத்தந்தையின் பிரதிநிதி மேதகு மாரியோ செனாறியோ

## ஆண்டகை ஆற்றிய உரையின் தமிழ் வடிவம்

உங்களுடைய மறைமாவட்டத்தின் மகிழ்ச்சிகரமான வெள்ளிவிழா நிகழ்வில் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களின் பிரதிநிதியாகக் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் அவரது தந்தைக்குரிய வாழ்த்துக்களையும், ஊக்குவிப்பையும், ஆசிரையும் உங்களுக்கு அளித்து நிற்கின்றேன். விசுவாசத்திற்கு வீரமுடன் சான்றுபகர்ந்த உங்கள் முன்னோரின் நினைவாலயமான இந்த இடத்தில் இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

புனிதர் பட்டத் திருப்பேராயத்தின் வழிகாட்டுதலைப் பின்பற்றி உங்கள் அன்புக்குரிய ஆயர் நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் புனிதர் பட்டத்திற்கான சட்டரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க நம்பிக்கையுடன் செபிப்போம்.

விசேடமானதும், மகிழ்ச்சியானதுமான இந்த மீள்நிகழ்வை நாம் ஆனந்தக் கண்ணீருடனும், அதேவேளை வேதனை, நம்பிக்கை மற்றும் பயம் நிறைந்த கண்ணீருடனும் கொண்டாடுகின்றோம்.

இறைவனின் அருளுடன் தொடர்புகொள்ளுதலில் எம்மிடையே காணப்படும் குறைபாட்டின் மட்டில் நாம் விழிப்புள்ளவர்களாயிருந்தாலும், கடந்த 25 ஆண்டு காலமாக அவர் எம்மீது பொழிந்து வருகின்ற அளவிடற்கரிய அருள் வளங்களுக்கு நன்றிகூற மறவாதிருப்போம். விசேடவிதத்தில் ஆன்மீக வளங்கள், எமது ஆலயங்களில் போதிக்கப்பட்ட அவரது தெய்வீக வார்த்தைகள், நாம் பெற்றுக்கொண்ட அருட்சாதனங்கள், விசேடமாகத் திருமுழுக்கு, நற்கருணை ஆகிய அருட்சாதனங்கள், எண்ணிறைந்த துறவற, குருத்துவ அழைத்தல்கள், திருமணம், ஒப்புரவு ஆகிய அருட்சாதனங்கள் அனைத்திற்காகவும் நன்றிப் பண் பாடுவோம்.

நாம் பெற்றுக்கொண்ட உடல் நலன்கள், நாளாந்த உணவு மற்றும் ஏனைய அனைத்து நலன்களுக்காகவும் இந்த நிகழ்வின்போது நன்றி நவில்வோம்.

இன்றைய சூழ்நிலையில் எம்மால் முடியாத – ஆனால் இலங்கை நாயகியான மரியன்னையின் பரிந்து பேசுதலால் எமது பிரதேசத்திற்கும், எமது நாட்டிற்கும், அதிகம் தேவையான ஒப்புரவையும், அமைதியையும் அருளும்படி அவரிடம் வேண்டுவோம். நான் மீண்டும் கூறுகின்றேன்! நம்பிக்கையுடனும், நல்லெண்ணத்துடனும் இந்த மகிழ்ச்சி நிறைந்த விழாவைக் கொண்டாடுவோம்.

எமது தெருக்கள், எமது சமுத்திரங்கள், எமது ஆலயங்கள் மற்றும் எமது வழிபாட்டிடங்கள் யாவற்றிலும் இரத்தக்கறை படிந்துள்ளது. இந்த இரத்தம் இறைவனை நோக்கிக் கூக்குரலிடுகின்றது!

எமது தெருக்கள், எமது சமுத்திரங்கள், எமது ஆலயங்கள் மற்றும் எமது வழிபாட்டிடங்களில் படிந்துள்ள இரத்தக்கறைகளைத் துடைக்க யாரால் இயலும். இயேசுவால் மட்டுமே இயலும் என்று எமது விசுவாசம் கூறுகின்றது. எம்மை எமது தந்தையான இறைவனுடனும், ஒருவர் ஒருவருடனும் ஒப்புரவாக்கவே இயேசு வந்தார். திருச்சபைத் தாயானவள் இயேசுவின் பெயரால் ஒப்புரவிற்கும், மனமாற்றத்திற்கும் மனுக்குலத்திற்கும் அழைப்பு விடுத்தல் வேண்டும். இறைவனின் பெயரால் மேய்ப்பர்கள் மிகத்தெளிவாகவும், உரத்த குரலிலும் பின்வருமாறு அறிவிக்க வேண்டிய பணியையும், கடமையையும் கொண்டுள்ளார்கள். உங்கள் சகோதரனின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கூக்குரலிடுகின்றது.



இறைவனின் பெயரால் இரத்தம் சிந்துதலை நிறுத்துங்கள், மனம்மாறி ஒப்புரவாகுங்கள்."

அன்பான சகோதரர், சகோதரிகளே! நீங்கள் யாராயிருந்தாலும் இரத்தம் சிந்துதலுக்கு உதவிபுரிவதற்கான சோதனைக்கு உட்படுவீர்களானால் திருச்சபையின் குரலுக்குச் செவிமடுங்கள். இது ஒரு பகைவனின் குரலோ அன்றேல் ஒரு அரசியல் எதிரியின் குரலோ அல்ல: மாறாக இது ஒரு அன்னையின் குரல். பலிக்கடாக்களாக்கப்பட்டவர்களின் அழுகைக்குரலைச் சில சமயங்களில் தனது சொந்தக் குரலாக்கிப் பின்வரும் திருப்பாடல் வழியாக அவள் செபிக்க வேண்டியதாவது: "ஆண்டவரே! வன்செயலில் ஈடுபடும் மனிதரின் கரங்களைத் தடுத்து நிறுத்தியருளும்".

மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்பை உடையவர்கள் மனித உரிமைகளுக்காகவும், மனிதர்களின் நீதியான ஆவல்களுக்காகவும், சர்வதேச சமூகத்தின் உதவியுடன் அமைதிக்கான வழிகளைக் கையாண்டு சண்டை சச்சரவுகளை நிறுத்துவதற்காகவும், தைரியத்துடனும், ஞானத்துடனும் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இலங்கையிலும், மன்னாரிலும் வதியும் இயேசுக்கிறிஸ்துவின் திருச்சபையாகிய சிறு மந்தையே, நீங்கள் இறைவனோடு கொள்ளும் ஐக்கியத்தினதும், அனைத்து மக்களுடனும் கொள்ளும் ஒன்றிப்பினதும் அடையாளமாகவும், கருவியாகவும் இருக்க அழைக்கப்பட்டுள்ளீர்கள்".

இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இவ்வேளையில் நாம் எமது அன்புக்குரிய பரிசுத்த தந்தை 16ம் பெனடிக்ற்றால் முதன்முதலாக வெளியிடப்பட்ட சுற்றுமடலில் காணப்படும் வார்த்தைகளினால் ஊட்டம் பெற்று உற்சாகப்படுத்தப்படுகின்றோம். இம்மடல் கிறிஸ்தவ வெளிப்படுத்தலின் மையச்செய்தியை அறிவிக்கும் பணியை எமக்கு நினைவூட்டுகின்றது. "கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை அறிந்துள்ளோம். அதனை நம்புகின்றோம். கடவுள் அன்பாய் இருக்கிறார்." (1 யோவான் 4:16)

உலகளாவிய அமைதிக்காக அரசியல் மட்டத்தில் இயங்குவது திருச்சபையின் பணியல்ல. மாறாக அது அரசாங்கத்தின் முதன்மையான பணியாயிருக்கின்றது. இருப்பினும் இந்த இலட்சிய உணர்வும், நம்மிடையேயுள்ள ஒன்றிப்பும், அயலார் மட்டிலான அன்பும், மனுக்குலத்திற்கு எடுத்துக்காட்டாகவும், உணர்வுகளின் ஊற்றாகவும், தவிர்க்க முடியாத சக்தியாகவும் உள்ளது.

மடு அன்னையின் பரிந்து பேசுதலால் அமைதியின் அரசர் எமக்குத் துணை புரிவாராக, ஆமென்.

## இரத்தினபுரி மறைமாவட்டத்திற்கு ....

1ம் பக்கத் தொடர்ச்சி

கண்டி புனித யோசப் சிறிய குருமடத்திலும், கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்திலும் இவர் பயின்று மெய்யியலிலும், இறையியலிலும் கலைமாணிப் பட்டங்களைப் பெற்றார்.

1985ம் ஆண்டு ஓகஸ்ட் 3ம் திகதி கண்டி மறைமாவட்டக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

1985 – 1987 வரை நுவரெலியாவின் உதவிப் பங்குத்தந்தையாகவும் 1986லிருந்து மஸ்கெலியாவில் உதவிப் பொறுப்பாளராகவும் 1987 – 1989 வரை மஸ்கெலியா பங்குத் தந்தையாகவும் பணிபுரிந்தார். 1989 – 1990 வரை அயர்லாந்தில் திருவழிபாடு பற்றிய உயர்கல்வியை மேற்கொண்டு டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். 1990 – 1997 வரை கண்டி சிறிய குருமட அதிபராகப் பணிபுரிந்தார். 1990 – 1999 வரை இவர் கண்டி மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழுவின் இயக்குனராகவும் 1992 – 1995 வரை தேசிய திருவழிபாட்டு ஆணைக்குழுவின் தேசிய இயக்குனராகவும் பணிபுரிந்தார். 1997 – 1999 வரை கேவத்த பங்குத் தந்தையாகவும் 1999 தொடக்கம் இன்றுவரை கண்டி அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார்.

## துறவற வாழ்வில் வெள்ளி விழா ....

1ம் பக்கத் தொடர்ச்சி

இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/ உயிலங்குளம் றோ.க.த.க. பாடசாலையிலும் இடைநிலை மற்றும் உயர்நிலை கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் கற்றார். தனது துறவற வாழ்வின் முதல் வாக்குத்தத்தத்தை 14.12.1980ல் தூத்துக்குடியிலும் நித்திய வாக்குத்தத்தத்தை 15.08.1987ல் கொழும்பிலும் பெற்றார்.

இவரது கல்வி மேம்பாட்டின் காரணமாக 1987ல் தான் கல்வி கற்ற பாடசாலையிலேயே முதல் ஆங்கில ஆசிரிய நியமனத்தைப் பெற்றார். இங்கு 10 வருடங்கள் சேவையாற்றியபின் 1998ல் இருந்து இன்றுவரை கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் மகா வித்தியாலத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். இவர் இளங் கலைமாணிப்பட்டத்தையும் (B.A) கல்வித்துறையில் டிப்ளோமா பட்டத்தையும் (Dip in Ed.) முதுமாணிப் பட்டத்தையும் (M.Ed) பெற்றுள்ளார்.

சிறந்த ஆளுமையும் அறிவும், நிர்வாகத்திறனும், நேர்கொண்ட பார்வையும், அயராத அர்ப்பணிப்பும் கொண்ட அருட்சகோதரரை நீடிய காலம் இறைபணியாற்ற இறையாசீர் வேண்டி வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்.

## வத்திக்கானில் பணிபுரியும் ......

1ம் பக்கத் தொடர்ச்சி

நிறைவு வருட எதிர்பார்ப்பிற்கேற்ப, காவலர் வரலாறு படைத் தளபதியான கிறிஸ்ரியன் றொலாண்ட் மாஷல் றிச்சாட் என்பவரால் எழுதப்பட்டு கார்த்திகை 9ம் நாள் வெளியிடப்பட்டது.

தற்போது சுவிஸ் நாட்டவர்களான 110 ஆண்கள் காவலர்களாகக் கடமையாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவர்கள். குறைந்தது 5 அடி 8 அங்குலம் உயரமுடையவர்களாகவும், மற்றும் மாசுபடாத, நற்பெயர் பெற்றவர்களாகவும், 30 வயதிற்குக் குறைந்தவர்களாகவும், சேவையை ஆரம்பிக்கும்போதும் சுவிஸ் காவலராகக் கடமையாற்றும் காலத்திலும் திருமணமாகாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

எதிர்வரும் சித்திரை 7ம் திகதிக்கும், வைகாசி 4ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட முன்னைய காவலர்கள், 1506ம் ஆண்டில், தங்களது முன்னோர் சென்ற பாதை வழியாக சுவிஸ்சலாந்திலிருந்து உரோமாபுரிக்குப் பவனியாகச் செல்வர்.

# மாணவர் பக்கம்

## க.பொ.த. சாதாரணதர மாணவர் பரீட்சை வழிகாட்டி - 2006



## கத்தோலிக்க திருமறை

**இவ்வினாக்களுக்கான விடைகள் தரப்படவில்லை. மாணவர்கள் தாமே விடைகளை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.**

*தொகுப்பு: திருமதி பயஸ் ரதி பீரிஸ்,*
*ஆசிரிய ஆலோசகர்,*
*வலயக் கல்விப் பணிமனை, மன்னார்.*

### 1. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக?

1. புனித லூக்காஸ் நற்செய்தியின் அடையாளம்?
*அ) கழுகு ஆ) எருது இ) சிங்கம் ஈ) மனிதன்*
2. புனித லூக்காவின் பிறப்பிடம்?
*அ) அந்தியோக்கியா ஆ) பலஸ்தீனா*
*இ) சமாரியா ஈ) ஜெருசலேம்.*
3. புனித லூக்காஸ் அடக்கம் செய்யப்பட்ட இடம்?
*அ) கொன்ஸ்தாந்திநோபிள் ஆ) உரோம்*
*இ) ஜெருசலேம் ஈ) பலஸ்தீனா*
4. புனித லூக்காஸ் நற்செய்தி எழுதப்பட்ட மொழி?
*அ) அரமெய்க் மொழி ஆ) கிரேக்க மொழி*
*இ) எபிரேய மொழி ஈ) இலத்தீன் மொழி*
5. புனித லூக்காஸ் யாருடைய சீடன்?
*அ) இராயப்பரின் ஆ) சின்னப்பரின்*
*இ) அருளப்பரின் ஈ) இயேசுவின்*
6. பழைய ஏற்பாட்டின் இறுதி இறைவாக்கினரும், புதிய ஏற்பாட்டின் முதல் இறைவாக்கினருமாக விளங்குபவர்?
*அ) சாமுவேல் ஆ) எலியாஸ்*
*இ) திருமுழுக்கு யோவான் ஈ) யோனாஸ்*
7. "இதோ! நான் என் தூதனை அனுப்புகின்றேன். அவர் எனக்கு முன் உமது வழியை ஆயத்தம் செய்வார்" திருமுழுக்கு யோவானைப் பற்றிய இவ் இறைவார்த்தையைக் கூறியவர் ?
*அ) ஏசாயா ஆ) எசேக்கியேல் இ) மலாக்கி ஈ) இசையாஸ்*
8. திருமுழுக்கு யோவானின் பிறப்பு ஒரு புதுமையினூடாக நிகழ்ந்தது எனக்கூறும் நற்செய்தி எது?
*அ) மத்தேயு ஆ) மாற்கு இ) லூக்காஸ் ஈ) அருளப்பர்.*
9. "குழந்தாய், நீ உன்னத கடவுளின் இறைவாக்கினன் எனப்படுவாய்" புனித லூக்காஸ் நற்செய்தியில் காணப்படும் இவ் இறைவார்த்தை?
*அ) மரியாவின் பாடல் ஆ) சக்கரியாசின் பாடல்*
*இ) எலிசபெத்தின் பாடல் ஈ) வானதூதர்களின் பாடல்*
10. புனித லூக்காவினால் கூறப்படும் முதல் புதுமை நடைபெற்ற நகரம்?
*அ) ஜெருசலேம் ஆ) கப்பர்நகூம்*
*இ) நசரேத் ஈ) பெத்தலேகம்*

### 2. இறைவார்த்தைகளைப் பூர்த்தி செய்க?

1. குரல் ஒலி ஒன்று முழங்குகின்றது. பாலைநிலத்தில் ..................... ஆயத்தமாக்குங்கள். பாழ்நிலத்தில் நம் கடவுளுக்காக .............. ஒன்றைச் சீராக்குங்கள். ............... எல்லாம் நிரப்பப்படும். ........... யாவும் தாழ்த்தப்படும். கோணலானது ............ கரடுமுரடானது சமதளமாக்கப்படும் (எசாயா 40:3-4)

2. விரியன் பாம்புக்குட்டிகளே! வரப்போகும் சினத்தில் இருந்து .............. இயலுமென .......... சொன்னவர் யார்? ............ எங்களுக்குத் தந்தை என உள்ளத்தில் சொல்லத் தொடங்காதீர்கள் (லூக்கா 3:7-8)

3. வானதூதர் அவர்களிடம் அஞ்சாதீர்கள்! இதோ .............. மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை .............. ................ இன்று .............. மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக ................ ஊரில் பிறந்துள்ளார். (லூக்கா. 2:10)

4. ஆண்டவரின் ஆவி என் மேலே. ஏனெனில் என்னை ................ செய்துள்ளார். எளியோருக்கு ................... அறிவிக்கவும், சிறைப்பட்டோர் ................ அடைவர். பார்வையற்றோர் ................ என முழக்கம் இடவும், ஒடுக்கப்பட்டோரை .................. செய்து அனுப்பவும், ஆண்டவர் ............. ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பி உள்ளார். (லூக்கா. 4:18-19)

5. உன் முழு .................... முழு உள்ளத்தோடும், முழு ................. முழு மனத்தோடும், உன் ........... , ................ அன்பு கூருவாயாக. உன்மீது நீ அன்பு கூர்வது போல, உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக. (லூக்கா. 10:27)

### 3) சுருக்கமான விடை எழுதுக?

**(விடைகளை தரம் 11 கத்தோலிக்க திருமறையில் கண்டுபிடிக்கவும்)**

1. உண்மையான மனஸ்தாபம் என்றால் என்ன? (விடை - பக்கம் 84)
2. புனித லூக்கா எங்கே? எச்சந்தர்ப்பத்தில் கிறீஸ்தவ மதத்தைத் தழுவினார்?
3. மத்தேயு நற்செய்தியின் நோக்கம் என்ன?
4. ஒத்தமை நற்செய்திகள் எவை?
5. நற்செய்தி என்றால் என்ன? (விடை - பக்கம் 69)
6. இறுதியாக எழுதப்பட்ட நற்செய்தி எது? அதன் நோக்கம் என்ன? (விடை - பக்கம் 70)
7. புனித லூக்கா, புனித பவுலின் சீடர் என்பதற்கு உதாரணம் தருக? (விடை - பக்கம் 67)
8. திருமுழுக்கு யோவான் முன்வைத்த புதிய சமுதாயக் கொள்கைகள் எவை? (விடை - பக்கம் 84)
9. திருமுழுக்கு யோவான் அரச ஊழியர்களுக்குக் கூறும் செய்தி என்ன? (விடை - பக்கம் - 87)
10. பாடிஸ்வா என்பதன் கருத்து என்ன? (விடை - பக்கம் - 92)
11. இயேசுவின் திருமுழுக்குடன் தொடர்பான அடையாளங்களைத் தருக?
12. இயேசுவின் சோதனைகள் மூன்றும் எதனை வெளிப்படுத்துகின்றன? (விடை - பக்கம் - 96)
13. இயேசுவின் திருமுழுக்கு வழியாக நாம் கற்றுக்கொள்ளக் கூடிய விடயங்கள் எவை? (விடை - பக்கம் - 95)
14. இயேசு திருமுழுக்குப் பெற்றபொழுது ஒலித்த குரல் எது? (விடை - பக்கம் - 90)
15. இயேசுவின் மூன்றாவது சோதனையையும், அவர் அளித்த பதிலையும் எழுதுக?

### 4. சந்தர்ப்பம் கூறுக?

1. "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக"
யாரால்? ................. யாருக்கு? ..............
2. "உன் பெயர் பாறை. இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்"
யாரால் ? .................... யாருக்கு? .................
3. "அஞ்சாதே! இன்று முதல் நீ மனிதனைப் பிடிப்பவன் ஆவாய்"
யாரால் ? .................. யாருக்கு? ...................
4. "ஆண்டவரே! நீர் என் இல்லத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை சொல்லும். என் ஊழியன் குணமடைவான்."
யாரால் ? .............. யாருக்கு? ..................
5. "வைத்தியன் நோய் அற்றவர்க்கன்று. நோயுற்றவருக்கே தேவை"
யாரால்? ..................... யாருக்கு? .................

### 5) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக?

1. இயேசுவின் 3 சோதனைகளை எழுதுக? இயேசு அச் சோதனைகளுக்கு அளித்த பதில்கள் யாவை?
2. புனித லூக்கா நற்செய்தி இரக்கத்தின் நற்செய்தி என அழைக்கப்படக் காரணம் என்ன?
3. இன்று திருமுழுக்கு யோவான் இருந்தால், மாணவ சமுதாயத்திற்கு கூறக்கூடியது என்ன?
4. புனித லூக்கா தனது நற்செய்தியைப் புறவினத்தாருக்காகவே எழுதினார் என்பதை ஏற்றுக்கொள்வதற்கான ஆதாரங்கள் எவை?
5. இன்று சமுதாயத்தால் ஒதுக்கிவைக்கப்பட்ட அப்பாவி மக்கள் மீது நீர் எடுக்கும் நடவடிக்கைகள் எவை?
6. லூக்காவிடம் இருந்து, எமக்குக் கிடைக்கும் செய்திகள் 4 எழுதுக?
7. இயேசுவின் இரண்டாம் சோதனை மூலம் நீர் பெறும் படிப்பினை என்ன?
8. "ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும், தன் ஆன்மாவை இழந்துவிட்டால் அதனால் என்ன பயன்?" இதன் மூலம் நீர் விளங்குவது என்ன?
9. திருமுழுக்கு யோவானின் பண்புகள் ஐந்து எழுதுக?
10. திருமுழுக்கு யோவானின் படிப்பினைகள் எவை? ( 15 வரிகளில் எழுதுக)
11. இயேசுவின் திருமுழுக்கின் மூலம் நீர் பெறும் செய்தி என்ன? (பக்கம் 95)
12. இயேசுவின் இரண்டாம் வருகை பற்றி புனித லூக்கா நற்செய்தி கூறும் அடையாளங்கள் எவை?
13. இயேசு இறுதித் தீர்ப்பின்பொழுது மனிதர்களை எச்செயல்களின் அடிப்படையில் தீர்ப்பிடுவார்?
14. இயேசுவின் பிள்ளைப் பருவ வாழ்வின் மூலம் நீர் பெறும் படிப்பினைகள் எவை?
15. மெசியாவின் வருகை பற்றிக் கூறும் பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் 5 எழுதுக?

### உங்களுக்குத் தெரியுமா?

1. விவிலியத்தில் மொத்த நூல்கள் - 73
2. பழைய ஏற்பாட்டில் மொத்த நூல்கள் - 46
3. புதிய ஏற்பாட்டில் மொத்த நூல்கள் - -27
4. விவிலியத்தில் மொத்த அதிகாரங்கள் - 1334
5. பழைய ஏற்பாட்டில் மொத்த அதிகாரங்கள்- 1074
6. புதிய ஏற்பாட்டில் மொத்த அதிகாரங்கள் - 260
7. விவிலியத்தில் மையப்பகுதி (அதிகாரம்) - தி. பா. 137,138
8. பழைய ஏற்பாட்டில் மையப்பகுதி - திருப்பாடல் 7, 8
9. புதிய ஏற்பாட்டில் மையப்பகுதி (வச.) - தி. பணி 7:13 -14
10. விவிலியத்தில் நீண்ட புத்தகம் - திருப்பாடல்கள்
11. விவிலியத்தில் குறுகிய புத்தகம் - 2 யோவான்
12. விவிலியத்தில் நீண்ட அதிகாரம் - திருப்பாடல் - 118
13. விவிலியத்தில் குறுகிய அதிகாரம்- திருப்பாடல் 116
14. விவிலியத்தில் நீண்ட வசனம் - எஸ்தர் 8:9
15. விவிலியத்தில் குறுகிய வசனம் - மத். 11:15
16. புதிய ஏற்பாட்டில் மொத்த வசனங்கள் - 7972
17. புதிய ஏற்பாட்டில் நீண்ட அதிகாரம் - லூக்கா 1
18. விவிலியம் (சில பகுதிகள்) மொழி பெயர்க்கப்பட்ட மொழிகள் - 1928
19. விவிலியம் முழுமையாக மொழி பெயர்க்கப்பட்ட மொழிகள் - 314
20. புதிய ஏற்பாடு மட்டும் மொழி பெயர்க்கப்பட்ட மொழிகள் - 633

## தேசியப் போட்டியில் பங்கேற்பு



மன். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் சிவரட்ணராஜா நரேஸ்குமார் (தரம் - 12 கணிதப் பிரிவு) கடந்த 20.01.2006 அன்று கொழும்பு இசுருபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற டயலொக் G. S.M புலமை பரிசில் நிகழ்ச்சியில் மன்னார் மாவட்டத்தில் தெரிவாகி கலந்துகொண்டார். அத்துடன் 21.01.2006 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ACCA – SLT இணைந்து நடாத்தும் HIGH Q TV QUIZ போட்டியில் 2ம் சுற்றிலும் கலந்துகொண்டார்.

இவர் இந்தப் போட்டியில் 1ம் சுற்றில் இடம்பெற்ற எழுத்துப் பரீட்சையில் 27/40 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையில் முதல் 50 மாணவர்களில் ஒருவராகத் தெரிவாகி இந்த இரண்டாம் சுற்றுத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

## 5ம் ஆண்டு – புலமைப்பரிசில் பாராட்டு விழா

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. ஆபேல் றெவ்வல் அவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட புலமைப் பரிசில் பாராட்டு விழா WORLD VISION அனுசரணையுடன் கடந்த 26.01.2006 அன்று மன்னார் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது. 700 மாணவர்களுக்கு சான்றிதழ்களும், 70 மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விப் பணிமனை ஊழியர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி, சித்தியடைந்த மாணவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

## மன்னார் பாடசாலைகள் முதன்மை வெற்றி



வீரகேசரி தேசிய பத்திரிகையின் பவள விழாவை முன்னிட்டு, நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான கட்டுரைப் போட்டியில் மன். புனித சவேரியார் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. டேவிட் தர்ஷினி அவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று ரூபா 25,000/= பரிசுத் தொகையையும் பெற்றுக்கொண்டார்.



அதேபோன்று மன். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் ததேயு றீன்சி பீரிஸ் மூன்றாம் இடத்தைப் பெற்று 10,000/= பரிசுத் தொகையையும் பெற்றுக்கொண்டார்.
மேற்படி அகில இலங்கை ரீதியான போட்டியில், எமது மாணவரின் முதன்மை வெற்றி குறித்து மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் வாழ்த்துச் செய்திகளைத் தெரிவிக்கின்றார். புதிய கல்வி ஆண்டில் மன்னார் கல்வி வலயம் எதிர்கொண்ட முதன்மை வெற்றிச் செய்தி இதுவாகும்.
**தகவல் : திருமதி. பயஸ் ரதி பீரிஸ், ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வித் திணைக்களம், மன்னார்.**

## பழைய ஏற்பாட்டு நூல்களின் சூத்திரம்

*(பழைய ஏற்பாட்டு நூல்களை எளிதில் மனனம் செய்ய)*

1. ஆதி யாத்திரை லேவிக்கு எண்ணும் உப யோசுவா
நீதிபதி ரூத்துக்கு சாமுவேலும் அரசராம்.
2. நாள் முழுதும் எஸ்ராவும் நெகமியாவும் தொபியாசும்
யூதித் எஸ்தர் யோபு கூட சங்கீதங்கள் பாடுவர்.
3. பழமொழி சங்கத்திற்கு உன்னத ஞானம் சீராகும்
இசையாசும் எரேமியாசும் புலம்ப என்ன காரணம்?
4. பாருக்கும் எசேக்கியலும் தானியேலும் ஓசேயும்
யோவேலும் ஆமோசும் அப்தியாசும் கூடவே
யோனாமிக்கே நாகூ கூட அபாக்கூக்கும் சேரவே
செப்யோனியாஸ் ஐயாவுமே ஆகாயோடு பறந்தாரே
சக்கரியாசும் மலாக்கியாவும் மக்கபேரை அடைந்தாரே

## புதிய ஏற்பாட்டு நூல்களின் சூத்திரம்

*(புதிய ஏற்பாட்டு நூல்களை எழுதில் மனனம் செய்ய)*

செப்பருஞ்சீர் மத்தேயு மாற்கு லூக்கா
சீர் அருளர் சீடர் பணி உரோமை கொரிந்து
ஒப்பருஞ்சீர் கலாத்தியரே எபேசி பிலிப்பி
ஓதருஞ்சீர் கொலோசிதெச லோனிக் தீமோத்
அப்பெருஞ் சீர் தீத் பிலமோன் எபிரேயர்க்கு
யாகப்பர் இராயப்பர் அருளர் யூதா
இப்பெருஞ்சீர் வெளிப்பாடு இருபத்தேழும்
இன்னூலாம் நற்செய்தி புது ஏற்பாடே.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

**விறு விறுப்புத் தொடர் 25**

எழுத்துருவாக்கம்
சொல்லின் செல்வர்
அமுது

## மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று



300 பெண்களுக்கு முன்னால் லாஸ்வேகல் என்ற அமெரிக்கப் பட்டினத்தில் உரையாற்ற அன்னை திரேசா எழுந்து நின்றார். அந்தப் பட்டினம் சூதாட்டம், இரவுக் களியாட்ட விடுதிகள், அவசர விவாகரத்துக்கள் என்பவற்றுக்குப் பேர்போன இடம். அந்தப் பெருங்கூட்டத்தில் சேர்ந்திருந்தவர்கள் பெரும்பாலோர் கத்தோலிக்கர் என்றும் சொல்ல முடியாது. அன்னை திரேசாவிடம் இந்திய கடவுச்சீட்டு ( passport) என்ற ஓர் ஆயுதம் தவிர வேறொன்றுமில்லை.

அவர் அணிந்திருந்த வெள்ளைப் பருத்தித் துணியும் மலிவான காலணியும் நாகரிகத்தின் வானந்தடவிய மகளீருக்குப் பிரமிப்பளித்தன.

1960இல் வெளிநாடுகளிலிருந்து அன்னையவர்களுக்கு அழைப்புகள் வந்தன. அவருடைய பணிகளைப் பற்றி அறிய ஆவல் கொண்டனர் பலர். தமக்குப் பண உதவியும் பொருள் உதவியும் செப உதவியும் செய்து வந்த அமெரிக்கர்களை நினைவுகூர்ந்தார் அன்னை.

1929இல் இந்தியாவுக்கு வந்த பின்பு முதல் முறையாகப் பயணம் செய்தார். நாகரிக மேடையில் எழுந்து நின்று இரு கைகளையும் குவித்து இந்தியப் பாணியில் வணக்கம் செய்தார்.

"நான் இதற்கு முன்பு ஒரு பொது மேடையில் உரை நிகழ்த்தியதே இல்லை. உங்கள் முன்னிலையில் நான் பேசுவதுதான் முதலாவது உரை. இறைவன் வறியவர்களிலும் வறியவர்களுக்கு காட்டி வருகின்ற இரக்கம் நிறைந்த அன்புக் கதையைச் சொல்ல வந்தேன். அது இறைவனின் அருள்." தொடர்ந்து அன்புப் பணியாளருக்கு உதவி புரிகிறவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்.

"நாங்கள் இந்தியாவில் பிள்ளைகளை நேசிக்கிறோம். தாய்மார் வறுமையானவர்களாய் இருந்தாலும் பிள்ளைப் பாசம் மிக்கவர்கள். ஒரு பெண் - அவள் ஒரு தொழுநோயாளி. தீத்தக்கார் என்ற தொழுநோயாளர் பராமரிப்பு நிலையத்திலிருந்து நெடுந்தூரத்தில் வசித்தவள். குட்டைரோகிகளில் எங்கள் சகோதரிமார் எடுக்கும் அக்கறையைப் பற்றி கேள்விப்பட்டாள். அவளுக்கு ஒரு குழந்தை அதன் பெயர் பக்தி. பக்தி என்றாள் இறையன்பு என்பது கருத்து. தனது குழந்தைக்கு இந்த நோயால் அபாயம் வரக்கூடாது என்று அவள் தீர்மானித்தாள்.

நெடுந்தூரம் நடந்து குழந்தையைக் கொண்டு வந்தாள். குழந்தையின் உடலில் வெள்ளைப் பொட்டுக்கள் காணப்பட்டன. அவை குட்டரோகத்தின் முதற்குறிகள். தாயின் கால்களை நோய் அரித்துத் தின்றிருந்தது. கைகளிலும் விரல்கள் பல இல்லை. அப்படியிருந்தும், மன வல்லமையும், அன்பும் நிறைந்த இந்தப் பெண் பல மைல் தூரம் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு எங்கள் சகோதரிகளிடம் வந்தாள். ஏன்? தன் பிள்ளை அந்தக் கொடிய நோயினால் தாக்கப்படக்கூடாது என்று அத்தாயன்பு அவளை நச்சரித்தது.

பக்தியைப் பரிசோதனை செய்தார்கள், அன்புப் பணியாளர் சபைச் சகோதரிகள். பிள்ளைக்கு நோயில்லை என்று அறிவித்தார்கள். தாய் நெடுந்தூரத்துக்குத் திரும்பிப் போவதன் வேதனையை நினையாமல் மகிழ்ச்சியினால் கண்ணீர்த் துளிகளை உருட்டினாள். இவ்வாறான செய்திகள் நாளாந்தம் நடப்பவை. சொல்ல நீண்டு கொண்டே போகும். அந்த மக்கள் பகிர்ந்துகொள்ளும் மகிழ்ச்சியையும், நல்வாழ்வையும் நீங்களும் அறிந்து பங்குபற்றுங்கள்."

அன்னை திரேசா தொடர்ந்து உரையாற்றும்போது, மேலும் உதவி கேட்பதை விரும்பவில்லை.

"நான் இரந்து கேட்பதில்லை. எங்கள் தொண்டு ஆரம்பமான காலத்தில் இருந்தே நாங்கள் யாசகம் கேட்டதில்லை. ஆனால் நான் மக்களிடம் நேரில் செல்வேன். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்களிடம் ஒன்று சொல்வேன். 'உங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்புத் தர இங்கே வந்திருக்கிறேன். கடவுளுக்கு மன மகிழ்ச்சியளிக்கக் கூடியதாய் ஏதாவது செய்யுங்கள்' என்பேன். அவ்வாறு இறைவனைப் பிரியப்படுத்த விரும்புகிறவர்கள் என் முன்னே வந்து நிற்பார்கள்."

அன்னையின் உரை முடிவுற்றதும் காட்சிப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ள மண்டபத்துக்குச் சென்றார். அங்கே ஒரு கம்பம் நிறுத்தியிருந்த இடத்திற்கு அருகில் இருந்தார். முன்னோக்கி, வந்தவர்களுடன் ஒவ்வொருவராய் அழைத்து உரையாடினார். அங்கே கிடந்த சீலைப்பை ஒன்றினுள் அவர்கள் கை நழுவிச் செல்வதை அவர் மட்டிடாமல் இருக்கவில்லை. அந்தப் பை நிறைந்ததால், அதை அடிக்கடி வெறுமையாக்க வேண்டியதாயிற்று. லாஸ்வேகஸ் என்ற இடத்தைவிட்டு, நீங்குமுன் ஒரு நினைவு மலரும் வெளியிடப்பட்டிருந்ததையும் அன்னையவர்கள் அவதானித்தார்கள்.

நெவாடா வனாந்திரத்தைப் பார்வையிடச் சென்றார். மௌனமான தியானத்தில் முள்ளுக் கற்றாளையின் அருகில் நீண்ட நேரம் போக்கினார். அந்தக் கற்றாளையில் ஒரு முள்முடியைப் பின்னி அதனைக் கல்கத்தாவுக்குக் கொண்டு வந்தார். கல்கத்தாவில் மடத்துச் சிற்றாலயத்தின் சிலுவையில் அறையுண்ட ஆண்டவரின் தலையில் அந்த முள்முடி சூட்டப்பெற்றது.

அன்னை திரேசா லாஸ்வேகசில் இருந்து இல்லி நோயிஸ் என்ற மாகாணம் சென்றார். அங்குள்ளவர்கள் சேரிகளின் சிறந்த தேவைகளுக்கு நீர் வார்த்தவர்கள். அன்னை திரேசா அவர்கள் மத்தியில் இறைவன் தனக்குத் துணைபுரிந்த வரலாற்றைக் குறிப்பிட்டார்.

"எங்கள் கன்னியர் கூட்டமும், பிள்ளைகளும் ஒரு தேவைக்காக விடாமல் மன்றாடி வந்தார்கள். தாய்மாருக்கும், பிள்ளைகளுக்கும் மருத்துவமனைகள் ஆக்க வேண்டும் என்பதே எங்கள் விண்ணப்பம். அந்த வாரத்திலே அதற்கு விடை கிடைத்தது. முதல் நாளில் காலைக் கடிதங்களைப் பார்த்த வேளையில் இக்கூட்டத்தில் வந்திருக்கும் நீங்கள் தாய்மார், பிள்ளைகள் மருத்துவ நிலையத்துக்கு உதவி புரிவதாய் வாக்களித்திருந்தீர்கள். அன்று பிற்பகல் கிடைத்த கடிதத்தில் ஒரு ஆங்கில மங்கை, அதுவும் சிறந்த வைத்தியர், தான் வந்து பணியாற்ற விரும்புவதாய் எழுதியிருந்தார். மற்ற நாள் வந்த கடிதம் ஒன்றில் நான் பார்த்துக்கொண்டிருந்த நிலத்தை எங்களை ஏற்றுக்கொள்ளுமாறு எழுதியிருந்தது. எனவே இடமும், நிதியும், பணியாளும் கிடைத்தன. இவை எல்லாம் செபத்தின் பலன்களே!

கூட்டம் முடிந்த பின்னர் அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகருக்கு அன்னையை அழைத்துச் சென்றனர். அங்கே அமெரிக்க சமூகத்தில் சிலரின் துயரத்தைக் காண விரும்பினார். நியூயோர்க் சேரிகள் பக்கமாகச் சென்றபோது, நடைபாதையில் படுத்து, சுவரில் தலையைச் சாய்த்து அரைக் கண்ணில் கிடந்த ஒருவனைக் கண்டார். நாங்கள் இவருக்கு என்ன உதவி புரியலாம்? என்று கூட வந்தவரிடம் கேட்டார். அவர், "இவன் சாகவில்லை. வெறியில் இப்படிக் கிடக்கிறான்." என்றார். படுத்திருந்தவன் கண்ணைத் திறந்து கையை உயர்த்தி அகன்று போகுமாறு, சமிக்ஞை காட்டினான்.

விரைவாக அவ்விடத்தைக் கடந்தபோது, ஒரு தங்கும் இடம் (BOARDING House) ஒன்றில் அழுக்கான கோட்டுகளுடனும் கிழிந்த காற்சட்டைகளுடனும் அலங்கோலமான நிலையில் கிடந்த சிலரைக் காண நேர்ந்தது. அவர்களுடைய முகங்கள் விகாரமாயும், செயற்கையாயும் காணப்பட்டன. ஒருவருக்கு அவசர உதவி தேவையானபோது அவரைப் புறக்கணித்துத் தட்டிக் கழித்துப் போகும் வழக்கம் அன்னையிடம் இல்லை. கூட வந்தவர் விளக்கம் கொடுத்தார்.

"இவர்கள் நியூயோர்க் நகர காவலாளர் பொறுப்பில் உள்ளவர்கள். தேவையென்றால் வைத்தியசாலைக்கு அல்லது குடி மயக்கம் தீர்க்கும் நிலையத்துக்கு இவர்களை அழைத்துச் செல்வார்கள்" என்றதும் அன்னையின் மன அவலம் தீர்ந்தது. நியூயோர்க் நகரில் *உலக உடல்நல அமைப்பாண்மை* (WORLD HEALTH ORGANISATION) உறுப்பினர் ஒருவரைச் சந்திக்கச் சென்றார். அது ஐக்கிய நாடுகள் தாபனத்தோடு சேர்ந்தது.

கல்கத்தாவில் தொழுநோயாளருக்குத் தாங்கள் செய்துவரும், பணியை விபரித்தார். கண்ணீரைத் துடைத்துவிட்டு அந்த மனிதன், "இந்திய அரசாங்க மூலம் வேண்டிய பொருட்களை அனுப்பலாம்" என்றார். அவரே ஆரோக்கிய அமைப்பாண்மையின் ஆணையாளர் என்பதைச் சில காலத்தின் பின் திரேசா அறிந்துகொண்டார்.

நியூயோர்க் நகரில் இருந்து ஜேர்மனிக்கு வரும் வழியில் இங்கிலாந்தில் இறங்கினார். அங்கே அன்னையாருடன் நேச மனப்பான்மையுடன் பழகிய ஆன் பிளேக் அம்மையாரைக் கண்டார். கல்கத்தாவில் இருந்து வந்த வேறு வணிகர் பலரின் துணைவியார்களுடனும் தொடர்பு கொண்டார். அன்னையவர்களின் பணிகளையும் தேவைகளையும் ஆன் அம்மையார் நாட்டில் பரப்பிவிட்டார்.

பிரித்தானியத் தொலைக்காட்சியில் தோன்றியதோடு அவரை இங்கிலாந்து அறிந்துகொள்ள வாய்ப்பாயிற்று. பார்வையால் பால் வார்த்தார். பல நூறு கடிதங்கள் வந்து குவிந்தன. அன்னை திரேசா குழு ஒன்று அமைத்தனர். அது பின்னர் துணை ஊழியர்களின் சங்கமாயிற்று. ஜேர்மனியில் துன்பந் துடைக்கும் கிறிஸ்தவ அறநிலையத் தலைவர் அன்னையை வரவேற்றார். டெல்கி நகரில் மரணத்தின் பிடியில் வருந்துவோருக்கான இல்லம் அமைக்க முழுச்செலவையும் தாங்கள் பொறுப்பு ஏற்பதாக வாக்களித்தனர்.

அன்னையின் பயணத்தின் இறுதியில் இன்னும் இரண்டு முக்கியமான பணிகளை நிறைவேற்றவேண்டுமென்று உறுதிகொண்டார். அவை இரண்டும் உரோமை மாநகரில் நிறைவுபெற வேண்டியவை. கடந்த 30 ஆண்டுகளாக கண்ணிலே காணாத அருமைச் சகோதரன் லாசரைச் சந்திப்பது – பாப்பரசரைச் சந்தித்து அன்புப் பணியாளர் சபை அவருடைய நேரடியான பார்வையில் இடம்பெற வேண்டுமெனக் கேட்பது.

*(கங்கை தொடர்ந்து பாயும்)*

# உங்களுக்கு தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.33

தற்போது எமது மறையறிவுப் போட்டியில் அதிகமானோர் பங்குபற்றுவது குறித்து மகிழ்ச்சியாக உள்ளது. மன்னாவில் பல நல்ல விடயங்கள் பலரின் உழைப்பினால் வந்து கொண்டிருக்கின்றன. இதைப் பலர் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் இதற்காக உழைக்கின்றவர்களின் உழைப்பு பயனுள்ளதாகும். இதைப் பயன்படுத்துகின்ற உங்களுக்கு எமது வாழ்த்துக்கள். இப்போது எமது வினாக்களுக்கு வருவோம்.

***(இக்கேள்விகளுக்கான விடைகளை டிசம்பர் மாத மன்னாவில் கண்டுபிடியுங்கள்)***

1. 11வது உலக ஆயர் மன்றத்தின் பொது அமர்வு எப்போது ஆரம்பமாகியது?
2. கண்டியில் இயங்கிவந்த பேப்பல் குருமடம் எந்த ஆண்டு பூனா நகருக்கு மாற்றப்பட்டது?
3. திருத்தந்தையின் பயணங்களை திட்டமிடும் பணிக்கு திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ள பொதுநிலையினர் பெயர் என்ன?
4. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கிறிஸ்தவப் பத்திரிகையின் பெயர் என்ன?
5. உலக மக்கள் தொகையில் இந்துக்கள் எத்தனை விழுக்காடு?
6. உலக அளவில் மத சகிப்புத் தன்மையற்ற நாடு என விமர்சனத்திற்கு உள்ளாகி வரும் நாடு எது?
7. இயேசுவின் 30 வருட வாழ்க்கையைப் பற்றி கூறப்பட்டுள்ள ஒரு வார்த்தை என்ன?
8. திருக்குடும்ப கன்னியர் சபை எத்தனையாம் ஆண்டு யாரால் அடித்தளமிடப்பட்டது?
9. "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது" இவ்வசனம் எந்த நூலில் எத்தனையாம் அதிகாரத்தில் - வசனத்தில் உள்ளது?
10. யாழ். புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 31 இற்கான கேள்விகளுக்கு 43 பேர் விடையளித்திருந்தனர்.**
இவர்களுள் பரிசுக்குரியவராக தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி

**யே. மனாசே நோயல் குருஸ்,**
**இல. 32, நூறு வீட்டுத்திட்டம், பெரியகமம்,**
**மன்னார்.**

### பாராட்டுக்குரியவர்கள்

1. பி. கரோலின், திருக்குடும்ப கன்னியர் இல்லம், பாஷையூர்.
2. பி. பெனில்டஸ், தோட்டவெளி, மன்னார்.
3. றோகினி அருளப்பு, பெரிய முறிப்பு, குஞ்சுக்குளம்.
4. அ.மருசிலின், திருவடி இல்லம்,கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
5. அ. ஷறோமி, பெரியமுறிப்பு, முருங்கன்.
6. கிருபா ஆட்ஸ், முருங்கன் வீதி, நானாட்டான்.
7. எஸ். நதின், தரம் - 10, புனித சவே. ஆண்கள் கல்லூரி.
8. ம. சாள்ஸ் அன்ரனி, சூரியகட்டைக்காடு. நானாட்டான்.
9. நீ. அனெற்றா, பரிகாரிகண்டல், முருங்கன்.
10. பி. யூடிற் மார்த்தாள் டலிமா, 3ம் வட்டாரம், வங்காலை.

## வாழ்வுதயத்தின் 125 வீட்டுத் திட்டம்.....

12ம் பக்கத் தொடர்ச்சி

மேற்படி கிராம மக்களின் ஜீவனோபாயத் தொழில் விவசாயம், சிறுகைத்தொழில் முயற்சிகளாகும். இவர்களின் பிரதேசம் யுத்த சூழலில் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக இருந்துள்ளது. இக்கிராம மக்கள் 1985ம் ஆண்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்து மடு முகாமில் தஞ்சம் புகுந்தார்கள். மீண்டும் மாறிமாறி இடப்பெயர்வும் குடியமர்வுமாக இவர்களின் வாழ்க்கை ஓடிக்கொண்டே இருந்தது.

பின்னர் இக்கிராம மக்கள் பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி, கல்வி வளர்ச்சி போன்றவற்றில் மிகவும் பின்தள்ளப்பட்டவர்களாக பல ஆய்வுகளில் இருந்து காணப்பட்டமையால் 2004ம் ஆண்டு தமது கிராமத்திலேயே குடியேற வேண்டும் என ஒன்றுபட்டு, இறுதியாக இடம்பெயர்ந்து வசித்த ஜீவநகர் நலன்புரி நிலையத்தில் இருந்து தற்காலிக கொட்டகைகளை அமைத்து தமது கிராமத்திலேயே வாழ்க்கை நடாத்தி வருகின்றார்கள்.

இக்கிராம மக்களின் நலனில் அக்கறை வைத்து இவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக வாழ்வுதய நிறுவனம் 125 நிரந்தர வீட்டுத் திட்டத்தை சில தினங்களில் ஆரம்பிக்க உள்ளது.

## பரந்த மனம் கொண்ட .......

12ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. **P.** ஜேசுறாஜா அடிகளார் அவர்கள் உரையாற்றுகையில், இவ்வொன்றுகூடல் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வதற்கும், அவர்களுடன் உறவை வளர்த்துக் கொண்டு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் ஒரு நல்ல சந்தர்ப்பம், இதனை நாம் தக்கமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

ஆசிரியர்கள் தங்கள் பிரதேசங்களின் குறைநிறைகளை பகிர்ந்துகொண்டமை இந்நிகழ்வின் விசேட அம்சமாகும். பகிர்ந்துகொண்ட குறைகள் நிவர்த்தி செய்யக்கூடியனவாகவும் நிறைவுகள் ஏனைய பாடசாலை ஆசிரியர்களும் இனிவரும் காலங்களில் நடைமுறைப்படுத்தி தங்கள் பாடசாலையின் அபிவிருத்தியினை வளம்படுத்த வாய்க்காலாகவும் அமைந்திருந்தது. மன்னார் மறைமாவட்டத்தின் 7 பிரதேசங்களுக்கிடையில் சிறுவர்களை மையப்படுத்தி நாடகப் போட்டிகள் நடைபெற்று சிறந்த நாடகங்கள் தெரிவுசெய்யப்பட்டு இறுதிநாள் நிகழ்வில் அரங்கேற்றப்பட்டன.

# குடும்பக் குவலயம்

## முதியோர் எமது சொத்துக்கள்

- திரு. பா. றெஜீஸ், சூரியகட்டைக்காடு

ஒரு வீடு உறுதியாக இருப்பதற்கு அதன் அத்திவாரம் சரியாக இடப்பட்டிருக்க வேண்டும். அதுபோன்றே, இன்று முதியோராய் இருப்பவர்களால் போடப்பட்ட கல்வி, நற்பண்பு, ஒழுக்கம், இறைபக்தி முதலான அத்திவாரங்களால்தான் நாம் இன்று சமூகத்தின் பல உயர் பதவிகளிலும், சமுதாயப் பண்புடையோராகவும் வாழ முடிகிறது. இயேசுகூட பாறை மீது கட்டப்பட்ட வீடு உறுதியுடன் இருக்குமென்றார்.

இன்று எமது நாட்டின் சராசரி ஆயுட்காலமானது பெண்களுக்கு 77 வருடங்களாகவும், ஆண்களுக்கு 72 வருடங்களாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு விஞ்ஞான, மருத்துவ, சுகாதார வசதிகள் அதிகரிக்கும்போது மனிதரின் ஆயுட்காலமும் அதிகரிக்கும். இதனால் முதியோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கவே செய்யும்.

சமூகத்தின் பல நிலைகளிலும் செயற்பட்டு, சமூகத்தையும் இளைய தலைமுறையினரையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்ற நம் முதியோர்களிற் பலர் இன்று மதிப்பிழந்து சரியான கவனிப்பும், பராமரிப்புமின்றி வீடுகளில் முடங்கிக் கிடந்து வாடுகின்றனர். அவர்களின் பேச்சுக்கூட இன்று செல்லாக் காசாகிவிட்டது. அதேவேளை அரசாங்க ஓய்வூதியம் பெறுகின்ற முதியோர் தமது செலவிற்கென பிறரின் கையை எதிர்பார்க்க வேண்டிய தேவை குறைவாகவேயுள்ளது.

வாழ்வின் ஏணிப்படிகளாகத் திகழ்ந்தவர்கள் இன்று ஊன்று கோலுடன் தமது இல்லிடத்திற்குள்ளேயே நடமாடும் நிலையாகிவிட்டது. எம்மைப் பெற்று வளர்த்த பெற்றோர் வயதாகும்போது, அவர்களுடன் கடுகடுப்பாக நடந்துகொள்வதும், அவர்களிடமிருந்து சொத்துக்களைப் பெற ஆசைப்படுவதுடன், அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்துவிடவும் சிலர் பின்வாங்குவதில்லை. இந்நிலைக்கு யார் காரணம்?

சிலர் உலகம் போகின்ற நாகரீகப் பாணியில் வாழ முற்படுகின்றனர். இன்னும் சிலர், தம்மைப் போல, வசதி படைத்தவர்களுடன்தான் நட்பினை, கொடுக்கல் வாங்கல்களை வைத்துக்கொள்கின்றனர். 'எமக்கு அன்பு செய்பவர்களுக்கே அன்பு செய்தால், அதனால் வரும் பயன் என்ன? பாவிகளும் அவ்வாறே செய்கின்றனர்' என்றார் இயேசு.



சில முதியோர் தமது மூப்பின் காரணமாக வருந்துகையில் மாறாட்டமாக ஏதும் கூறிவிட்டால், அதனைக் கேலி செய்தும் தேவைப்பட்ட பொருட்களை வழங்க மறுப்பதும் நடக்கவே செய்கிறது. இன்னும் சிலர் கண்பார்வை மங்கியும், செவிப்புலன் இன்றியும், நடக்க முடியாமல் படுக்கையில் கிடக்கையில் அவர்கள் மனம் புண்படுமாறு எத்தனை கசப்பு வார்த்தைகளைக் கூறியிருப்போம்.

பழைய ஏற்பாட்டில் சாமுவேல் ஆகமத்தில் 'ஏலி' எனும் குரு தமது முதுமையில் கண்பார்வையற்றிருந்தும், அவரின் இரு புதல்வர்களும் அவரைக் கவனிக்கவில்லை. மாறாக தந்தையின் அன்பு வார்த்தைகளைப் புறக்கணித்து இறைவனுக்குத் தகாத செயல்களில் ஈடுபட்டனர். ஆனால் ஏலியிடத்தில் பணிபுரிந்த சாமுவேல் எனும் சிறுவனுடன்தான் கடவுள் பேசினார். சாமுவேல்தான் மூப்பு நிலையிலிருந்த ஏலி என்ற குருவைக் கவனித்து வந்தார். (1சாமு.2:22-26)

இஸ்ராயேல் மக்களை எகிப்தினின்று மீட்டு வந்த மோயீசன் - முதிர் வயதில் பல ஆண்டுகள் மக்களைப் பாலைவனத்தில் வழிநடத்தியதோடு அல்லாமல், இறையருளால் மன்னாவையும், பாறையிலிருந்து நீரையும், காடைகளையும் கிடைக்கச் செய்தார். இருப்பினும், அனைத்து நன்றியையும் மறந்து அந்த முதுபெரும் தலைவரைப் புறக்கணித்து மக்கள் முறுமுறுத்துப் பேசினர்.

தற்போது முதுமை நிலையினை அடைந்துள்ள பெற்றோர்கள் நமது முன்னேற்றத்திற்காகத் தம்மையே ஒறுத்து, தமது தேவைகளைக் குறைத்து, நமக்கு உணவு, உடை, கல்விச் செலவு, மருத்துவச் செலவு, பிறந்தநாள், முதல்நன்மை, திருமணக் கொண்டாட்டங்கள், திருவிழாக்களின்போது புத்தாடைகள் என பல விதங்களில் நம்மை மகிழ்வித்து வந்துள்ளனர். இத்தனை நன்மைத்தனங்களையும் மறந்து செயற்படுவதுபோல எம்மிற் பலர் அவர்களின் மனம் கசப்படையும் விதத்தில் நடந்துகொள்கிறோம். இந்நிலை மாறவேண்டும். முதியோரின் ஆசீர்வாதம் எமக்கு என்றென்றும் தேவை. அவர்கள் மனம் நொந்து எம்மைச் சபிக்கும் அளவிற்கு நமது செயற்பாடுகள் இருக்கக்கூடாது.

இதனால்தான் உலக நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபை கூட ஒக்டோபர் 1ந் திகதியை 'உலக சிறுவர் முதியோர் தினம்' எனப் பிரகடனப்படுத்தியுள்ளது. சிறுவர் முதியோரைக் கௌரவிக்கும் நோக்கில் அந்தந்த நாடுகளிலுள்ள அரச மற்றும் தொண்டர் நிறுவனங்கள் கலைநிகழ்வுகளையும், அன்பளிப்புக்களையும் வழங்கி அவர்களை மகிழ்விக்கின்றது.

மூத்தோரின் தயவு எமக்கு எந்தளவிற்குத் தேவையென்பதை நாம் பழைய ஏற்பாட்டின் சில உண்மை நிகழ்வுகள் ஊடாக தெரிந்துகொள்ளலாம். எடுத்துக் காட்டாக, குலமுதுவர்களுள் ஒருவரான ஈசாக் தமது முதிர் வயதில் கண்பார்வையற்றிருந்தார். அப்போது மூத்த மகன் எசாயுவைக் கூப்பிட்டு, "நானோ கிழவன், என் மரணம் எப்பொழுது வருமென்று அறிந்திலேன். ஆகையால் உன் ஆயுதங்களாகிய அம்புக் கூட்டையும், வில்லையும் வெளியே எடுத்துக்கொண்டு சென்று, வேட்டையில் அகப்பட்டதைக் கொண்டு வந்து எனக்கு விருப்பமான சமையலை நீ அறிந்துள்ளபடி சமைத்து, நான் உண்ணும்படியும், சாகுமுன் முழு அன்புடன் உன்னை ஆசீர்வதிக்கவும் அதை என்னிடம் கொண்டு வா" (தொ.நூ. 27:1-4) என்றார். அதன்படியே செய்ய எசாயு புறப்பட, தாய் ரெபேக்காளும், இளைய மகன் யாக்கோபுவும் ஏசாயாவிற்குச் சேர வேண்டிய ஆசீரை வஞ்சகமாகப் பெறுகின்றனர்.

பைபிளின் மற்றுமோர் பகுதியில், "ஞானமுள்ள மகன் தந்தையின் நற்பயிற்சியை ஏற்றுக்கொள்வான் : இறுமாப்புள்ளவனோ கண்டிக்கப்படுதலைப் பொருட்படுத்தமாட்டான்" (நீதி 13:1) எனக் கூறப்பட்டுள்ளது. இஸ்ரேயேலின் புகழ்பூத்த அரசன் தாவீது, தனது இறுதிக்காலம் நெருங்குகின்றபோது, தன் மகன் சாலமோனுக்குக் கட்டளையிட்டு, ஆசீரையும், பல அறிவுரைகளையும் கூறினார். அதனை ஏற்றுக்கொண்ட மகன் சாலமோன் தம் தந்தை தாவீதின் அரியணையில் வீற்றிருக்க அவரது ஆட்சி மிகவும் உறுதியடைந்தது. (2 அரசர் 2: 1-12) எனக் கூறப்பட்டுள்ளது.

இவற்றிலிருந்து, நாம் பல முடிவுகளுக்கு வர முடியும். "குழந்தைப் பருவமும், இளமையும் மறையக் கூடியன" (சபை உரையாளர் 11:10). முதியோரின் அந்திம காலங்களில் சில சுவையான உணவுகளைச் சாப்பிட வேண்டுமென்ற ஆசை எழலாம். அதுபோல், எதிர்காலத்தில் தமது பிள்ளைகள் சமூகத்திலுள்ளவர்களோடு எவ்வாறு நடந்துகொள்வது என எதிர்வு கூறுவர். காரணம் அவர்கள் வாழ்வின் பல கட்டங்களை அனுபவித்துத் தெளிந்திருப்பர். செயல்களின் வெளிப்பாடுகள் எப்படி அமையுமென்பதையும் அனுபவித்திருப்பர்.

எனவே 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழும் எமக்கும் முதியோர்கள் வீட்டில் இருக்கலாம். அவர்களின் சிறிய விருப்பங்களுக்கு இளந்தலைமுறையினர் இணங்கி நடக்க வேண்டும். திருக்குறள்கூட, "மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும்சொல்" என்கிறது. அதாவது, சிறந்த மகனைப் பெற தந்தை என்ன தவம் செய்தானோ! என்கிறது. முதுமையின் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் வேதனையில் நாமும் ஆறுதல் கூறிப் பங்கெடுக்க வேண்டும்.

அதுபோல முதியோரும் தமது பிள்ளைகளுக்கு வீணான தொந்தரவு செய்து நச்சரிக்காமல் இருக்கலாம். இதனால் முதியோரின் மதிப்பு மேலும் உயருமல்லவா? காரணம் முதியோர் என்போர் சமூகத்தின் விலைமதிக்க முடியாத சொத்துக்களாவர்.

# மருத்துவப் பொழிவு



## கீரைகளின் மருத்துவக் குணங்கள்

### முருங்கைக் கீரை

இது ஒரு சத்து நிறைந்த கீரை. ஆண்மையை வளர்க்கும். குருதியைத் தூய்மைப்படுத்தும். இரும்புச் சத்துக்கொண்டது. உடல் வெப்பத்தை தணிப்பது. மலச்சிக்கலைப் போக்குவது. மாதவிடாய் நேரத்தில் வலியிருந்தால் முருங்கைக் கீரைச் சாற்றில் உப்புப் போட்டு, அருந்தினால் வலி மறையும். வயிற்றுப் புண் ஏற்படாமல் தடுக்கும். பிற மருந்துகளின் பக்க விளைவுகளை அகற்ற இதன் சாறு உதவும். தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், இருதய நோய்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம். சிறுநீரைப் பெருக்குவதால் உயர் இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் பக்க விளைவுகள் ஏற்படுத்தும் மாத்திரைகளை நிதமும் எடுத்துக் கொள்வதிலிருந்து, தப்பிக்கலாம். கருவுற்றோர் வாரம் ஒருமுறை சாப்பிட்டால் நீர் இறங்கும். கை, பாத வீக்கத்தைத் தடுக்கும். சோகையைப் போக்கும்.

### புளிச்சக் கீரை

உடலுக்கும் - குடலுக்கும் வளமூட்டும். வயிற்றுப் புண்ணை ஆற்றும். வயிற்றுக் கடுப்பு உள்ளவர்கள் இக்கீரையை வெங்காயம், வெந்தயம் போட்டு மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் உடனே நிவாரணம் தெரியும். குடல் பலவீனத்தால் ஏற்படும் பேதி நிற்கும். குருதிப் பெருக்கைக் குறைக்கும்.

### சிறு கீரை

உடல் தளர்ச்சியைப் போக்கி ஊக்கமூட்டுவது. மலச்சிக்கலைப் போக்குவது. குடலின் பலத்தை அதிகரிப்பது. உடல் பித்தத்தைக் குறைப்பது.

### வெந்தயக் கீரை

முருங்கைக்கீரை போலவே இரும்புச் சத்துடையது. உடலுக்கு ஊக்கத்தை அளிப்பது. வயிற்றுப் புண்ணை ஆற்றுவதில் சிறந்தது. கண்ணுக்கு மிகவும் நல்லது. பேதி சமயத்தில் சாப்பிட்டால், பேதியைக் கட்டுப்படுத்தவல்லது.

### அகத்திக் கீரை

வெப்பத்தைத் தணிக்கும். உள்சூட்டை அகற்றுவதால், இதற்கு அகத்தி என்ற பெயர் ஏற்பட்டது. அனைத்து வகையான சத்துக்களையும் உடையது இந்தக் கீரைதான். குடல், குருதியைத் தூய்மைப்படுத்தும். குடற்புழுவைக் கொல்லும். பித்தத்தைத் தணிக்கும். தலைச்சுற்று, மயக்கம் ஆகியவற்றைப் போக்கும். உடலில் எந்த வகையில் விஷம் சேர்ந்திருந்தாலும் அதை முறிக்கும் தன்மை இதற்கு உண்டு. ஆனால் இதை அடிக்கடி சாப்பிட்டால் பேதி ஏற்படும்.

### பசளிக் கீரை - பருப்புக் கீரை

குளிர்ச்சி தருவதில் சிறந்தது. நீர் உடலினர் அடிக்கடி சாப்பிடக் கூடாது. நீரைப் பெருக்கும். பால் சுரக்கும். வயிற்றுப் புண் ஆறும். கண்ணொளி தரும்.

## மருத்துவக் குறிப்புகள்

- கடுமையான முறையில் மலச்சிக்கல் அல்லது மூலச்சூடு உள்ளவர்கள் வாரத்திற்கு இரண்டு முறை துத்திக் கீரையைச் சமைத்துச் சாப்பிட வேண்டும்.

- தொண்டை கட்டிக்கொண்டு குரல் எழும்பவில்லை என்றால், நான்கு வால் மிளகைப் பனங்கற்கண்டுடன் சேர்த்து வாயில் அடக்கிக்கொண்டு, சாற்றை விழுங்கி வந்தால் குணம் தெரியும்.

- நான்கு அல்லது ஐந்து மணத்தக்காளி இலைகளை வாயில் போட்டு சாறை விழுங்கினால் எத்தகைய வாய்ப்புண்ணும் குணமாகும்.

- அடிவயிற்றில் வலியுடன் மலம் போகுமானால் ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை ஒரு கரண்டி தயிரில் 2 மணி நேரம் ஊறவைத்து அப்படியே விழுங்கினால் போதும்.

- தொண்டை சிவந்து புண்ணாக இருந்தால், இரவு படுக்கப் போகுமுன் ஒரு துண்டு மஞ்சளை நசுக்கி, நான்கு மிளகுடன் பாலில் சேர்த்துக் கொதிக்க வைத்து அருந்த வேண்டும்.

- சிறிது துளசி இலை, கற்பூரவல்லி இலை, நசுக்கிய ஒரு சிறு துண்டு இஞ்சி ஆகியவற்றை, இரு டம்ளர் தண்ணீரில் சேர்த்து, தண்ணீர் ஒரு டம்ளராக ஏற்றும் வரை காய்ச்சி கஷாயம் தயாரிக்கவும். சிறிது பாலும் சர்க்கரையும் அந்த கஷாயத்தில் சேர்த்து மூன்று நாள் அதிகாலையில் மட்டும் தொடர்ந்து குடித்து வந்தால், எவ்வளவு கடுமையான ஜலதோஷமும் நின்றுவிடும்.

- மூக்கடைப்பு நீங்க, ஒரு விறலி மஞ்சளின் நுனியை நெருப்பில் சுட்டு வரும் புகையை மூக்கில் உறிஞ்சினால் போதும். மஞ்சள் பொடியை ஒரு பேப்பரில் சுற்றி, ஒரு முனையை நெருப்பில் காட்டி வரும் புகையைப் பிடித்தாலும் பலன் உண்டு.

- கண்களில் தூசி விழுந்து, சிவப்பாகிவிட்டால், சூடான சாதத்தில் சிறிது விளக்கெண்ணெய் விட்டு வெள்ளைத் துணியில் கட்டி கண்ணின் மேல் ஒத்தடம் கொடுக்கக் குணமாகும்.

# சமைப்போம்! சுவைப்போம்!

தொகுத்துத் தருவது

- எம். தீபா, வளனகம், மன்னார்.

## குக்கரில் சோயா கேக்



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| சோயா மா | - 2 கப் |
| வெதுவெதுப்பான நீர் | - 1 கப் |
| ஈஸ்ட் பவுடர் | - 1 தேக்கரண்டி |
| உப்பு | - 1 தேக்கரண்டி |
| சர்க்கரை | - 1 தேக்கரண்டி |
| நெய் | - 3 தேக்கரண்டி |
| துருவிய சீஸ் | - 100 கிராம் |
| தக்காளி ஜூஸ் | - 2 கப் |
| பூண்டு | - 4 |
| வெங்காயம் | - 1 (நறுக்கியது) |
| குடமிளகாய் | - 1 (சிறு துண்டுகளாக நறுக்கியது) |
| உப்பு | - 1/4 கரண்டி |
| மிளகுப் பொடி | - 2 சிட்டிகை. |

### செய்முறை

1 கப் வெதுவெதுப்பான நீரில் ஈஸ்ட் பவுடர், சோயா மா, சர்க்கரை, உப்பு போட்டு நன்கு பிசைந்து 10 நிமிடம் ஊற வைக்க வேண்டும். தக்காளி ஜூஸ், பூண்டு, வெங்காயம், மிளகுப் பொடி போட்டுக் கொதிக்க விடவும். தக்காளி ஜீஸ் கெட்டியாக வந்தவுடன் இறக்கவும். குக்கர் பாத்திரத்தில் நெய் தடவி, பிசைந்த சோயா மாவைப் போடவும். சோயா மாவின் மேல் தக்காளி கலவையை ஊற்றவும். இதன்மேல் நறுக்கிய குடமிளகாயை வைக்கவும். துருவிய சீஸை தூவி மூடிவிடவும். குக்கரின் உள்ளே மண்ணைப் போட்டு, அதன்மேல் குக்கர் பாத்திரத்தை வைத்து மூடி அடுப்பில் வைக்கவும். வெயிட் போடாமல் 30 நிமிடம் வைத்து இறக்கவும்.

## வாழ்க்கையில் வெற்றி பெற

- பலர் கோபத்தை ஓர் ஆயுதமாகக் கையாளுகின்றனர். பணிவை உங்கள் கவசமாகக் கொண்டு, பாதுகாப்பைப் பேணுங்கள்.
- ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் அவரவர் நடிப்பதற்கென்று தனித்துவமான பாகம் உண்டு என்பதை உணர்வீர்களாயின், சகிப்புத்தன்மை எளிதாக விருத்தியாகும்.
- சகிப்பதற்கு இன்னும் நிறைய உண்டு என்பதை நீங்கள் உணர்வதன் அர்த்தம் நீங்கள் சகித்துக்கொள்வதற்கு இன்னும் முயற்சிக்கின்றீர்கள் என்பதாகும்.
- நான் பெயர், புகழ்ச்சியால் கர்வம் கொண்டால் நிந்தையும், அவதூறும் என்னை அழித்துவிடும்.

# பெரியப்பா பதில்கள்





**கே: துன்பத்திற்குமேல் துன்பம் வந்து வாழ்க்கையே சலித்துப் போய்விட்டது. ஆறுதல் சொல்லுங்கள் பெரியப்பா?**

*- ஜெயதீபன், வவுனியா.*

ப: ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். வெறுமனே மூச்சுவிட்டுக் கொண்டிருப்பதற்குப் பெயர் வாழ்க்கை அல்ல. போராடிப் போராடி வாழ்வதுதான் சுவாரஷ்யமான வாழ்க்கை.

**கே: நான் கேட்பதையெல்லாம் இறைவன் தந்துவிட்டால்?**

*- யோகராணி, முல்லைத்தீவு*

ப: நீங்கள் கேட்பதையெல்லாம் இறைவன் தந்துவிட்டால் அதைவிட வாழ்க்கையில் *'சோகமான ஜோக்'* வேறு எதுவும் இருக்க முடியாது.

**கே: 'வாழ்க்கை' வித்தியாசமான வரைவிலக்கணம் சொல்லுங்கள்?**

*- மதிவதனி, மாம்புரி.*

ப: *"வாழ்க்கை என்பது உயிரோடு இருக்கும்போது திருத்தப்பட்டு, மரணத்திற்குப் பிறகு படிக்கப்படுகிற மாபெரும் கவிதை"* என்று நான் சொல்லவில்லை. வலம்புரி ஜான் என்ற இந்தியக் கிறிஸ்தவ எழுத்தாளர் சொல்கிறார். (இவர் அண்மையில்தான் காலமானார்)

**கே: பெரியப்பா, இன்றைய குழந்தைகள் சரியான புத்திசாலிகளாக இருக்கிறார்கள் இல்லையா?**

*- சூசை நாதன், சுவிஸ்.*

ப: உண்மைதான். அறிவியல் சாதனங்களின் அபார வளர்ச்சி குழந்தைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

"ஒரு யானையும் எறும்பும் 'லவ்' பண்ணிச்சாம். ரெண்டு பேர் வீட்லேயும் கடும் எதிர்ப்பு. 'யானையை எனக்கு கட்டி வைக்கலைன்னா, நான் தூக்குப் போட்டுச் செத்திருவன்' எண்டு சொல்லிச்சாம் எறும்பு. ஏன் எறும்பு அப்பிடிச் சொல்லிச்சு?" இந்தக் கேள்வியை 4ம் தரம் படிக்கும் ஒரு குட்டி என்னிடம் கேட்டது. "சிலநேரம் அது ரெண்டும் உயிருக்குயிராக 'லவ்' பண்ணியிருக்கும்" என்றேன் நான். "அய்யோ..! என்று தலையில அடிச்சுக்கிண்டே "யானையோட வாரிசுஎன் வயித்தில வளரது' என்று சொல்லிச்சாம் அந்த எறும்பு" என்றாளே அந்தச் சின்னக் குட்டிப் பெண்.

**கே: அன்பின் பெரியப்பா, 'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்பார்கள். ஒரு இருதய நோயாளி வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகுமா அல்லது வேறு என்ன ஆகும்?**

*- அன்ன ராக்கினி, முருங்கன்.*

ப: சிரிப்பு சிறந்த மருத்துவம் என்பது உண்மைதான். ஆனால் 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' தானே... இருதய நோயாளி அதிகம் சிரித்தால் சிலவேளை நோய்விட்டுப் போகாது. ஆனால் உயிர்விட்டுப் போகலாம்.

**கே: இன்றைய இளைஞர்கள் தலையைப் பாடாய்ப் படுத்துகிறார்களே... அதாவது விதவிதமாக முடியை வெட்டிக்கொண்டு திரிகிறார்களே...?**

*- ஆன்மேரி, அடம்பன்.*

ப: விதவிதமாக மூக்கு, காது, விரல்களையெல்லாம் வெட்டிக்கொண்டு திரிய முடியுமா? ஏதோ அந்த இயலாமையை வெட்டக்கூடிய முடிமீது காட்டுகிறார்கள். பாவம்..... விட்டுத் தள்ளுங்கள். வயது ஏற.. வழுக்கை வர தம்பி வழிக்கு வந்துவிடுவார்.

**கே: இன்றைய இளைய தலைமுறையினரிடையே சமய அறிவு எந்தளவுக்கு உள்ளது?**

*- நிரோசன், மன்னார்.*

ப: "இயேசு, காந்தி, புத்தர் மூன்று பேருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?" என்று ஆசிரியர் மாணவன் ஒருவனைப் பார்த்துக் கேட்டார். அவன் சொன்னான் "மூன்று பேருமே லீவு நாளில பிறந்தவங்க சேர்" என்று.

**கே: இன்று சினிமாவில் திரைப்படங்களுக்கு எப்படி எப்படியெல்லாமோ பெயர் வைக்கிறாங்க... கவனித்தீர்களா?**

*- ஜேம்ஸ், பேசாலை.*



ப: திரைப்படங்களின் பெயர்களையே வைத்து எழுதப்பட்ட ஒரு கவிதை :

*பழகுவதில் நீ 'ஜெண்டில்மேன்'*
*தேசப்பற்றில் நீ 'இந்தியன்'*
*கடலை போடுவதில் நீ*
*'முதல்வன்' எல்லாம் சரி... கடன்*
*கேட்டால் மட்டும் ஏண்டா*
*'அந்நியன்' ஆயிடுறே..!*

**கே: மனைவியை மதிக்கத் தெரியாத மடயர்களும் நம்மத்தியில் இருக்கிறார்களே...!**

*- சௌமியா, யாழ்ப்பாணம்.*

ப: திருமதி ஒரு வெகுமதி என்பதை எப்போது இவர்கள் உணரப்போகிறார்களோ தெரியவில்லை...!

**கே: இன்றைய பெண்கள் கணவருக்காக எத்தகைய தியாகத்தை செய்யத் தயாராக இருக்கிறார்கள்?**

*- மதிவதனா, ஆட்காட்டிவெளி.*

ப: என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? "பசிக்குதடி, சோறுகூட காய்ச்சாம அங்க அப்படி என்ன தொடர் நாடகம் பார்க்கிறா?" கணவன் எரிந்து விழுந்தான். மனைவி பதட்டமில்லாமல் பதில் சொன்னாள் "*கணவருக்காக*".

**கே: சுதந்திர தினம் (பெப்ரவரி 4) வருகிறது. நமது சுதந்திர தினம் பற்றி சின்னச் சிந்தனை ஒன்று?**

*- எமில், தாழ்வுபாடு.*

ப: 'வெள்ளையர்' ஆட்சி முடிந்து 'கொள்ளையர்' ஆட்சி தொடங்கிய நாள்.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 4ம் ஆண்டு நினைவு

மலர்வு 02 - 11 - 1938



உதிர்வு 01 - 02 - 2002

**திருமதி.மா.கருணை மேரி**
**(பனங்கட்டுக் கொட்டு மேற்கு, மன்னார்)**

அம்மா எங்கள் அன்புத் தெய்வமே,
உடலால் பிரிந்து நான்கு ஆண்டுகள் ஓடினும்
உள்ளப் பிரிவு என்ற வார்த்தைக்கே
இடம் இல்லை. நீங்கள் பாசம் ஊட்டி வளர்த்த
நெஞ்சங்கள் உங்கள் ஆத்மா இறை பதத்தில்
அமைதி காண வேண்டி நிற்கின்றன.

*உங்கள் பிரிவால் துயருறும்,*
*கணவன், பிள்ளைகள்,*
*பேரப்பிள்ளைகள்.*
*தகவல்: (கிறிஸ்ரி பபா)*


"ஆண்டவருக்கு அஞ்சுவோர் உயிர் வாழ்வர்.
அவர்களது நம்பிக்கை தம்மைக் காப்பாற்றும் இறைவன்மேல் உள்ளது"

## 50ம் ஆண்டு நினைவு

மலர்வு 06 - 02 - 1906

உதிர்வு 31 - 12 - 1955

**திரு. கே. அம்புரோஸ் யோசவ்**



## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 02 - 12 - 1918

உதிர்வு 08 - 11 - 2004

**திருமதி. மதிரெட்ணம் செபஸ்ரியம்மா**

பாசமாய் பக்குவமாய் பகலிரவு கருத்தாக பாரில் நாம் சிறப்புற பாவலரும் போற்ற வாழ்ந்தீர் . பரமன் வழி காட்டி நின்று பாங்குடன் பராமரித்து பன்னரும் தியாகம் ஈந்து பாசமிகு பெற்றோரே நீர்! தங்கள் 50ம், 1ம் நினைவு நாளில் எம் கண்ணீர் அஞ்சலியுடன் கூடிய செப அஞ்சலி! இறைவனில் உங்கள் ஆன்மா சாந்தி பெறுக!

*பிரிவால் துயருறும் : மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர்.*

தகவல்: திருமதி. றெஜீனா இராமலிங்கம், 40/55 கல்யாணி வீதி, கொழும்பு - 06, சிறீலங்கா.

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 06 - 11 - 1922



உதிர்வு 28 - 01 - 2004

**ஞா. செபஸ்ரியாம்பிள்ளை**
**(பனங்கட்டுக் கொட்டு மேற்கு, மன்னார்)**

அன்பின் உருவே ஐயா எம்மைவிட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றுமே பிரியாது. எம் அனைவரையும் பாசத்துடன் வளர்த்த ஐயா, உங்கள் ஆத்மா இறைவனின் பாதத்தில் இன்புற்று இருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

***உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.***

*தகவல்: கிறிஸ்ரி பபா*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 05 - 07 - 1977



உதிர்வு 12 - 02 - 2005

**செல்வன்.எம். கலிஸ்ரஸ் றோச்**
**(பள்ளிமுனை)**

நித்தம் நித்தம் நீ எங்கள் சித்தத்தில் வந்து நின்று! செப்பும் மொழி வார்த்தைகள்தான் செலவாகிப் போனதைய்யா! ஆண்டொன்று ஆகினவே அழியவில்லை உன் நினைவு. மாண்டார் மீண்டாரில்லை ஆம் மாண்டது எம் இதயமன்றோ! இதய சிறைக்குள் இருப்பவனே எம்மவரை செம்மைப்படுத்திவிட்டு நின்மதியை நாடி உயிர் நீத்தாயோ? கலிஸ்ரஸ் என்றவுடன் எங்கள் கவலைகள், கலக்கங்கள் யாதாயினும் இலேசாக விலகிவிடுமே! எத்தனை உறவு கண்டோம் அத்தனை வரவுகளும் உன் வதனத்திற்கு ஈடாகுமா? ஆண்டு பல போனாலும் ~ நாம் மாண்டு விடலானாலும் உன்முகத்தை மறவோமே!

***உன் உறவை நினைக்கும் நண்பர்கள்***

## 31ம் நாள் நினைவு

மலர்வு 02 - 01 - 1943



உதிர்வு 02 - 01 - 2006

**திருமதி. செபஸ்தியம்மா (றாணி)**
**(பள்ளங்கோட்டை, நானாட்டான்)**

அன்பின் அகல் விளக்கே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் குலவிளக்கே! மெய்வருத்தம் பாராது, எம்மை வாழ்விக்க உம் உதிரம் சிந்தி உம் வாழ்வு சிறக்க மகிழ்விக்க வாழ்ந்து, வாழ வைத்த எம் பாச அன்னையே, நாட்கள் முப்பத்தொன்று ஆனபோதும் நீங்கவில்லை உம் நினைவு, கண்களில் நீர் ததும்ப கலங்கி வேண்டுகின்றோம்.

**உம் ஆன்மா ஆண்டவரில் அமைதி பெற இறைஞ்சும்: கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.** அன்னையின் ஆன்ம சாந்திக்காக 01.02.2006 அன்று பள்ளங்கோட்டை புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## முத்துக் கடற்கரையில் .....

9ம் பக்கத் தொடர்ச்சி

முடிவுரை:

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் மிகுந்த பலனைத் தரும்" என்ற இயேசுவின் கூற்றை மறைசாட்சிகள் விசுவசித்தார்கள். ஆகவே உயிரைத் தியாகம் செய்தனர்.

நம் முன்னோர் சிந்திய இரத்தம் புனிதமானது. எனவேதான் ***மன்னாரை மறைசாட்சிகளின் தீவு*** என அழைக்கின்றோம். இந்த உண்மை நிகழ்வுகள் உலகம் இருக்கும்வரை மறைக்கப்பட முடியாத ஒன்றாகும்.

வேதசாட்சிகளாய் மரித்தவர்களின் சந்ததிகள் இந்த இரு தீவிலும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் இராமேஸ்வர தீவில் ஒரு கிராமத்திற்கு ஓலைகுடா என்ற பெயரையும், மன்னார் தீவில் ஒரு கிராமத்திற்கு ஓலைத்தொடுவா என்ற பெயரையும் சூட்டி உள்ளனர். இராமேஸ்வரம் வேர்காட்டில் புனித சவேரியாரால் 1543ல் புனித யாகப்பர் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டது. அது இன்று பல்சமயத் தலமாகத் திகழ்கிறது. அதைப்போல் மன்னார் - கட்டுக்காரன் குடியிருப்பில் புனித யாகப்பருக்கு கட்டப்பட்ட ஆலயம் புண்ணிய தலமாக திகழ்கிறது. இவை இரு தீவு கிறிஸ்தவர்களின் ஒற்றுமையின் சின்னமாகத் திகழ்கின்றன.

"திருச்சபையை வளர்த்த புனிதர்கள் - முதலாம் பாகம் இரத்த சாட்சிகள்" என்ற நூலை முன்னாள் பேராயர் (சென்னை – மயிலை) இரா. அருளப்பா எழுதியுள்ளார். இதில் ***இந்திய நாட்டு இரத்த சாட்சிகள்*** என்ற தலைப்பில் 3 கட்டுரைகள் உள்ளன. மூன்று பேரும் ஐரோப்பிய இரத்த சாட்சிகள். அதேசமயம் மன்னார் மறைசாட்சிகள் பற்றி 4 வரிகள் மட்டும் எழுதியுள்ளார்.

"இலங்கையை அடுத்துள்ள மன்னார்த் தீவில் நெடுங்காலத்திற்கு முன்பே இரத்தசாட்சிகளாக மக்கள் கொல்லப்பட்டனர் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர்கள் எண்ணிக்கை பற்றியோ விவரங்கள் பற்றியோ செய்திகள் கிடைக்கவில்லை" என எழுதுகிறார். இந்த நிலை மாறி மறைசாட்சிகள் பற்றிய ஆழமான நடுநிலையான ஆய்வை தொடர்ந்து மேற்கொள்வோம். இவர்களுக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் கிடைக்க இறைவனை மன்றாடுவோம்.

## தவறுக்காக வருந்துகின்றோம்

*ஜனவரி மாத மன்னாவில் நீத்தார் நினைவுப் பகுதியில் திருமதி லூர்த்தம்மா வின்சஸ்லோஸ் (அரியரெட்ணம் - மன்னார்) அவர்களுடைய 2ம் வருட நினைவஞ்சலிப் படத்தின் கீழ் தவறுதலாக 'கணவர் ஆறுமுகம் என்றும், தகவல் - மகன் வடிவேல்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தவறுக்காக மன்னா மனம் வருந்துகின்றது. - (பதிப்பாசிரியர்)*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 46

## நீதித்தலைவர்கள் - 1 - 10

உங்கள் விடைகளை 10. 03. 2006க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | * | | | | 04 | |
| | | | | | 05 | | | | * | |
| | | | * | | | 06 | | | | |
| | | | | | | | | 07 | * | |
| * | | | | | | 08 | | | | |
| | | 09 | | | | | | | 10 | 11 |
| | | 12 | | | | | 13 | | | |
| | | | 14 | | | 15 | | 16 | | |
| | 17 | | | | 18 | | | | | |
| 19 | | | | | | 20 | 21 | * | * | |

### இடமிருந்து வலம்

1. நான் உங்களை அடிமைத்தனத்தின் ................ வெளியே அழைத்து வந்தேன்.
3. மூன்று பிரிவினரும் எக்காளம் ....................
5. பதினைந்தாயிரம் பேர் கொண்ட ...................... அவர்களோடு இருந்தது.
6. அவர்கள் மலைப் .............. உரிமையாக்கிக் கொண்டனர்.
8. ஏனெனில் துன்புறுத்தப்பட்டு ............................ ப்பட்ட அவர்களின் அழுகுரலைக் கேட்டு ஆண்டவர் அவர்கள்மீது இரக்கம்கொண்டார்.
9. அவர் அங்கு வந்து எப்ராயிம் மலையில் .........................ம் ஊதினார்.
12. பால் வைக்கும் தோற்பையைத் .................... அவர் அவனுக்குக் குடிக்கக் கொடுத்தார்.
14. அப்பெயர் இந்நாள் வரை ......................... வருகிறது.
18. பின்னர் ஆண்டவரின் தூதர் ........................ உள்ள ஒரு கருவாலி மரத்தடியில் வந்து அமர்ந்தார்.
19. அவர் கெரிசிம் மலைக்கு ஏறிச் சென்று அதன் உச்சியில் நின்றுகொண்டு உரத்த குரலில் ............................க் கூறியது.

### மேலிருந்து கீழ்

1. என் தந்தை ......................... நான்தான் சிறியவன்.
2. மக்கள் ........................... ஏராளமாக உள்ளனர்.
3. ஆண்டவரைக் கைவிட்டனர். அவருக்கு ...................... புரியவில்லை.
8. நகரின் நடுவே உறுதியான மலைக்கோட்டை .................... இருந்தது.
9. இஸ்ராயேலருக்கு .................... ஆண்டவரின் சினம் மூண்டது.
10. .................. பயணம் செய்வோரே பாடி மகிழுங்கள்.
11. ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு ...........னர் ஒருவரை அனுப்பினார்.
13. ஒற்றர்கள் ஓர் ........... நகரிலிருந்து வெளியே வருவதைக் கண்டனர்.

### வலமிருந்து இடம்

2. கம்பளி மட்டும் உலர்ந்திருக்க, தரைமீதெங்கும் பனி இறங்கி .................
4. மிதியானியர் இஸ்ராயேல் மக்கள் முன்னிலையில் ..................... ப்பட்டனர். (3ம், 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
5. உம் பார்வையில் நல்லதெனப் ....................... எங்களுக்குச் செய்யும்.
6. ...................... கள் சுற்றுப் பாதைகளில் சென்றனர்.
7. மரங்கள் தங்களுக்கு ஓர் அரசனைத் ........................ செய்யப் புறப்பட்டன.
8. ஆண்டவர் இந்த வேற்றினத்தாரை யோசுவாவிடம் ......................... க்காமலும், விரைவில் விரட்டாமலும் விட்டுவைத்தார்.
9. ஆண்டவர் அவர்களுக்கு விடுதலை அளிக்க ஒருவரை ............ ச் செய்தார்.
10. இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரின் புகழ் ........................
18. நகரின் பெயரை ........................... என்று அழைத்தனர்.
20. யூதாவின் மக்கள் ஜெருசலேமுக்கு எதிராகப்.................... அதைக் கைப்பற்றினர். (3ம், 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)

### கீழிருந்து மேல்

8. நான் அதை உன் கையில் ...................... விட்டேன்.
9. உங்களுடன் செய்துகொண்ட எனது உடன்படிக்கையை .................... முறிக்கமாட்டேன்.
11. அவர்களது .................. அபிமெலக்கின் பக்கம் திரும்பியது.
15. .............. பிரிவினரும் எக்காளம் ஊதினர். (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
16. மிதியானியரின் ஆட்சியில் இஸ்ரயேலர் .................. ப்படுத்தப்பட்டனர். ( 2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன).
17. இஸ்ராயேலின் சிற்றூர்கள் ........................து கிடந்தன.
19. இஸ்ரயேலர் ஆண்டவரை நோக்கிக் .................... ட்டனர்.
21. அவர் ............... என்ற தம் வேலையாளுடன் பாளையத்தில் இருந்த போர்வீரர்களின் எல்லைக் காவலுக்குச் சென்றார்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 45ற்கான முடிவுகளை 2006ம் ஆண்டு மார்ச் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

# விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 44ல்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
எஸ். அருண், எமில் நகர், மன்னார்.

*இரண்டாம் பரிசு.*
பி. வெனில், தோட்டவெளி, மன்னார்.

*மூன்றாம் பரிசு*
எஸ். தங்கமதி பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 83 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 74 பேர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 44ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. ஜெ. எட்வின் சுரேஸ், சுவிஸ்.
2. நிரோஜன், பெரியமுறிப்பு, முருங்கன்.
3. பீ. கஸ்தூரி, இல. 25/1, ராணிமில் வீதி, இறம்பைக்குளம்.
4. தி. கலைவாணி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
5. அ. அபிஷேக், அடம்பொன்தாழ்வு.
6. எம். அதிஸ்ரெலா, பெரிய பண்டிவிரிச்சான், இல-109, மடு.
7. ஜெ. கிளாறன்ஸ், மானிப்பாய், யாழ்ப்பாணம்.
8. எம். யூலி வலன்ரீனா, காத்தான்குளம், வட்டக்கண்டல்.
9. யே. பிரசாந்தன், சென். மேரிஸ் வீதி, அடம்பன்.
10. மு. தனமோகன், நெடுங்கண்டல், அடம்பன்.
11. எட்வின் மரியம் யாழினி, சுவிஸ்.
12. எஸ்.நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்டநீதி மன்று, மன்னார்.
13. ரி.ஜெயசீலன் (பாபு), ஸ்ரேசன், தலைமன்னார்.
14. நீ. மடுச்செல்வம், பரிகாரிகண்டல், முருங்கன்.
15. ம. அருனோசியா, பாலைக்குளி, அடம்பன்.
16. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
17. ஜோ.ம.இ.மரியரட்ணம், இல-09/32, பூங்காவீதி, வவுனியா.
18. அ. றூபா றெவல், அந்தோனியார் புரம், முள்ளிக்குளம்.
19. ஏ. நிறோஜன் டயஸ், முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி.
20. திருமதி. ஜோ. ம. மரியரட்ணம்,இல.09/32பூங்காவீதி, வவு.
21. எம். செல்வநாயகம், தி.கு.கன்னியர்மடம், ஊர்காவற்துறை.
22. லா.கிறேஸ் ஜொஸ்பின், யூனிட் 5 (29), வாரீக்குட்டியூர்.
23. இ. செல்வ லக்ஷன், அடம்பொன்தாழ்வு, வட்டக்கண்டல்.
24. லீ.டெய்சி, புனித செபஸ்ரியார் கோவில்வீதி, பெற்றா, மன்.
25. இ. குயின்சிஸ் ரெலா, அடம்பொன்தாழ்வு.
26. திருமதி.யேசுதாசன் குரூஸ்,100வீட்டுத்திட்டம், இல.32, மன்.
27. பீ.ஒகஸ்ரினா,இல-25/1,ராணிமில்வீதி, இறம்பைக்குளம்,வவு.
28. பி.க.மெடோனா, திருக்குடும்ப கன்னியர்மடம், பாஷையூர்.
29. திருமதி.தாமோதரம்பிள்ளை,ராணிஸ்ரான்,த.கந்தோர்வீதி,மன்.
30. பா. நிஸாந்தி, சுற்றுலா மண்டபம், மடு.
31. எம். நிலானி குரூஸ், பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
32. ஆ. செல்லக்குமார், வேதசாட்சி கோயிலடி, தோட்டவெளி.
33. யோ.அருள்தாஸ், ஆயுள்வேத மருந்தகம்,பூங்காவீதி, வவு.
34. ம. சாள்ஸ் அன்ரனி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
35. எஸ். எஸ். காஜனா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
36. எம். பென்யமின், தரம் - 6, மன். கருங்கண்டல் ம.வி.
37. எஸ். வேஜினி றோச், தரம் - 11, பள்ளிமுனை, மன்னார்.
38. சூ. அருளப்பு, பெரியமுறிப்பு, முருங்கன்.
39. திருமதி. ஆகத்தா குரூஸ், சின்னக்கடை, மன்னார்.
40. எஸ்.யூலின் சியாணி, தரம்-9,புனி.சவே.பெண்.கல்லூரி, மன்.
41. அ. இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
42. தி. யசோத குமாரி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
43. கிருபா ஆட்ஸ், முருங்கன் வீதி, நானாட்டான்.
44. றோகினி அருளப்பு, பெரியமுறிப்பு, குஞ்சுக்குளம்.
45. திருமதி. பி.அன்ரன் பொன்ராஜ் ஜெயந்தினி, சுவிசர்லாண்ட்.
46. பி. யூடிற் மார்த்தாள் டலிமா, 3ம் வட்டாரம், வங்காலை.
47. அமிர்தநாதன் டொறிஸ், வண்ணாகுளம், ஆண்டாங்குளம்.
48. திருமதி. றோஸ் பரிதா எமிலியானுஸ் குரூஸ், லண்டன்.
49. ம. சாலினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
50. இ. டொமின்றில்டா, உப்புக்குளம், மன்னார்.

# நீங்காத நினைவுகள்



மலர்வு 22 - 09 - 1976

**செல்வி அ. றொபின்ரா லெம்பேட் (தலைமன்னார் கிராமம்)**

உதிர்வு 15 - 01 - 2006

அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும். சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்தாக வேண்டும். சாவு முற்றிலும் ஒழிந்தது.
வெற்றி கிடைத்தது, சாவே உன் வெற்றி எங்கே சாவே உன் கொடுக்கு எங்கே? (1 கொரி.15: 53~ 55)

அப்பா அம்மா கிளி என்றழைக்க,
அண்ணா அக்கா தங்கை என்றழைக்க,
தம்பி என்றொருவர் அக்கா என்றழைக்க,
பெரியப்பா பெரியம்மா மகளே என்றழைக்க
மாமா மாமி மருமகள் என்றழைக்க,
மருமகள் என்றொருவள் மாமி என்றழைக்க,
மைத்துனர் மைத்துனி மச்சாள் என்றழைக்க,
சுற்றம் சூழ்வோர் றொபின்ரா என்றழைக்க,
கூட்டுக் குடும்பத்தின் குலவிளக்கானாயம்மா
பாசத்திலும் பண்பிலும் வளர்ந்தாயம்மா
பார்வையில் அனைவரையும் கவர்ந்தாயம்மா,
கவலையில் வந்தோரைத் தேற்றினாயம்மா,
நாடியோருக் காலோசனை அளித்தாயம்மா,
மறைபரப்புப் பணியும் புரிந்தாயம்மா,
சிறகசைக்கும் குயிலும் ஆனாயம்மா,
கல்விக்கூடத்தில் சான்று பகர்ந்தாயம்மா,
இளைஞர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளரம்மா,
அன்னை திரேசா மன்றப் பணியாளியம்மா,
விளையாட்டுக் கழக வீராங்கனையம்மா,
மீனவர் சங்க உதவிக் கரமம்மா,
உன் சிரிப்பிலே நாம் எல்லாம் மகிழ்ந்தோமம்மா,
உன் இதயம் யேசு வாழ்ந்த ஆலயமம்மா,
இத்தனையிலும் அங்கத்துவம் வகித்தாயம்மா,
அனைவரையும் கொள்ளை கொண்டாயம்மா,



நீ நோய் சுமந்த வேளையிலும்
உன் சோகமுகம் காணோமம்மா
அம்மா உனக்குக் கடமை செய்ய,
அக்கா உன்னருகில் கண்விழிக்க
அண்ணா உன்னை எங்கும் கூட்டிச் செல்ல
தம்பி உனக்கு உதவிக்கரம் நீட்ட
உற்றார் உறவினர் பணி பல புரிய
குருக்கள் துறவியர் ஆறுதல் சொல்ல
இருந்த போதிலும் அத்தனையையும் விட்டுவிட்டு
நிலையற்ற வாழ்வென்றெண்ணி
நிலை வாழ்வை நோக்கிப் பறந்தாயோ?
நினையாத நேரத்தில் காலன் உன்னைக் கவர்ந்தானம்மா
உன் கால நேரமெல்லாம் இறைவன் கரத்திலம்மா
அவர் சித்தம் நிறைவு செய்யக் காத்திருந்தாயம்மா
அவர் குரல் கேட்டவுடன் ஆம் என்றாய்
என் ஆவி உமக்குச் சொந்தமென உறுதி மொழிந்தாய்
எம் செல்வமே றொபின்ரா அம்மா
இனி எப்போ உம்மைக் காண்போம்
சொந்த பந்தம், நண்பர், ஊர், உறவு கலங்குதேயம்மா
ஆண்டவன் த்ன்னருகில் அமர்ந்திருக்க
அழைத்திட்டார் என்றுதான் ஆறுதல் அடைகின்றோம்.
உன் ஆன்மா சாந்தி பெற ஓயாது இறைஞ்சுகின்றோம்.
பரலோக தந்தையிடம் எம்மவர்க்காய் பரிந்துரைப்பாய்.

## நன்றி!

எம் குடும்பக் குலவிளக்காம் றொபின்ராவின் மறைவையொட்டி இறுதிச் சடங்கில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அருட்தந்தையர், அருட்சகோதரர்கள், அருட் சகோதரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள், தொலைபேசி மூலம், கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தோர், எமது துயரில் எல்லா வகையிலும் உதவிய அன்பு நெஞ்சங்கள், எம் பங்குத்தந்தை, பங்கு மக்கள் அனைவருக்கும் எம் இதய நன்றியைத் தெரிவித்து நிற்கின்றோம்.

*இவரின் பிரிவால் துயருற்று வருந்தும்*
*அன்பு அம்மா,*
*அக்கா, அண்ணா,*
*தம்பி, மைத்துனி,*
*மருமகள், உற்றார்,*
*உறவினர், நண்பர்கள்,*
*அருட்சகோதரி*
*லோறன்சியா (தி.கு.க.)*

## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's St.
Mannar,
Sri Lanka.



பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார் பேராலய வீதி,
மன்னார்

தொலைபேசி இல. 023 - 2232377

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**
உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

மன்னா

# 2006ம் ஆண்டு அகில உலக ரீதியில்

# புனித சவேரியார் ஆண்டாகப் பிரகடனம்



இவ்வருடம் மூன்று முக்கிய நிகழ்வுகளைக் கொண்டாடும் இயேசு சபையினரின் யூபிலி ஆண்டு கடந்த மார்கழித் திங்கள் 3ம் நாள் ஆரம்பமாகியது. புனித பிரான்சிஸ் சவேரியாரின் பிறப்பின் 5ம் நூற்றாண்டு (06 ஏப்ரல்,1506), முத்திப் பேறுபெற்ற பத்றோ வெப்றோவினது பிறப்பின் 5ம் நூற்றாண்டு (1506), புனித லொயலா இன்னாசியார் இறைவனடி சேர்ந்த 450ம் வருட நிறைவு (1556) ஆகியவையே அந்த மூன்று நிகழ்வுகளுமாகும்.

யூபிலி ஆண்டு அகில ரீதியில் கொண்டாடப்படும். 127 நாடுகளில் இயேசு சபையினரால் செபங்கள், வழிபாடுகள், யாத்திரைகள், மாநாடுகள், ஒன்றுகூடல்கள்,. மேடைநாடகங்கள், பொருட்காட்சிகள், விளையாட்டு நிகழ்வுகள், புத்தக வெளியீடுகள், சிற்றேடுகள் போன்றவை நடாத்தப்படும்.

உரோமாபுரியிலுள்ள தலைமையகத்தில் இரண்டு விவாத மாநாடுகள் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. ஒன்று லொயலாவில் 'இன்னாசியார் பயிற்சிகள்' (ஆவணி 20-26) பற்றியது. அடுத்தது, உரோமாபுரியில் சபையின் ஏற்பாட்டொழுங்குகள் (ஐப்பசி 15-21) பற்றியது. மறைப்பணியின் பாதுகாவலரான புனித சவேரியாரை மகிமைப்படுத்தும் முகமாக 2006 ஆம் ஆண்டு "சவேரியார் ஆண்டு" என அறிவிக்கப்பட்டுள்ளது.

## குருவானவர் சுட்டுக்கொலை

கின்னியா தலைநகர் கைரோவில் கேரள சலேசிய சபைக் குரு ஒருவர் கடந்த கிறிஸ்மஸ் இரவில் அடையாளம் தெரியாத நபரினால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் கேரளாவில் தாமரைச்சேரி மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர். 1988ல் சலேசிய சபையில் குருவாக இணைந்து கொண்ட இவர், 1997ல் கிழக்கு ஆபிரிக்காவில் தம் பணியினைத் தொடர்ந்தார். 2001ல் உரோமைக்குச் சென்று உயர் கல்வியைத் தொடர்ந்தார். மீண்டும் ஆபிரிக்கா சென்றார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கென்னிய தலைநகர் நைரோபியில் மறைபணியாற்றினார். பல்வேறு துறவற சபைகளுக்கும், இளைஞர்களுக்கும் நற்பணியாற்றி வந்தார். இவர் கிறிஸ்மஸ் திருப்பலியை முடித்துவிட்டு திரும்பும்போது சுட்டுக் கொல்லப்பட்டார். 46 வயது நிரம்பிய இக்குரு ஜேர்மன், தன்சானியா, ஆபிரிக்கா, போலந்து, ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளிலும் பணியாற்றினார்.

## யாழ்ப்பாணத்தில் 'கலைக்கோட்டம்' திறப்பு விழா



திருமறைக் கலாமன்றம் யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகளுடனும், தொழில் நுட்பங்களுடன் உள்ளடங்கிய ஒரு புதிய கட்டடத்தை 'கலைக்கோட்டம்' என்ற பெயரில் நிறுவியுள்ளது. இக் கலைக்கோட்டக் கட்டடம் தைப்பொங்கல் நாளன்று, (14.01.2006) யாழ் மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வர் S. J. செல்வராஜா அடிகளாரால் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. திருமறைக்கலாமன்ற இயக்குனர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளாரின் அரும்முயற்சியில் இக்கட்டிடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த உலக இளைஞர் தின மாநாடு சிட்னியில

கடந்த ஆகஸ்ட் மாதம் ஜேர்மனியில் நடைபெற்ற உலக இளைஞர் தினமாநாட்டின் நிறைவுத் திருப்பலியில் "அடுத்த உலக இளைஞர் தின மாநாடு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்" என்று திருத்தந்தை கூறினார். கர்தினால் ஜார்ஜ்பெல் தலைமையில் 25000 இளைஞர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து ஜேர்மனி இளைஞர் மாநாட்டில் பங்குபற்றினர். *2008ஆம் ஆண்டு உலக இளைஞர் தினம்* என்ற அறிவிப்புப் பலகையை திறந்து வைத்த அவுஸ்திரேலிய ஆயர்கள் "திருத்தந்தையை 2008ஆம் ஆண்டு எம் நாட்டில் வரவேற்க ஆவலாக உள்ளோம்" என்று கூறினார்கள். மேலும் சிட்னி பேராயர் கர்தினால் ஜார்ஜ் பெல் கூறுகையில் 2008ஆம் ஆண்டு உலக இளைஞர் தினம் அவுஸ்திரேலியாவில் நடைபெற ஒப்புதலும், ஒத்துழைப்பும் நல்குவதாக ஒப்புக்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அரசுக்கும் நன்றி" என்று கூறினார்.

## அன்ரனிப்பிள்ளை அடிகளாரின் தந்தையார் இறைபதம்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அன்ரனிப்பிள்ளை அடிகளாரின் தந்தையார் மடுத்தீன் அந்தோனி பர்ணாந்து அவர்கள் கடந்த 15.01.2006 அன்று காலமானார். தமது மகனை யாழ் மறைமாவட்டத்திற்கு அர்ப்பணித்த இந்த அன்புத் தந்தையாரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற மன்னா அன்பு நெஞ்சங்களின் செபங்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்ரனிப்பிள்ளை அடிகளாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

## கொன்சன்ரைன் அடிகளாரின் தந்தையார் இறைபதம்

கிளறேசியன் துறவற சபையைச் சேர்ந்த றெக்ஸ் கொன்சன்ரைன் அடிகளாரின் தந்தையார் செபதேயு சிங்கராயர் அவர்கள் 20.12.2005 அன்று காலமானார். தமது மகனை கிளறேசியன் துறவற சபைக்கு அர்ப்பணித்த இந்த அன்புத் தந்தையாரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற மன்னா அன்பு நெஞ்சங்களின் செபங்களைக் காணிக்கையாக்குகின்றோம். கொன்சன்ரைன் அடிகளாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து நிற்கின்றோம்.

## பாலையூற்று லூர்து அன்னை கெபியின்

## நூற்றாண்டு விழா

திருகோணமலையில் முதலாவதும் பழமையானதுமான யாத்திரைத்தலமாக விளங்கும் பாலையூற்று லூர்து அன்னை கெபி இவ்வாண்டு நூறு வருடங்களை நிறைவுசெய்து நூற்றாண்டு விழாக் காண்கிறது. நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்வுகள் எதிர்வரும் மே மாதம் 28ம் திகதி நடைபெறும் என பாலையூற்றின் பங்குத்தந்தை ஒல்பன் ராஜசிங்கம் (அ.ம.தி) அடிகளார் மன்னாவுக்குத் தெரிவித்தார்.

## அரசியல் துறையினருடன் ஆயர்குழு சந்திப்பு

கிளிநொச்சியில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் இலங்கை மறைமாவட்டங்களின் ஆயர்கள் கடந்த 30.12.2005 அன்று பேச்சு நடத்தினர். இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைத் தணிப்பதற்கு உதவ வேண்டுமென்று ஆயர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர். இச்சந்திப்பில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை, கண்டி ஆயர் மேதகு வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை, கொழும்பு கிறிஸ்தவ ஆயர் மேதகு டுலிப் டி சிக்கர ஆண்டகை, குருநாகல் கிறிஸ்தவ ஆயர் மேதகு குமாரலங்க சிங்க ஆண்டகை உட்பட கிறிஸ்தவ மதகுருமார்களும் இதில் கலந்துகொண்டனர்.

## மதச் சுதந்திரம் ! கொடுமையான எட்டு நாடுகள்

எட்டு நாடுகளில் மத துஷ்பிரயோகம் நடைபெறுகிறது என்று புதிய அறிக்கை ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது. அந்த நாடுகளாவன: பர்மா, ஈரான், வடகொரியா, சீனா, சூடான், சவூதி அரேபியா, வியட்னாம் மற்றும் எரித்திரியா. இந்த அறிக்கையைக் கண்ணுற்ற ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் "மதசுதந்திரம் ஜனநாயகத்தின் (மக்களாட்சியின்) மூலைக்கல்" என்று வர்ணித்துள்ளது.

இறுதியாகக் கூறப்பட்டுள்ள வியட்நாம், எரித்திரியா ஆகிய இரண்டு நாடுகளும் இத்தகைய பட்டியலில் வழமையாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் தற்பொழுது வத்திக்கானுடன் உறவை வளர்த்துக் கொண்டுள்ள வியட்னாம், மனித உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கும் பௌத்த மதத்திற்கும், மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் விருப்பத்திற்கேற்ப ஊழியம் புரியச் சந்தேகப்படும் புரட்டஸ்தாந்து மதத்தினருக்கும் எதிரான எண்ணக் கருவைக் கொண்டுள்ளனர். எரித்திரியா மதசம்பந்தமான குற்றச் செயல்களுக்காக மூன்று கத்தோலிக்கரைச் சிறையில் அடைத்து வைத்துள்ளது.

சீனாவின் நம்பிக்கை பற்றி கூறியுள்ள அறிக்கையில் வரும் ஒரு சிறிய குறிப்பின்படி, சீனக் கத்தோலிக்கர் இன்னும் துன்பங்களுக்கு முகம் கொடுத்தாலும், நிலைமையில் முன்னேற்றம் காணப்படுகின்றது. "நாம் ஒரு கோணத்திற்குத் திரும்ப முடியும் என்று நான் நம்புகிறேன். சிறைக் கைதிகளை அவர்கள் விடுவிக்கும்போது சில சமயம் அவர்களை உற்சாகப்படுத்தக் கூடிய காரணங்கள் உண்டு. ஆனால் அவர்கள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி மற்றுமொரு குழுவைச் சிறைப்பிடிக்கலாம்." என்று ஐக்கிய அமெரிக்க அரசாங்க இலாகா தூதுவர் ஜோண் ஹன்வேர்ட் பரந்த அளவிலான மதசுதந்திரம் என்பதில் கூறியுள்ளார்.

கட்டாரின் புதிய அரசியல் சட்டத்தில் தனிப்பட்டவர்களின் மதவழிபாட்டிற்கான உரிமையை எவ்வாறு அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என்பதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது அனைவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. அமைப்புக்களும், ஒன்றுகூடல்களும் ஜனநாயக மாற்றங்களைக் கொண்டு வருவதில் முன்னேற்றம் கண்டுள்ளன. ஒரு முஸ்லிம் நாடான கட்டார் 7ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆலயத்திற்கு முன்னேறிச் செல்வதற்கான அடையாளம் காட்டியுள்ளது. டோகாரின் தலைநகரில் ஒரு அங்கிலிக்கன் சபை ஆலயத்திற்கு அடித்தளமிடப்பட்டுள்ளது.

## 2946 மத வழிபாட்டுத் தலங்கள் அழிப்பு

### புனர்நிர்மாணத்துக்கு ரூபா 2538 மில்லியன் தேவை

வடக்கு, கிழக்கு போர் காரணமாகவும், கடல்கோள் அனர்த்தம் காரணமாகவும் நாட்டில் 2946 மதவழிபாட்டுத் தலங்கள் அழிந்தும், சேதமுற்றும் உள்ளன. இத்தகவலை மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாத்பதியுதீன் அமைச்சரவையில் தெரிவித்துள்ளார். இவற்றை மீளக் கட்டியெழுப்ப 2538 மில்லியன் ரூபா தேவையென மதிப்பீட்டறிக்கையை அவர் சமர்ப்பித்திருப்பதாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் அனுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்தார். அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த அறிக்கை ஆராயப்பட்டு வருவதாகவும், அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே முடிவு எடுக்கப்படும் எனவும் அமைச்சர் யாப்பா கூறினார்.

## நீங்காத் நினைவுகள்

### 90ம் நாள் நினைவு

மலர்வு 10 - 10 - 1934



உதிர்வு 08 - 11 - 2005

**திருமதி. பேதுரு செபமணி அருளம்மா**


**(முருங்கன் பிட்டி, முருங்கன்)**

அன்புக்கு ஓர் அன்னையாக, பாசத்தின் கவசமாக
நேசத்தின் உறைவிடமாக இல்லத்தின்
குல விளக்காக அரவணைப்பின் சிறகாக
இரக்கத்தின் இலக்கணமாக எங்களை
காலமெல்லாம் காத்து வழிநடத்திய
அன்பான தாயே உங்கள் பிரிவால்
இதயம் கசிந்து உருகுகின்றோம் அம்மா.

உங்கள் பிரிவால் துயருறும்
*கணவன்,பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.*

### 19ம் ஆண்டு நினைவு

மலர்வு 16 - 06 - 1963



உதிர்வு 04 - 02 - 1987

**திரு. பேதுரு அன்ரன் சேவியர்**

**(முருங்கன்பிட்டி, முருங்கன்)**

அன்பின் ஒளிவிளக்கே, பாசத்தின் சிகரமே
ஆண்டுகள் பத்தொன்பது ஆனதுவே
ஆறவில்லை எம் துயரம். ஆயிரம்
உறவுகள் இருந்தென்ன உலக நியதி
இது என்றாலும் பிரிவு தாங்க
முடியவில்லை. நீ சிந்திய புன்னகை
முத்துக்களை கண்ணீர் பூக்களாக்கி
காணிக்கையாகத் தருகின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும், அன்பு அப்பா, சகோதரர்கள், மச்சான்மார், மச்சாள்மார், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.*

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.